# மறை ஞானப்பேழை



சத்தியம் வந்துவிட்டது !

அசத்தியம் அழிந்து விட்டது !

நிச்சயமாக அசத்தியம் அழிந்தே தீரும் !

**April 2025 ஏப்ரல் 2025**

Retail Selling Price 25

Page 1

Volume - 17, Issue - 2


# வெளிவந்துவிட்டது!

நாம் மிக ஆவலோடு எதிர்பார்த்திருந்த

**அல் – இக்துத் தரார் ஃபீ ஷரஹிஸ்**

# ஸஹீஹி லில் இமாமில் புகாரீ

(முதல் பாகம்)



சங்கைமிகு குத்புல் ஃபரீத்,

ஜமாலிய்யா அஸ்ஸையித்

யாஸீன் மௌலானா (ரலி)

அவர்கள் அறபு மொழியில் ஆக்கியது.

**விலை ரூ. 1000/ – மட்டும் – (கொரியர் செலவு தனி.)**

**தொடர்புக்கு : 99437 86269 - 99445 76165**

## மறைஞானப் பேழை சந்தா விபரம்

| | |
|---|---|
| உள்நாடு ஓராண்டுச் சந்தா | ரூ. 300/- |
| வெளிநாடு ஓராண்டுச் சந்தா | ரூ. 3000 /- |

**சந்தாத் தொகை அனுப்ப, முகவரி மாற்றம், மற்ற விபரங்கள் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய கை பேசி எண்கள்.**

**Cell : 9597912410 - 9944576165**

## விளம்பரக்கட்டணம்

| | ரூபாய் |
|---|---|
| முழுப்பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 1000 |
| முழுப்பக்கம் (ஆண்டு முழுவதும்) | 10000 |
| அரைப்பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 600 |
| அரைப்பக்கம் (ஆண்டு முழுவதும்) | 5000 |
| கால் பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 500 |
| கால் பக்கம் (ஆண்டு முழுவதும்) | 4000 |



# Be in all and get the power of God

## ஆன்மிக மாத இதழ்


**வெளியிடுவோர்**
அவ்னிய்யா உலக அமைதி அறக்கட்டளை
பாகிரா காம்ப்ளக்ஸ்74, பழனிரோடு.
திண்டுக்கல் - 624 001.

**நிறுவனர்**
குத்புஸ்ஸமான், ஷம்ஸுல் வுஜுத், ஜமாலிய்யா
அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா
நாயகம் அவர்கள்.

**ஆசிரியர்**
கலீஃபா. S. ஹுஸைன் முஹம்மது மன்பயீ

**சிறப்பாசிரியர்**
கலீஃபா. A.N.M. லியாகத் அலி, B.Sc., B.L.,

**வெளியீட்டாளர்**
J. முஹம்மது ரஹ்மத்துல்லாஹ், B.A.,B.Com.,

**அச்சிட்டோர்**
R. விஜயலட்சுமி
ஸ்ரீ அக்னி அம்மன் அச்சகம்,
52, பழனிரோடு, திண்டுக்கல்.

**கணினி அச்சுக் கோவை**
ரிப்தா கம்ப்யூட்டர்ஸ் செல்: 99445 76165



செய்திகள் அனுப்பவேண்டிய முகவரி

**S. ஹுஸைன் முஹம்மது மன்பயீ**
**(கலீல் கம்ப்யூட்டர் கல்வி மையம்)**
13. எம்.ஆர்.ஆர். நகர்
திண்டுக்கல் - 624 002.
CELL : 99445 76165
Website:www.emsabai.org
email: aalimpulavar07@ gmail.com
email: j.mdrahmathulla@yahoo.com
https:www.emsmedia.net
https:www.awniyyabookstore.com
https:www.yaseenrali.com


# மறை ஞானப் பேழை


**ரமளான்- ஷவ்வால்**

**ஏப்ரல் 2025**
**Volume - 17 Issue 2**


## பேழைக்குள்......


ஜமாலிய்யா தோட்டத்தில் கொய்த மலர்.
திருமறைப் பக்கம்.
அமுத மொழிகள்.
உமர் (ரலி) புராணம் - நயம்.
நாம் யார் தெரியுமா?
ஹகீகத்தில் மிகுதியான ஸலாத்தும் ஸலாமும்.
நல்லதோர் சமுதாயம் உண்டு பண்ணுவோம்.
லா இலாஹ்.
விண்வெளியில் குர்ஆன் படித்தேன்.
மூத்தோர் உதிர்த்த முத்துகள்.
குர்ஆனில் பொதுநோக்கு.
கப்ரு மீது காழ்ப்புணர்ச்சி.
முதியோர் நலம்.
மற்றும் செய்திகள்!

# எல்லோரும் கொண்டாடுவோம்!

சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் ...ஆம் உதயதினம் .....அன்று மலர்கிறது. அவர்கள் பிறந்த அன்று அவர்களிலே சங்கைமிகு யாஸீன் நாயகம் (ரலி) தங்களைக் கண்டார்கள். தங்களின் அரிய ஞான அறிவை தமக்குள் சுவீகரிக்கப் பிள்ளை வந்துவிட்டது எனப் பூரித்தார்கள். ஹள்ரத் அபூதாலிப் அவர்கள் “அல்ஹம்து லில்லாஹில்லதீ அஃதானீ ”எனப்பாடியது போல கவிதையும் பாடினார்கள்

பாமரர்களாகிய நாமெல்லாம் நமக்குப் பிள்ளை பிறந்ததும் அவன் நம் இறுதிக்காலத்தில் நம்மைக் காப்பான், நம் சொத்துகளைப் பாதுகாப்பான், நமக்கு உதவியாயிருப்பான் என எண்ணுவோம்.

ஆனால், நபிமார்கள், குத்புமார்கள், வலிமார்கள், ஸாலிஹீன்கள், இவர்களெல்லாம் என் பிள்ளை நன்கு மார்க்க ஞானம் பெறுவார், இஸ்லாத்திற்காக உழைப்பார் என மகிழ்ந்து குழந்தைகளின் தீன்வாழ்வுக்கு துஆ செய்வார்கள்.

இன்னும் சொல்லப் போனால், இறைவனிடம் குழந்தையைக் கேட்கும்போதே ஸாலிஹான குழந்தையைக் கொடு, அது தானும் சுவனத்துக்கு உரியதாக வளர்ந்து, பிறரையும் சுவன வாசிகளாக மாற்ற உழைக்கும் குழந்தையாகக் கொடு என்றே கேட்பார்கள்.

தங்களின் உயர்ந்த லட்சியத்தைப் பூர்த்தி செய்யவே பிள்ளைப் பேறைக் கேட்பார்கள்.

பெருமானாரின் பாட்டனார், ஹள்ரத் அப்துல் முத்தலிப் அவர்கள், மக்காவில் மணலுக்கடியில் மறைந்து போன ஜம் ஜம் கிணற்றைத் தோண்ட– அதனால் உலகம் மீண்டும் பயன் பெற– ஹள்ரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் அற்புதத்தை உலகம் அறிந்து கொள்ள – திடகாத்திரமான எண்ணிக்கை அதிகமான ஆண் பிள்ளைகளை அருள்வாய் என்று அல்லாஹ்விடம் கேட்கவில்லையா?

சங்கைமிகு யாஸீன் நாயகத்துக்கு சங்கைமிகு வாப்பா நாயகம் அவர்கள் பிறந்ததும். சங்கைமிகு தங்களின் மகளாருக்கு யாஸீன் அலி நாயகம் அவர்கள் பிறந்ததும் அதே மகிழ்ச்சியையும் உணர்வுகளையும் பெற்றிருப்பார்கள் அல்லவா?

அன்று அவர்கள் அடைந்த மகிழ்ச்சியை இன்று நாமும் பெற்று அவர்களது உதயதினங்களை உற்சாகமாகக் கொண்டாடி மகிழ்வோம்.

*மறைஞானப் பேழை நிறுவனர்*

**அஷ்ஷைகுல் காமில்**

**குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத்**

**ஜமாலிய்யா**

**அஸ்ஸய்யிது கலீல் அவ்ன் மௌலானா**

**அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள்**



"ஆதி" என்பது ஆதி அற்றநிலை. இதற்கு முன்னால் எனக் கூறிக் கொள்ள முடியாத நிலையே ஆதிநிலையாகும். ஆதியே இறைவன். அந்த ஆதி இறைவனை இந்தப் பாமாலைகள் கொண்டு புகழ்ந்து பாடப்பட்டன. மேலும், "ஆதி" என்னும்போது ஆதிக்கு ஆதியும் அதற்கு ஆதியும் இல்லை. ஆதி என்பது ஒன்றே எங்குமான நிலை. ஓரிடம் இல்லாத நிலை. சூனியமான நிலை. அப்பொழுது எங்களுக்கு (நம்மிடையே) எந்த விதமான பேதமும் இல்லை.ஆண்களோ பெண்களோ மிருகமோ இப்படியான பஞ்ச பூதங்களோ ஆகிய எந்த வகையான மாற்றங்களும் எந்தவிதமான பேதங்களுமின்றி ஒன்றாக அந்தக் காலத்தில் இருந்தோம்.

*– சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் –*

# ஜமாலிய்யா தோட்டத்தில்

♦ உலகிற் காணும் மற்ற எல்லாப் பொருள்களும் தன்னிலையை அல்லது தன்மையை அறிதல் கடமையன்றெனினும், பகுத்தறிவைப் பொதிந்த மானிடன் தன் இலட்சியத்தையும், தனித்தன்மையையும், உண்மை நிலையையும், எங்கிருந்துதித்தான் என்பதையும் சிந்தித்தல் அவனது தலையாய கடமையாகும். இதையறியும் அறிவே மேற்கண்ட உத்தம ஞானமாகும். *(நூல்: பேரின்பப் பாதை)*

♦ மனிதன் மனநிலை நல்லவனாயிருக்க வேண்டும். மனநிலை ஒழுங்காயிராது போயின் மானிட வாழ்வே ஆபாசமாகும். மக்கள் விரும்புவது பணிவையும், அன்பையும், சீரான செயல்களையுமாம். எனவே எமக்கு இவை மிகமிக வேண்டற்பாலது.

*சங்கைமிகு வாப்பா நாயகம் அவர்கள் தங்கள் கலீபா அல்ஹாஜ், S. அப்துல் கரீம் (ஜமாலி) அவர்களுக்கு எழுதிய 19/02/1968 பட்டோலையிலிருந்து*

இது நமது பாட்டனார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் வழியாகும். சமுதாய மக்களிடையே ஒற்றுமையும் பரஸ்பர அன்பும் பரிவும் ஏற்பட வேண்டியே எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் வெள்ளிக்கிழமை தோறும் ஜுமுஆ குத்பாவை ஏற்படுத்தினார்கள். ஆனால், இன்று நடைபெறும் ஜுமுஆக்கள் ஜுமுஆக்களாக இல்லை. ஒரே குழப்பமும் அடிதடியும், சண்டை சச்சரவுகளாகவுமே இருக்கின்றன.

எங்கள் சபையின் கூட்டம் அவைகள் போன்று ஆகிவிடாமல், நல்லவற்றைப் பேசி, தவ்ஹீதை ஆராயும் கூட்டமாக இருக்கவேண்டும்.

குர்ஆனில், ஹதீஸில் எவ்வெது ஏவப்பட்டிருக்கிறதோ அவ்வதை அப்படியே செய்ய வேண்டும், எவ்வெவை விலக்கப்பட்டிருக்கிறதோ அவ்வதை விட்டுவிட வேண்டும்.

*– மனிதா – நூலில் சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் –*

## கொய்த மலர்



## தாஜுத் தர்ஜுமா

# மொழி பெயர்ப்புகளின் மகுடம்

(சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் மொழி பெயர்ப்பு.)

وَقَالَتِ الْيَهُودُ لَيْسَتِ النَّصٰرٰى عَلٰى شَيْءٍ

கிருத்தவர்களாகிய அவர்கள் (எந்த மார்க்கத்திலும்) இல்லையென்று யூதர்கள் கூறினார்கள்.

وَقَالَتِ النَّصٰرٰى لَيْسَتِ الْيَهُودُ عَلٰى شَيْءٍ

யூதர்கள் எதிலும் (எந்த மார்க்கத்திலும்) இல்லையென்று கிருத்தவர்களும் கூறினார்கள்.

وَهُمْ يَتْلُونَ الْكِتٰبَ

ஆயினும் அவர்கள் தவ்ராத் என்னும் வேத நூலை ஓதுகிறார்கள். (யஹூதிகளும் நஸாராக்களும் ஓதுகிறார்கள்.)

كَذٰلِكَ قَالَ الَّذِينَ لَا يَعْلَمُونَ مِثْلَ قَوْلِهِمْ

அதுபோன்றே, (மார்க்கத்தை) அறியாதவர்களும் அவர்களுடைய கூற்றுக்கு ஒப்பக் கூறுகின்றனர்.

فَاللّٰهُ يَحْكُمُ بَيْنَهُمْ يَوْمَ الْقِيٰمَةِ فِيمَا كَانُوا فِيهِ يَخْتَلِفُونَ ١١٣

எதில் அவர்கள் வேறுபாடடைகின்றார்களோ அதில் முடிவுநாளில் அவர்களுக்கிடையே இறைவன் தீர்ப்பளிப்பான் (நீதிசெலுத்துவான்)

(மாறுபட்ட வேதமுறைகளில் ஈடுபட்டோர்க்கு இறைவன் முடிவு நாளில் உரியதீர்ப்பை அளிப்பான்)

وَمَنْ أَظْلَمُ مِمَّنْ مَنَعَ مَسٰجِدَ اللّٰهِ أَنْ يُذْكَرَ فِيهَا اسْمُهُ وَسَعٰى فِي خَرَابِهَا

அல்லாஹுதஆலாவின் பள்ளிகளிலே அவனுடைய திருநாமத்தை (திக்ரை) நினைவூட்டுகிறதைத் தடுத்து அவைகளைப் பாழாக்க முயற்சிக்கிறவனை விட மிகக் கொடியவன் யார்?

أُولَٰٓئِكَ مَا كَانَ لَهُمْ أَن يَدْخُلُوهَآ إِلَّا خَآئِفِينَ ۚ

அச்சப்படுகிறவர்களேயன்றி அப்பள்ளிகளுக்குள் புகுதுதல் அவர்களுக்கு ஆகுமானதன்று.

(பள்ளிக்குள் புகுவோர் அல்லாஹுவின் அச்சத்துடன் தான் புகுதல் வேண்டும். பள்ளி அல்லஹுவுக்குச் சொந்தமானது. அதிலுள்ள எப்பொருட்களையும் நம் சொந்தப் பொருட்களாய் உபயோகித்தல் கூடாது. பள்ளி நம் சொந்த வீடன்று. அங்கு குடி கொண்டிருப்போர் வானவர்கள். (மலாஇகாமார்) பள்ளிக்குட் புகுவோர் ஸலாம் சொல்லிப் புகுதல் நலமுடைத்து. (நல்லது)

لَهُمْ فِى ٱلدُّنْيَا خِزْىٌ وَلَهُمْ فِى ٱلْءَاخِرَةِ عَذَابٌ عَظِيمٌ ۝ ١١٤

(மேலே சொன்னவைகளுக்கு மாறாக நடக்கும்) அவர்களுக்கு, இவ்வுலகிலே உள்ளது மானபங்கம் தான். அவர்களுக்கு அவ்வுலகத்திலே கொடிய வேதனை யுண்டு.

---

### (ஆ.கா. அப்துல் ஹமீது பாக்கவி அவர்களின் மொழிபெயர்ப்பு)

113. இன்னும் கிறிஸ்தவர்கள் எந்த மார்க்கத்திலுமில்லை என யூதர்கள் கூறுகின்றனர். (அவ்வாறே) யூதர்கள் எ(ந்த மார்க்கத்)திலுமில்லை எனக் கிறித்தவர்களும் கூறுகின்றனர். ஆனால் இவ்விருவருமே (தங்களின் கூற்றுக்கு ஆதாரமாக பைபிளின் பழைய ஏற்பாடாகிய தவ்றாத் என்னும் ஒரே ) வேதத்தை (த்தான்) ஓதுகிறார்கள். இவர்கள் கூறிக்கொள்வது போலவே (வேதத்தை) அறியாத (இணைவைத்து வணங்குபவர்கள் (யூதர்களும் கிறிஸ்தவர்களும் எம் மார்க்கத்தையும் சேர்ந்தவர்கள் அல்ல எனக்) கூறுகிறார்கள். ஆனால் இவர்கள் செய்து கொண்டிருக்கும் இந்த தர்க்கத்தைப் பற்றி மறுமையில் அல்லாஹ் இவர்களுக்குத் தீர்ப்பளிப்பான்.

114. அல்லாஹ்வுடைய மஸ்ஜிதுகளில் அவனுடைய பெயர் கூறப்படுவதைத் தடுத்து அவற்றைப் பாழாக்க முயற்சிப்பவனைவிட பெரிய அநியாயக்காரன் யார்? அஞ்சியவர்களாகவே தவிர அவற்றில் நுழைய அவர்களுக்கு உரிமையே இல்லை. (அவ்வாறிருக்க அதற்கு மாறாக நடக்கும்) அவர்களுக்கு இவ்வுலகில் இழிவுதான். மறுமையிலோ கொடிய வேதனை உண்டு.

ஓ

# பெண் எனும் பேறு!



நீர் உணவுண்டால் மனைவியை உண்ணச் செய்வதும் நீர் உடுத்தினால் அவளையும் உடுத்தச் செய்வதுமாகும். (அவள் தவறு செய்தால்) அவளுடைய முகத்தில் அடிக்காதீர், அவளைப் பழிக்காதீர்! மனம் வேறுபட்டால் இல்லத்தில் (படுக்கையிலேயே) வேறு படுத்துவதைத் தவிர அவள் மீது வெறுப்படையாதீர்!

ஒரு முஸ்லிம் தன் மனைவியின் மீது எப்பொழுதும் வெறுப்பைக் காட்ட வேண்டாம். அவளுடைய ஒரு குணம் உங்களுக்கு வருத்தத்தைக் கொடுத்தாலும் அவளுடைய ஒரு குணம் உங்களை மகிழ்ச்சி அடையச் செய்யும்.

உலகத்தில் என்னைக் கவர்ந்த மூன்று விஷயங்கள். 1. பெண்கள். 2. நறுமணம். 3. கண்கள் குளிர்ந்திடும் தொழுகை.

பெண்களைப் பற்றிய நன்மைகளைச் சொல்கிறேன். உண்மையில் அவர்களை அல்லாஹ்வின் நல்லடியார்களாய்க் கொண்டு இறைவனின் கட்டளைப்படி அவர்களை துணையாக ஏற்றுக் கொண்டீர்கள், எனவே அவர்களுடன் கூடி வாழ்வதை அழகுடையதாக ஆக்கிக் கொள்ளுங்கள்! யாதொரு குற்றம் குறையின்றி அவர்களை ஒருவன் அடித்தால் கியாம நாளில் நான் அவன் மீது குற்றம் சுமத்துவேன்.

பெண்களை நல்ல முறையில் நடத்துமாறு அல்லாஹ் கட்டளையிடுகின்றான்! ஏனென்றால் அவர்களே உங்களின் தாயாராகவும். மகளாகவும், மாமியாராகவும் இருக்கின்றார்கள்.

உங்கள் ஆடைகளை, உங்கள் (தலை) முடிகளை அலங்கரித்துக் கொள்ளுங்கள்! பற்களைத் தீட்டிக் கொள்ளுங்கள்! அழகாகவும் கவர்ச்சியாகவும் தூய்மையாகவும் இருங்கள்! இஸ்ரவேலர்கள் இவ்வாறு தம்மை அலங்கரித்துக் கொள்ளாத காரணத்தினால் தான் அவர்களின் மனைவிமார்கள் விபச்சாரிகளாகி விட்டனர்.

நீங்கள் கற்புடையவர்களாக இருங்கள். உங்கள் மனைவியரும் கற்புடையவர்களாக இருப்பார்கள்.

ஆகுமாக்கப்பட்டவைகளில் இறைவனுக்குக் கோபம் தரக்கூடியது தலாக் (மண விடுதலை) ஆகும்.

ஒழுக்கக் கேடு இல்லாத மனைவிகளை நீங்கள் அநியாயமாக தலாக் (மண விடுதலை) செய்யாதீர்கள்! காமத்தை மட்டும் குறிக்கோளாகக் கொண்ட ஆண்களையும் பெண்களையும் இறைவன் நேசிப்பதில்லை!

எந்த ஒரு பெண்ணும் கடுமையான கொடுமை இன்றி தன் கணவனிடம் தலாக் கோருவாளேயானால் அவளுக்கு சொர்க்கம் கிடையாது.

குடிபோதையில் இருப்பவருடைய தலாக்கும், பைத்தியக்காரருடைய தலாக்கும் செல்லுபடியாகாது.

ஈமான் கொண்ட மனிதனுக்கு அல்லாஹ்வின் பயத்திற்குப்பின் கிடைக்கும் பெரும்பாக்கியம் நல்ல மனைவியாகும்.

# திருக்குறள்

**இன்மையின் இன்னாதது யாதெனின்இன்மையின்**

**இன்மையே இன்னாதது (1041)**

ஒருவனுக்கு வறுமையைப்போலத் துன்பம் தருவது யாதென்றால், அந்த வறுமையைப்போலத் துன்பம் தருவது அந்த வறுமையையன்றி யாதுமில்லை.

**மதித்திறப்பாரும் இறக்க; மதியா மிதித்திறப்பாரும் இறக்க;**
**மிதித்தேறி ஈயும் தலைமேல் இருத்தலால் அஃதறிவார் காயும்**
**கதிமின்மை ஈன்று.** (121 – நாலடியார்)

நம்மை மதித்து நன்கு நடப்பவரும்நடக்கட்டும் ! மதிக்காமல் நம்மை மிதித்து நடப்பவரும் நடக்கட்டும் அற்ப ஈயுங்கூட, நம்தலைமேல் மிதித்து ஏறிஅமர்வதால், அவ் வுண்மை யுணர்ந்தவர், சுடும்சினம்கொள்ளாது பொறுத்தலே நல்லது.

## இரு மாதச் சிறப்பு தினங்கள்

**பிறை**

رَمَضَان

**ரமளான்**

1 புனித நோன்பு மாதம் தொடக்கம்
3 சுவனப் பெண்கள் நாயகி ஃபாத்திமா (ரலி) மறைவு
10 உம்முல் முஃமினீன் கதீஜா நாயகி (ரலி) மறைவு
14 பாயஜீது பிஸ்தாமீ (ரஹ்) மறைவு
15 திருச்சி நத்ஹர் ஷாஹ் வலிய் (ரஹ்) கந்தூரி
இமாம் ஹஸன் (ரலி) உதயம்
17 புனித பத்ரு சஹாபாக்கள் நினைவு
உம்முல் முஃமினீன் ஆயிஷா (ரலி) மறைவு
20 மக்கா வெற்றி
21 அலீ (ரலி) ஷஹீது
22 இமாம் இப்னு மாஜா (ரஹ்) மறைவு
27 புனித லைலத்துல் கத்ர்

---


شَوَّال

**ஷவ்வால்**

1 ஈதுப் பெருநாள்
3 புகாரி தங்கள் கந்தூரி
16. **சங்கைமிகு ஜமாலிய்யா அஸ்ஸெய்யிது கலீல் அவ்ன் மௌலனா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் உதயம்.**
25. ஹைதராபாத் அப்துல் காதிர் ஸூஃபி ஹள்ரத் உரூஸ்

**சங்கைமிகு ஷைகு நாயகம் அவர்களின்**

# அமுத மொழிகள்



## ஷரீஅத்... ஷரீஅத்.. ஷரீஅத் .

♦ ஷரீஅத்தை விட்டுவிட்டால், நமக்கு எதுவுமே இருக்காது. ஒருநேரத் தொழுகையைத் தவறவிட நேர்ந்தால், மனதில் தானாக வருத்தம் தோன்ற வேண்டும். அநியாயமாகத் தொழுகையை விட்டுவிட்டோமே என்ற சிந்தனை மனதில் அனிச்சையாக தோன்ற வேண்டும். ஆக, ஷரீஅத் மிக முக்கியம் என்பதை நீங்கள் விளங்கியிருக்க வேண்டும்.

சமுதாயத்தில் நம்மை மாறியவர்கள் – வேறுபட்டவர்கள் போலக் காட்டிக் கொள்ளவும் கூடாது. எல்லாருடனும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். அதில் கவனம் தேவை. எல்லாருடனும் ஒற்றுமையாக இருக்கும் நேரத்தில் நம்மை கெடுத்துவிடுபவர்களும் உள்ளனர். எந்த நிலையைச் சேர்ந்தவர்கள் என்று அறிந்து நமக்கு இணக்கமானவர்களுடன் ஒற்றுமையாக இருக்க வேண்டும். அதுதான் முறை.

♦ ஞானநிலைகளில் ஓர் உயர்வான நிலையை அடைந்தவர் எப்படி இருப்பார் என்றால், ஷரீஅத்தைப் பாதுகாக்க வேண்டியவன் நான் தான் என்று உறுதி கொண்டாடுவார். ஒருபோதும் ஷரீஅத்தை விட்டுவிட்டுப் போகமாட்டார். இதுதான் இது என்று ஞானத்தை விளங்கி விட்டாரானால், அவர் ஒருக்காலும் ஷரீஅத்தை வீசிவிட்டுப் போக மாட்டார். ஷரீஅத்திலேயே இருப்பார். எந்த ஒரு நிலையிலும் ஷரீஅத்தைப் பாதுகாப்பவர் நாம் தான் என்று உறுதியோடு இருப்பார்.

♦ நாம் எந்த நேரமும் தைரியசாலிகளாகவும் இருக்க வேண்டும். தைரியமில்லாவிட்டால், எந்த ஒரு நன்மையும் இருக்காது. எல்லா விஷயத்திலும் தைரியம் இருக்க வேண்டும். வாழ்க்கையிலும் தைரியம் இருக்க வேண்டும். நான் நன்றாக வாழ்வேன் என்ற தைரியம் இருக்க வேண்டும். கொஞ்சம் குழப்பம் வந்தாலே, சில பிள்ளைகள் மனதளவில் சோர்ந்து விடுகிறார்கள். அப்படியிருக்கக் கூடாது.

தைரியமாக இருந்து, அந்தக் குழப்பத்தை முறியடித்து மேலே வரவேண்டும். அவையெல்லாம் நமக்கு ஒருவகையான சோதனை. இந்தமாதிரி சோதனைகளில் வெற்றி பெற வேண்டும். அதற்கான முயற்சி இருக்க வேண்டும். சின்னச் சின்ன விஷயங்களுக்கெல்லாம் சிலர் நைந்து போகிறார்கள். தைரியமாக இருந்து தங்கள் வாழ்நாளில் இருக்கும் வரை நல்லபடியாக வாழவேண்டும்.

♦ ஷரீஅத்திலும் விளங்கியிருக்க வேண்டும். பாங்கு சொல்கிற நேரத்தில் பேசிப்பேசி அதற்கு அதபில்லாத முறையில், மரியாதையில்லாத நிலையில் நடந்து கொள்ளக்கூடாது. பாங்கு சொல்லக் கூடிய நேரத்தில், அமைதியாக இருந்து அதற்கு என்னென்ன சொல்லவேண்டுமோ அதைச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். அதற்காகத்தான் அந்தமாதிரி சட்டம் போட்டிருக்கிறார்கள். எல்லாரும் சத்தம் போட்டால், மற்றவர்களுக்குப் பாங்கின் சத்தம் கேட்காது என்பதற்காகத்தான் அந்தச் சட்டம் போட்டிருக்கிறார்கள்.

♦ பிள்ளைகள் வீடுகளில் சத்தம் போட்டு விளையாடிக் கொண்டிருப்பார்கள். உடனே, தாய்–தகப்பன் சென்று, பாங்கு சொல்கிறார்கள், சத்தம் போடாதீர்கள் எனச் சொல்லிக் கொடுக்க வேண்டும். சிலர் நல்ல சத்தத்துடன் டி.வி. பார்த்துக் கொண்டிருப்பார்கள். அவர்களிடம், பாங்கு சொல்கிறார்கள், டி.வி. யை ஆஃப் செய்யுங்கள் என்று சொல்ல வேண்டும். இந்தமாதிரி பிள்ளைகளைப் பழக்க வேண்டும். அப்போதுதான் பிள்ளைகள் நல்ல பழக்கங்களைப் பழகுவார்கள்.

♦ சின்னச்சின்னப் பிள்ளைகளுக்கு ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களைப் பற்றி ஆரம்பத்திலிருந்து ஒரு கதையாகச் சொல்லிக் காட்ட வேண்டும். பிள்ளைகளுக்குக் கதைபோல் சொன்னால், நன்றாக விரும்பிக் கேட்பார்கள். அந்தக் கதையைச் சொல்லுங்கள், இந்தக் கதையைச் சொல்லுங்கள் என்று டைமுக்கு உங்களைத் தேடி வந்து விடுவார்கள். அந்த மாதிரி நேரங்களில், இப்படி இருந்தார்கள், இன்னின்னது செய்தார்கள் என்று கதைபோலச் சொல்லிக் காட்ட வேண்டும்.

♦ ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் நடத்திக் காட்டிய முஃஜிஸாத்துகளைச் சொல்லிக் காட்ட வேண்டும். அப்படிச் சொல்லும் நேரத்தில் அது மனதில் நன்றாகப் பதிந்து கொள்ளும். இளமையில் கல்வி – கல்லில் எழுத்து என்பார்கள். இளமையில் நாம் படிப்பித்துக் கொடுக்கும் படிப்புதான் கல்லில் செதுக்கிய எழுத்துப் போல இருக்குமாம். ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களைப் பற்றி அந்தமாதிரி சொல்லிக் கொடுக்க வேண்டும்.

தாய்க்கும் தகப்பனுக்கும் முக்கியமான கடமை என்னவென்றால், தங்கள் பிள்ளைகளுக்கு ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களைப் பற்றிச் சொல்லிக் கொடுப்பதுதான். இந்தமாதிரி இருந்தார்கள். இன்னின்ன மாதிரி செய்தார்கள் என்று சொல்லிக் கொடுக்க வேண்டும். ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் உயர்ந்தவர்கள், நல்ல மனிதர், என்றாலும் நம்மைப்போன்ற மனிதரல்லர் என்றெல்லாம் படிப்பித்துக் கொடுக்க வேண்டும். நம்மைப் போன்ற மனிதரல்லர் என்பது எப்படி என்றும் சொல்லிக் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு எப்படி வஹீ வந்தது? எப்படி நடந்து கொண்டார்கள்? அவர்களின் அறிவு எப்படிப்பட்டதாயிருந்து என்றெல்லாம் காட்டிக் கொடுக்க வேண்டும்.

♦ ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் ஏன் யுத்தம் செய்தார்கள்? இஸ்லாத்திற்கு ஆள் சேர்ப்பதற்காகவா யுத்தஞ்செய்தார்கள். ஒருபோதும் அப்படிச் செய்யவில்லை. ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களையும், இஸ்லாத்தில் இணைந்திருந்த கொஞ்சம் பேரையும் கொல்ல வந்ததற்காகவும், தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் தான் யுத்தஞ் செய்தார்கள். தற்பாதுகாப்பு யுத்தம்தான் அவர்கள் செய்தார்கள். வேறெதற்காவும், ஆட்கொல்வதற்காகவும் ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் யுத்தஞ் செய்யவில்லை.

எப்படி இஸ்லாம் பரவியது? ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களின் நடை, உடை, பாவனையைக் கொண்டுதான். அவர்களின் பேச்சு, முறை, ஒழுங்கு, அவர்களின் சுத்தம், நடத்தை போன்றவைதான் இஸ்லாம் பரவக் காரணங்கள். ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் சாப்பிடும் முறை, தண்ணீர் குடிக்கும் முறை போன்றவற்றை மற்றவர்கள் பார்க்கும் நேரத்தில், இஃதென்ன புதுமையாய் இருக்கின்றதே? நன்றாக இருக்கின்றதே? ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் நல்லதைத்தானே சொல்கிறார்கள்? என்று தான் இஸ்லாத்திற்கு வந்தார்கள்.

♦ ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களை அறிவாளி என்று சொல்லக்கூடாது. அறிவுக் கடல். அறிவுக்கட லென்றும் சொல்ல முடியாது. ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் அறிவுப் பிரபஞ்சம். இதைத் தெரியாத மடையர்கள், அவருக்கு என்ன ஞானம் இருந்தது? உலக ஞானமே இல்லையே என்று பேசுகிறார்கள். இந்த மடையன்கள் ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களிடம், டெஸ்ட் செய்து பார்த்துவிட்டு வந்தமாதிரி, உலக ஞானம் இல்லை, மறைவான அறிவு இல்லை என்று பிதற்றுகிறார்கள். அறிவு கெட்ட ஜனங்களாக இருக்கிறார்கள்.

# உமர் ரலி புராணம்

*(நேரிசை வெண்பா)*

**தண்மஞ்சுந் தானந் தரவே விரும்பிடினும்
திண்மை யுறுகிரணன் சீர்கெடுப்பன் - வண்மைக்
குணமுடைத்தாம் விண்ணெழிலி கூடாதே அஞ்சி
அனலதே யென்று மணித்து.**

## பொருள் :

நீராகிய கொடையைக் குளிர் மேகமும் மக்கட்குக் கொடுக்க விரும்பினும் வலிமை பொருந்திய ஞாயிறு சிறப்பு மிக்க அந்த நல் லெண்ணத்தைக் கெடுத்துவிடும். ஈகைக் குணத்தையுடைய வானத்து மேகம் அது அனல் வீசும் தழல் என்று அஞ்சி நெருங்கிப் பாலை வனத்தின் மேற் கூடாது.

தண்: குளிர்ந்த. தானம்: நீர்க் கொடை. மஞ்சு: மேகம். திண்மை: வலிமை. சீர்: சீர்மை. கிரணன்: சூரியன். வண்மை: ஈகை. விண்:ஆகாயம். எழிலி: மேகம். கூடல்: ஒன்று கூடல். அனல்: நெருப்புக் கனல். அணித்து: சமீபித்து, அடுத்து.

உலகில் தேவையுடையவர்கள் ஒரு புறம் உள்ளனர். அந்தத் தேவையுடையவர்களையறிந்து அவர்களுக்கு உதவும் ஈரமுள்ள நெஞ்சினரும் உளர். இதற்கிடையே உதவி செய்யும் வள்ளல்களை அணுகி, அவர்களை உதவி செய்யவிடாமல் தடுப்போரும் உள்ளனர்.

அதேபோலத்தான், வெப்பத்தின் கொடுமையால் வாடி வதங்கும் மக்களைப் பார்த்து மனம் இரங்கி, நாம் மழையைப் பொழிவிப்போமே, அதனால் மக்களின் துயர் தீருமே என மேகம் நினைக்கிறது. ஆனால் ஞாயிறு எனப்படும் சூரியன் தன் ஆயிரம் கண்களால் உக்கிரமாகப் பார்த்து வெப்பத்தைக் கொட்டுவதால் குளிர் மேகமே அச்சம் கொண்டு பாலை நிலத்துக்குள் வர பயப்படுகிறது. இது கொடுப்பவர் மனதைக் கெடுப்பவர் நிலையை ஒத்திருக்கிறது.

# நாம் யார் தெரியுமா?

*சங்கைமிகு ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்களின் கஸீதத்துல் அஹ்மதிய்யா நூலிலிருந்து..*

நிச்சயமாக நான் அஹ்மதிய்ய அருத்த (தாற்பரிய)ங் கொண்ட அஹ்மதீயாக இருக்கிறேன். நான் திட்டமாக அஹ்மதிய்யத்தான அஹதிய்ய (ஏகத்துவ)த்தைக் கொண்ட அஹதா (ஒருவரா)கவும் இருக்கிறேன்.

நிச்சயமாக நான் அஹ்மதிய்ய சைய்யிதாகிய ரஸூல் நாயகம் (ஸல்) அவர்களின் திருப்பேரராக இருக்கிறேன். திட்டமாக நான் அஹ்மதிய்ய சைய்யிதாகிய ரஸூல் நாயகம் (ஸல்) அவர்களின் வாரிசாகவும் இருக்கிறேன்.

நிச்சயமாக நான் அஹ்மதிய்யத்தால் பிரகாசித்துக் கொண்டிருக்கும் இறைவனின் இல்ல (வீடு) மாக இருக்கிறேன். திட்டமாக நான் அஹ்மதிய்யத்தால் பிரகாசித்துக் கொண்டிருக்கிற பைதுல் மஉமூராகவும் இருக்கிறேன்.

அஹ்மதிய்யாவைக் கொண்டு வானம், பூமியுடைய எல்லாத் திக்குகளிலும் நிலையான எனது உயர் பதவி(க்காகப்) பறைசாற்றப்பட்டது.

நான் அஹ்மதிய அரசாங்க நிர்வாகத்தின் தலைமைத்தனத்தில் ஒப்பற்றவராகவும் தனித்தவராகவும் அபூர்வமானவராகவும் இருக்கிறேன்.

நான் காமிலான ஷைகாகவும் தலைவராகவும் நேர்வழி காட்டுபவராகவும் இருக்கிறேன். நான் அஹ்மதிய்ய உள்ளமையின் உயரிய தகுதிகளை பிரச்சாரம் செய்கிறவராகவும் உயரிய தரங்களளவில் அழைக்கிறவராகவும் இருக்கிறேன். (அல்லது நான் அஹ்மதிய்ய உள்ளமையின் உயரிய தரங்களளவில் அழைக்கிறவராகவும் இருக்கிறேன்.)

எனது வருகையால் எனது காலம் ஜொலித்தது. வணக்கம் (நற்செயல்களைக்) கொண்டு எனது நேரம் மணம்பெற்றது. அஹ்மதிய்ய அருள்களால் எல்லா நேரங்களிலும் எனது அறிவு நறுமணம் வீசியது.

வஹ்ததுல் வுஜூதாகிய ஏகாந்த உள்ளமை உதயமான போது காரிருள் மறைந்தது.அதனால் இயலாமையும் வழிகேடும் நீங்கின. அதுவே அஹ்மதிய்ய மூலமாகும். (தாற்பரியமாகும்.)

அஹ்மதிய மூலாதாரங் கொண்டு நான் இப்றாஹீமாகவும் இஸ்மாயீலாகவும் மூஸாவாகவும் துல்கிஃப்லாகவும் யூசுஃபாகவும் இஸ்ஹாகாகவும் யஉகூபாகவும் ஆனேன்.

கலப்பற்ற முரீதுகளின் உள்ளத்திலே எனக்குக் கூடாரம் உண்டு. அஹ்மதிய்யாவைக் கொண்டு நெருங்கிய நண்பர்கள் அன்பர்கள் உணர்வு பெற்றார்கள். வழிகேடும் நீங்கின. அதுவே அஹ்மதிய்ய மூலமாகும். (தாற்பரியமாகும்.)

யான் ஏக அஹ்மதிய்யாவுடனே நிராமயத்திலே குத்பாக இருந்தேன். என் இரட்சகர் முஹிய்யுத்தீன் அவர்கள் அஹ்மதிய்ய தரத்திலே என்னுடன் இருக்கிறார்கள்.

மிஉ ராஜு என்னும் உயர்வின் மாட்சிமை பொருந்திய தரத்திலே என் பாட்டனார் ரஸூல் (ஸல்) அவர்களுடன் இருந்தேன். அஹ்மதிய்ய இரட்சகனில் என்னை அழித்தேன். (பனாவாக்கினேன்.)

தேவை (விருப்பங்)களுக்காக எம்மை (எம்பக்கம்) நாடுகிறவர்களுக்கு நிச்சயமாக நான் கிப்லாவாக (முன்னோக்கும் தானமாக) இருக்கிறேன். “கலீல்” என்னும் நாமத்தை அழைக்கிறவர் அஹ்மதிய்ய பேற்றை (அதிருஷ்டத்தை) அடைந்தவராவார்.

என்னைப் பின்பற்றியவர்கள் இம்மையிலும் மறுமையிலும் அஹ்மதிய்யாவைக் கொண்டு பேற்றினையும் உயர் தரங்களையும் பாக்கியத்தையும் பெற்றுக் கொள்வர்.

கஷ்டத்தின் நெருக்கடியில் “யாகலீல் அவ்ன்” என உதவி தேடி அழைப்பவருக்கு அஹ்மதிய்யாவைக் கொண்டு அவருடைய உதவி வந்தடையும்.

பொருத்தத்தையுடைய கருப்பவறைக்குள் எனது பாட்டனார் முஹிய்யுத்தீன் ஆண்டகை அவர்களுடன் இருந்தேன். அஹ்மதிய்ய பாதுகாப்பிற்காக மக்களின் இரட்சகராக ஆனேன்.

---

♦ கதவைப் பூட்டிவிடு! காரணங்களைத் துண்டித்து விடு! வஹ்ஹாபாகிய அல்லாஹ்வோடு உட்கார்ந்து கொள், அவன் உன்னோடு திரையின்றிப் பேசுவான்! என என் குருநாதர் வஸிய்யத் செய்ததாக முஹ்யித்தீன் இப்னு அறபீ நாயகம் அவர்கள் கூறுகிறார்கள்.

♦ உன் முடி நரைத்துவிட்டால், உன் முதுகு கூனிவிட்டால், உன் பக்கத்து வீட்டவன் மரணித்துவிட்டால்,

உன் மரணமும் நெருங்கிவிட்டது என்று அர்த்தம் கொள்க...!

*(புலைல் பின் இயால் ரஹிமஹுல்லாஹ்.)*

# ஹகீகத்தில் மிகுதியான ஸலாத்தும் ஸலாமும்!

சங்கைமிகு ஜமாலிய்யா அஸ்ஸைய்யித் யாஸீன் அலி மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்களின் அரிய விளக்கம்.

சிருஷ்டிகர்த்தாவாகிய அல்லாஹ் அளவைக்கொண்டு எல்லா வஸ்துகளிலும் திருவுள்ளமானான். இங்கு அளவு என்பது ஹக்கை அறியும் நிலை. இருப்பினும், பகுத்தறிவுள்ள மனிதன் இந்நிலையில் சிந்திக்காது பாவம் செய்து மருளுகின்றான்.

“தன்னை அறிந்தவன் தன் இறைவனை அறிந்தவனானான்.” தன்னை அறிவது நாயகம் (ஸல்) அவர்களின் واسط உதவியைக் கொண்டாயிருக்கும்.

பரிபூரணத் தோன்றலாக நாயகம் (ஸல்) அவர்கள் அவதரித்தார்கள். ஹகீகத்திலே (ஏகத்தில்) எல்லா வஸ்துகளுக்கும் முஹம்மத் என்றே பெயரானது. மனிதன் முஹம்மத் என்ற ஸூரத்திலேயே படைக்கப்பட்டான். அலிப், பே, முதலிய இருபத்தொன்பது எழுத்துகளுடன் மானிட உறுப்புகள் கூட்டப்பட்டன. எப்படி மெய் எழுத்துகள், உயிருடன் சேர்ந்து உயிர் மெய் ஆனதோ, அதுபோல் உடலும் ஆவியுமாய் மானிடன் பூரண ஆற்றலைக் கொண்டு வெளியானான்.

அல்லாஹ் திருவுள்ளமானான்:

إنّ الله وملائكته يصلّون على النّبى يا أيّهاالّذين آمنوا صلّوا عليه وسلّموا تسليما

**“இன்னல்லாஹ வமலாயிகதஹு யுஸல்லூன அலந்நபீய் யா அய்யுஹல் லதீன ஆமனூ ஸல்லூ அலைஹி வஸல்லிமூ தஸ்லீமா”**

ஷரீஅத்தில் உள்ளவர்களின் விளக்கம்:

நிச்சயமாக அல்லாஹ் நபி (ஸல்) அவர்கள் மீது அருள்புரிகிறான். இன்னும் (மலாயிகத்தும்) அமரர்களும் நபி (ஸல்) அவர்கள் மீது கருணை (நித்தியத்தில்) புரியப்பட்டவர்களாக ஆனார்கள். ஈமான் கொண்டவர்களே, அவர்கள் மீது ஸலவாத்துக் கூறி ஸலாமும் ஈடேற்றம் பெறுங்கள்.

ஸலாத் (புன்மை) ஸலவாத் அதற்கு தொழுகை என்றும் கருணை புரிதல் என்னும் ஷரீஅத்தில் கருத்துகள் உண்டு.

குறிப்பிட்ட ஆயத்தில் அல்லாஹ், மலாயிகத், ஆமனூ என்று ஒப்பிட்டுப்

பார்த்தோமேயானால் அது ஷிர்க் ஆகும். மேலும் வேறுபடுத்திப் பார்த்தோமேயானால் அது பர்க் ஆகிவிடும்.

அல்லாஹ் திருவுள்ளமானான்: குர்ஆன் ஷரீபை துப்புரவு இன்றி பிடித்தல் கூடாது. துப்புரவு இங்கு மூன்று வகைப்படும்; சரீரமும், கல்பும், இந்த இரண்டும் புழங்கும் தானமும். இவை துப்புரவின் பேரிலாயிருக்கும்.

குர்ஆன் ஷரீப் ஆயத்துகள், சூராக்கள் கொண்டு ஆலமுல் அஜ்சாமில் விவரிக்கப்பட்டது. ஆலமுல் அர்வாஹில், நாயகம் (ஸல்) அவர்களின் சம்பூரண நிலையாகும்; இதுவே அவர்களின் பரிசுத்த சரீரமும் கல்பும் ஆகும்.

குர்ஆன் ஷரீப் பூரணமானது, புர்கான் என்னும் விவரிக்கப்பட்டது. (சூராக்கள் ஆயத்துகள் அதில் பெயர்ச் சொற்கள் வினைச்சொற்கள் இடப்பொருத்தம் போன்றவைகள் கொண்டுவிவரிக்கப்பட்டது). எனினும் பரிபூரணமாகத்தான் உள்ளது. ஆதலால் குர்ஆன் ஷரீபை பரிபூரணமாக பாராயணம் செய்தல் வேண்டும். ஷரீஅத்தில் மட்டுமே இருப்பது சிறந்தது என்று எண்ணியவர்கள், நாயகம் (ஸல்) அவர்களை அறியாத பாவியாவார்கள்.

ஹகீகத்திலே (ஆலம் ஜாமிஃ) ஒருமித்த பெயரிலிருந்து (இஸ்மு ஜாமிஃ) விவரிக்கப்பட்ட (இஸ்மு தப்ஸீல்) பெயரளவில் வெளியாகத் தோன்றின. அல்லாஹ் என்னும் ஒரு மித்த பெயரிலிருந்தே விவரிக்கப்பட்ட மலாயிகத் முதலிய ஏனைய பெயர்கன் வெளியாகின.

மேலும், ஆமனூ என்னும் ஆ மன் ஹு (ஹுவை அறிந்தவன்) ஒலியிலிருந்து முஃமின்களைக் குறிப்பிட்டதாகிறது, இது சத்திய நிலையாகும். ஹகீகத்திலே முஃமினுடைய ஸலாதாகிறது நேர்வழியைக் கொண்டும், பூரணத்தைக் கொண்டுமாயிருக்கும். ஹக்கிலே தாத் ஸிபத்களை முஹப்பத் வைத்தவர்களாகவும் நாயகம் (ஸல்) அவர்களின் வாஸிதைக்கொண்டு, தன் பெயரில் உள்ள ஸிர்ரை வெளியாகத் தேடினான். அல்லாஹ்வின் பைய்யாள் (فياض) ஆகிய மிகுதம் அவனிடத்தில் திரப்படும். ஏகபோகத்தில் நித்தியமானான்.

ஹகீகத்திலே ஸலாத் (அழைப்புதல்) என்னும் துஆவாகிறது.

اللهمّ صلّ على سيّدنا محمّد وعلى آله وصحبه وسلّم

اللهمّ صلّ على سيّدنا محمّد وعلى آل سيّدنا محمّد كما صلّيت

على سيّدنا إبراهيم ......

நாயகம் (ஸல்) அவர்களை பரிபூரணத்திலே (நப்ஸாலும் ஜஸதாலும்) ஒப்புக்கொண்ட நிலையாகும். இது முஃமினின் நிலை.உடலும் நப்ஸும் பூரணமாயிருக்கிற நிலையில் தஸ்லீமுடைய கருத்தாகிறது இழிவுகள் மேலும் ஆபத்துகள் போன்ற அழிவு நோய்களிலிருந்தும் நீங்குதலாகும். இதுவே லைலதுல் பராஅத், லைலதுல் கத்ர் உடைய ஸலாம் ஆகும். எனவே நாயகம் (ஸல்) அவர்களை ஏகத்தில் ஒப்புக்கொண்டவர்களாக பிரபஞ்சமே ஸலாமத்தாகும். இதுதான் உண்மை நிலையும். ஹக்கில் பரிசுத்தத்தைக் கொண்டே ஸலாத் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

பரிசுத்த ஹக்கில் நித்திய ஜீவன் பெற்றவர்களாக நல்லோர் அனைவரையும் ஆக்கி அருள்புரியட்டும்! ஆமீன் யாரப்பல் ஆலமீன்!

---

♦ நபியவர்கள் ஒரு ஈச்சம் பாயின் மீது தூங்கினார்கள். அதனுடைய வரிகள் அவர்களின் விலாப்புறத்தில் (நன்றாக) பதிந்திருந்தது. அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் உங்களுக்கு ஒரு விரிப்பை ஏற்பாடு செய்யட்டுமா.?! என்று கேட்டோம். அதற்கு நபியவர்கள் எனக்கும் இந்த உலகிற்கும் என்ன இருக்கிறது.?! ஒரு மரத்தின் கீழ் நிழலிற்காக ஒதுங்கி ஓய்வெடுத்து பிறகு அதை விட்டுச் செல்கின்றானே அந்தப் பயணியைப் போன்று தான் இவ்வுலகத்தில் நான் என்று கூறினார்கள்.

*(நூல் : திர்மிதீ 2377)*

**இமாம் ஷாபிஈ (ரஹிமஹுல்லாஹ்) கூறினார்கள்:**

ஹலால், ஹராம் பற்றிய அறிவுக்குப் பின்னர் மிகவும் கண்ணியமான அறிவாக வைத்தியத் துறையை விட வேறு எதனையும் நான் அறியமாட்டேன். என்றாலும் யூத, நஸாராக்கள் இத்துறையில் எம்மை மிகைத்து விட்டனர்.

*(நூல்: (ஸியரு அஃலாமிந் நுபலா 10/57)*

♦ இந்த உலகமானது, இதில் அனுமதிக்கப்பட்டவைகள் விசாரணைக்கு உட்படுத்தப்படும்...! இதில் தடுக்கப்பட்டவைகள் தண்டனைக்கு உட்படுத்தப்படும்...!

*(ஹள்ரத் அலி இப்னு அபீ தாலிப் (ரலியல்லாஹு அன்ஹு)*

♦ நீங்கள் என்றும் நியாயவானாக இருக்கப் பாருங்கள், தோல்வியடைந்தாலும் பரவாயில்லை...!நீங்கள் ஒருபோதும் அநியாயக்காரனாக இருக்காதீர்கள், வெற்றி பெற வாய்ப்பு இருந்தாலும் பரவாயில்லை...! *(அலி பின் அபீ தாலிப் (ரலியல்லாஹு அன்ஹு)*

♦ நேற்று ஷைத்தான் என்னைப் போட்டு மிதித்தான் என்றால், இன்று நான் மனம்மாறி நல்லறம் செய்வதனூடாக அவன் முதுகை உடைப்பேன்.!

*(சுஃப்யான் அஸ்ஸவ்ரி ரஹிமஹுல்லாஹ்றை)*

# புதிய நல்லதோர் சமுதாயம் உண்டு பண்ணுவோம்!

**மெய்ஞ்ஞானக் கருவூலம், மேதைகளின் மேதை, சங்கைமிகு ஷைகு நாயகம் அவர்களின் 2005 இந்திய விஜயத்தின் போது ஆற்றிய உரை.**

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழியிலான புதியதோர் சமுதாயம் உருவாக்குவோம்.

அன்பு முரீதுப் பிள்ளைகளே! அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹு.

இங்கு பல ஊர்களிலிருந்தும் தூரமான இடங்களில் இருந்தும் உங்களுக்குப் பல அலுவலல்கள் இருந்த போதும் நம்மைச் சந்திப்பதற்காக அதிகமான முரீதுகள் வந்து குழுமியுள்ளீர்கள். பார்ப்பதற்கு மிக சந்தோஷமாக இருக்கிறது. அல்லாஹுத் தஆலா உங்களுக்கு இவ்வுலகிலும் மறு உலகிலும் நல்ல வாழ்வைத் தந்தருள்வானாக!

இங்கு பேசிய பிள்ளை இன்ஜினியர் இக்பால் அவர்கள் கூறியது போல நமது நோக்கம் லட்சியம் என்னவென்றால் புதிய நல்லதோர் சமுதாயம் உண்டு பண்ணுவது தான். இன்று முஸ்லிம் சமுதாயத்தைக் கண்காணித்து நோக்குங்கள். அவர்களுடன் பேசினால், பழகினால், அவர்களின் செயல்கள் எப்படி இருக்கின்றன என்பது உங்களுக்கே விளங்கும். உண்மையிலேயே முஸ்லிம்களிடம் ஒரு முஸ்லிமுக்கு இருக்க வேண்டிய ஒழுங்கு முறைகள் இருப்பதாக எமக்குத் தெரியவில்லை. ஆகவே இங்கு கூடியிருக்கின்ற நாமே ஒரு முழு சமுதாயத்தையும் திருத்தி அமைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அது எப்படி என்றால் நாம் சந்திக்கக் கூடியவர்களை நாம் செல்லும் இந்த நல்வழியில் திருப்ப முடியும். அவர்கள் என்னிடம் வயது ஆக வேண்டும் என்று அவசியம் இல்லை. நாம் இஸ்லாமிய ஒழுங்கு முறைகளில் நடந்து கொண்டால் நம்மைப் பார்த்து மற்றவர்களும் திரும்பி நடக்க முடியும். இன்று முஸ்லிம் அல்லாதார் எனப்படுவோர் நல்ல முறையில் நடக்கின்றனர். நம்முடைய இஸ்லாமிய நடைமுறைகளை அவர்களில் பார்க்கிறோம். சுத்தம் சுகாதாரம் போன்ற நிலைகளில் அவர்கள் இஸ்லாத்தைப் பின்பற்றி வாழ்கிறார்கள். எம் நாடான இலங்கையில் பௌத்த சமயத்தைச் சேர்ந்தவர்கள் முஸ்லிம்களின் ஒழுங்கு முறைகளைக் கூறி தங்கள் சமூகத்தைத் திருத்துகிறார்கள்.

ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இஸ்லாத்தை பரப்பியது வாளால் அல்ல. யுத்தம் செய்ததனால் அல்ல. பல பேர் அப்படி நினைக்கின்றனர். ஆனால் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பேச்சு நடத்தைகளால் அதனைக் கண்டவர்கள் திருந்தினார்கள். இது முக்கியமாக முக்கியமான விஷயம். ஆகவே ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பின்பற்றும் முறையில் பார்த்தால் நமது நடைமுறைகளால் ஒரு நல்ல சமுதாயத்தை நாங்கள் ஏற்படுத்த வேண்டும். இதற்காகத்தான் நாம் இங்கு வந்து பிள்ளைகளாகிய உங்களுக்குப் பல விளக்கங்களை அளித்து வேறுபடுத்த முயல்கிறோம். எனவே இந்தக் கோட்பாடு ஒழுங்கு முறைகளின் படி நடந்து நீங்கள் உதவி செய்ய வேண்டும். உதவுவது எப்படி என்றால் நீங்கள் ஒவ்வொருவரும் ஒருவரைத் திருத்த வேண்டும் நாம் பார்க்கின்ற மனிதர்கள் தீய வழியில் நடந்தால் திருத்த வேண்டும். தொழாமல் இருப்பவரை தொழ அழைத்துச் செல்ல வேண்டும். இது மட்டுமல்ல. **நாம் இந்த முறையில் சமுதாயத்தை அமைக்க மதரஸா ஒன்றை ஏற்படுத்தியுள்ளோம். மறைஞானப் பேழை எனும் ஒரு பத்திரிகையை உருவாக்கியுள்ளோம். இந்த மதரஸா கட்டி பல ஆண்டுகள் ஆகிவிட்டன. இதனைக் கட்டுவதற்கு எங்கள் முரீதுப்பிள்ளைகள் தான் பணம் கொடுத்தீர்கள். மதரஸா கட்டி பல ஆண்டுகளாகியும் இந்த இடத்தில் தோட்டத்தில் ஏதாவது முன்னேற்றம் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளனவா என பார்த்தால் ஒன்றுமே நடக்கவில்லை என உங்களுக்குப் புரியும். அருகே உள்ள கல்லூரியைப் பாருங்கள். பல கட்டடங்களை உருவாக்கி வருகிறார்கள். வசதி படைத்த அவர்களைப் போல் இல்லாவிட்டாலும் ஏதாவது சிறிது சிறிதாக முன்னேற்றம் கண்டிருக்கலாமே. இந்த எண்ணம் உங்களுக்கு வரவேண்டும். ஏனெனில் இது உங்களுக்கு உரியதுதான். எங்கள் பிள்ளைகளின் நன்கொடையால் உருவான இந்தக் கட்டுமானம் உங்களுக்கு உரியதுதான். ஆகவே நாங்கள் இன்னும் பல கட்டுமானங்களைக் கட்டி நல்ல முறையில் இந்த மதரசாவைக் கொண்டு வர வேண்டும்.**

சென்ற தடவை சுருக்கமான வருகையில் ஒவ்வொரு முரீதும் மாதம் 50 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று ஓர் ஒழுங்கு செய்தோம். அப்படிக் கொடுப்பதால் எந்தவிதமான சிரமமும் இல்லை என நாம் நினைக்கின்றோம். அதுவும் குடும்பத்திற்கு ஒரு முரீதுக்குக் கொடுத்தால் போதும் என்றும் கூறினோம். தியாகத்தை விரும்பினால் குடும்பத்தில் உள்ள முரீதுகள் ஒவ்வொருவரும் கொடுக்கலாம். அப்படிச் செய்து வந்தால் இதற்கு அருகே அழகான மதரஸா கட்ட

இயலும். இப்போது மதரஸா நடக்கும் இந்தக் கட்டடம் மதரஸாவாக கட்டப்பட்டதல்ல. சேர்த்த பணம் வீணாகப் போய்விடுமே என்று எண்ணி, பிள்ளைகள் தங்குவதற்கு ஒரு ஹாஸ்டலாக – விடுதியாகக் கட்டப்பட்டது. எனவே புதிய கட்டுமானத்திற்கு நீங்கள் செய்யும் உதவி எனக்காக அல்ல. பாருங்கள் இங்கு அமர்ந்திருக்கும் இந்த ஏழைப் பிள்ளைகள். மேலும் வந்து படிக்கப் போகின்ற ஏழைப் பிள்ளைகளுக்காகத் தான் என்பதை எண்ண வேண்டும். வருங்காலத்தில் அவர்கள் ஒரு நல்ல நிலையினை அடைந்து கொள்வதற்காக இஸ்லாத்திற்காக தவ்ஹீதுக்காக அரும் பணி ஆற்றப் போகின்றார்கள் என்பதை மனதில் வைத்தால் மாதம் 50 அல்ல, அதற்கு மேலும் செலுத்தினால் இன்று ஒரு சிறப்பான கட்டுமானத்தைத் தொடங்கி விடலாம். அருகே நிறைய கட்டடங்கள் உருவாகி இருக்க இங்கே நம் பிள்ளைகளுக்கு படிக்க இடமில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கின்றோம். எனவே ஒவ்வொரு முரீதுப் பிள்ளையும் நெஞ்சில் ஓர் உறுதி மொழி எடுத்துக்கொண்டு உதவி செய்தால் முன்னால் நாம் திட்டமிட்டு படியுள்ள ஒழுங்குப் பிரகாரம் கட்டடத்தைத் தொடங்கிவிடலாம்.

ஒரு ஜாமியாவாக பல்கலைக் கழகமாக ஒரு யுனிவர்சிட்டியாக ஆக வேண்டும் என்பதுதான் எமது ஆசை. இங்கு படிக்கும் பிள்ளைகள் பெரிய கெட்டிக்காரர்களாக வருவார்கள். அவர்களுக்கு நிகராக யாரும் இருக்கக் கூடாது. அவர்கள் நஹ்வு, ஃபிக்ஹு, ஹதீஸ், தஃப்ஸீர், மன்திக், மஆனி, மற்றும் அனைத்துத் துறைகளிலும் வல்லவர்களாக வர வேண்டும். உஸூலுக்கு வேறு எங்கும் செல்லத் தேவையில்லை. இங்கு போனால் நிறைவாகக் கற்றுக் கொடுப்பார்கள் என்று வரவேண்டும். இங்கு உஸூல் ஃபிக்ஹு, உஸூல் ஹதீஸ், நல்ல முறையில் கற்றுத் தரவேண்டும். இங்கு நன்கு ஓதிப் படித்து மிகப்பெரும் வல்லுனர்களாக இவர்கள் வெளி வருவதைக் காண ஆசைப்படுகின்றேன். அவர்கள் சிறப்போடு வரவும் உஸ்தாதுமார்கள் இந்நிறுவனத்திற்கு உதவுவோர்– எம் பிள்ளைகள் அனைவருக்கும் அல்லாஹ் நல்ல சுபிட்சமான நோயற்ற வேதனை தரும் கொடிய நோயற்ற நீடிய ஆயுளைத் தந்து ஆபத்துக்கள் துன்பம் வராமல் காத்து சீரோடும் சிறப்போடும் பரக்கத்தோடும் கூடிய நல்வாழ்வை தந்தருள்வானாக ஆமீன்

---

♦ நபித்தோழர்களின் நல் அமல்களைப்பற்றி எடுத்துச் சொல்லுங்கள் என்று அபூ பஷீர் அவர்களிடம் சுஃப்யான் பின் தீனார் ரஹிமஹுல்லாஹ் கேட்க. அதற்கவர், நம் முன்னோர்கள் சிறிய அமல்களை செய்வார்கள், பெரும் கூலியைப் பெற்றுக் கொள்வார்கள் என்று கூறினார்கள்.அது எவ்வாறு என மீண்டும் வினவ; அவர்களின் பரிசுத்தமான உள்ளங்களே அதற்குக்காரணம் என பதிலளித்தார்கள்.

# இரத்தம் இனித்ததே...மணத்ததே!

ஹள்ரத் அபூ உமாமா ரழியல்லாஹு அன்ஹு அறிவிக்கின்றார்கள்,

உஹது யுத்தத்தில் ஒரு தீயவன் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்குக் கல்லால் எறிந்தான். அதனால், நபியவர்களின் முபாரக்கான ஒரு பல் ஸஹீதானது. அதனால் வாயின் ஓரத்திலிருந்து குருதி வடிந்தது. ஹள்ரத் அபூ சயீதுல் குத்ரிய் ரழியல்லாஹு அன்ஹுவின் தந்தை அபூஸினான் ரழியல்லாஹு அன்ஹு குருதியை உறிஞ்சிக் கொண்டிருந்தார்.

உறிஞ்சிய குருதியைத் துப்பி விடுமாறு குண நபிநாதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூற அல்லாஹ்வின் மீது ஆணையாக! தாங்களின் குருதியை நிலத்தில் உமிழ மாட்டேன் என்று கூறிய பின் அதனை மென்றுவிட்டார். உலகத்தில் ஒரு சொர்க்கவாதியைப் பார்க்க விரும்பினால் இவரைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று அவருக்கு சோபனம் சொன்னார்கள்.

ஆதாரம் : பைஹகி, ஸீறத்துன் நபவிய்யா, பாகம் – 03, பக்கம் – 228,

ஷிபா, – பாகம் –1, பக்கம் – 161

ஹள்ரத் அப்துல்லாஹ் இப்னு ஸுபைர் ரழியல்லாஹு அன்ஹு நபியவர்களுக்கு இரத்தம் குத்தி எடுத்தார்கள். எடுத்த குருதியை எடுத்துச் சென்று எவர் பார்வையிலும் படாத இடத்தில் மறைத்து விடுமாறு நபியவர்கள் பணித்தார்கள். நான் அதனை எடுத்துச் சென்று மறைவிடத்தில் குடித்து விட்டேன்.

குருதியை என்ன செய்தீர்? என்று கோமான் நபியவர்கள் அவரிடம் விசாரித்தார்கள். மனிதருக்கு மறைவாக உள்ள ஓர் இடத்தில் அதனைப் (புத்திரமாக) வைத்துள்ளேன் என்றார். குருதியைக் குடித்து விட்டீர்களா? என்று நபியவர்கள் கேட்டார்கள். ஆமாம் நாயகமே! நான் அதனைக் குடித்து விட்டேன் என்றார். எதற்காகக் குடித்தீர்கள் என்று நபியவர்கள் கேட்டார்கள். தாங்கள் குருதியை நரகம் தீண்டாது என்பதைத் திட்டமாக நான் அறிந்திருந்தேன். அதன் பரக்கத்தால் என்னை நரகிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காகவே குடித்தேன் என்று அடக்கத்துடன் விடை சொன்னதும்,நரக நெருப்பு உம்மைத் தொடாது என்று கூறிய தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் பாசத்தால் என் தலையை வருடினார்கள்.

ஆதாரம் : ஸீறத்துன் நபவிய்யா, பாகம் – 03, பக்கம் – 227 – 228

ஷறஹுஷிபா, பாகம் – 1, பக்கம் – 162

கோமான் நபியவர்களின் குருதியைக் குடித்த தினத்திலிருந்து வீரமரணம் அடையும்வரை ஹள்ரத் இப்னு ஸுபைர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் திருவாயிலிருந்து கஸ்தூரி கமழ்ந்து கொண்டிருந்தது.

ஹள்ரத் ஷுஃபி ரழியல்லாஹு அன்ஹு கூறுகின்றார்,

பெருமானாரின் குருதியின் சுவை எப்படியிருந்தது? என்று இப்னு ஷுபைர் ரழியல்லாஹு அன்ஹுவிடம் ஸஹாபாக்கள் கேட்டார்கள். குருதி தேனைப் போன்று இனித்தது. கஸ்தூரி போன்று மணம் பரப்பியது என்று அவர் விடை பகர்ந்தார்.

ஆதாரம் : ழியாஉன்நபி, பாகம் – 05, பக்கம் 112

---

# மரணம் –ஞானத் தெளிவு

கலீபா. அட்வகேட். ஏ.என்.எம்.லியாகத் அலி. பி .எஸ். ஸி.பி.எல். (மதுக்கூர்)

**இருப்பாரைக் காண இப்பவர் சென்றார்**

**தன்னில் தானே தன்னை யறிந்து கொண்டார் –இந்த**

**உண்மையைக் கண்டவர் வேறென்ன கொண்டார்**

**நிலையாமை என்பதும் நிலையாமை தானே**

**நிலைப்பது என்பது நிஜம் மட்டும் தானே**

**முழுமையில் என்றும் பிரிவது முண்டோ**

**பிரிந்து செல்ல கதிவேறுமுண்டோ**

**முடியாத ஒன்றுக்கு வீண் முயற்சி செய்யாதே**

**உன் முழுமையை என்றும் நீ மறவாதே**

**முழுமையே உண்மை நீ மறவாதே**

---

**மாநபியவர்கள் நவின்றுள்ளார்கள் :**

இறுதிக் காலகட்டத்தில் மிக அரிதாக கிடைக்கும் இரண்டு விடயங்கள் உண்டு :

ஒன்று ஹலாலான பணம்,

மற்றொன்று நம்பகமான நண்பன். (நூல் : ஜாமிஉஸ்ஸஃகீர்.)

# لا اله

# லா இலாஹ்

ரஹ்மத் ராஜகுமாரன்.

فلا تدع مع الله الها آخر فتكون من المعذّبين

ஆதலால் நீர் அல்லாஹ்வுடன் வேறொரு (கற்பனை) இலாஹுவை அழைக்காதீர். அதனால் நீர் வேதனை செய்யப்படுவீர். (குர்ஆன் 26.-213)

وقال الله لا تتّخذوا الهَين اثنين انّما هواله واحد فايّاى فارهبون

(மனிதர்களே.) இன்னும் அல்லாஹ் கூறுகிறான். இரண்டு இலாஹுகளை ஏற்படுத்திக் கொள்ளாதீர்கள். இலாஹு என்பது ஏகமானது. (ஒன்றேயொன்று)தான். ஆகவே நீங்கள் எனக்கே பயப்படுங்கள். (குர்ஆன் 16-51)

இவ்வாயத்துக்களில் இலாஹு என்ற சொல் என்ன கருத்தோடு பாவிக்கப் பட்டிருக்கிறது என்பதைப் பல கோணங்களில் சிந்தனை செய்யுங்கள். பல இலட்சாதி இலட்சம் இலாஹுகள் இருந்து கொண்டிருந்தும் இரு இலாஹுகளை எடுத்துக் கொள்ளாதீர்கள் என்று இறைவன் கூறுவதன் அர்த்தமென்ன என்பதைச் சிந்தனை செய்யுங்கள்.

பொறுமையோடு இன்னும் சிறிது செவிதாழ்த்துக. அனாநிய்யத்தற்ற, கட்டுப்பாடுகளிலிருந்தும் விடுபட்ட அறிவின் பெயரே "நூர்" என்பது. "ரூஹு" என்பதும் இதுவே. இந்த நூர் பற்றற்ற நிலையில் சுயமாய் இருந்துணரும் சொந்த உணர்வே "நான்" என்ற உணர்வாகும்.

இந்த நான் வஹ்மு என்ற திரையை எடுத்துக் கொள்ளும்போது அது வெளிமனத்துக்(நப்ஸுக்) குரியதாய், பிரதிபலிப்பாய், ஷிர்க்காய் அமைந்து விடுகிறது.

நப்ஸென்ற வெளிமனத்துக்குரிய "நான்" என்பது தன்னிலும் வேறானதோர் இலாஹு இருப்பதாய் நம்பிவிடுவதால், தன்னை ஓர் இலாஹு வாகவும், தன் கற்பனையிலுள்ள இறைவனை வேறோர் இலாஹு வாகவும் ஆக்கிக் கொள்கிறது. இது உள்ளத்திலேற்படும் ஓர் உளநோயாய் இருக்கிறது. முஷ்ரிகீன்களின் இவ்வித மூடத்தனமான ஷிர்க்கில் ஊறினால் வேதனையேற்படும் என்பதே ஆயத்துக்கள் போதிக்கும் போதனையாகும்.

"லா இலாஹ்" என்று கூறும்போது சிருஷ்டி (படைப்பு) இல்லை என்றாவதால் நானிருக்கிறேன் என்று மருண்டு கொண்டிருக்கிற நப்ஸும் இல்லாமலாகி விடுகிறது.

அதாவது சிருஷ்டி இல்லை என்னும்போது நானும் இல்லை என்று நப்ஸு நம்புவதால் அந்த நப்ஸும் அப்போதே இறந்துவிடுகிறது. அதன் கற்பனையான இலாஹும் இல்லாமல் அழிந்துவிடுகிறது.

இப்போது ரூஹு நப்ஸின் தொடர்பில்லாமலிருந்து கொண்டு தான் என்னையன்றி இல்லை என்றுணர்வதால் அதற்கிடப்பட்டிருந்த சகல திரைகளும் கட்டுப்பாடுகளும் நீங்கிவிடுகின்றன.

எனவே ரூஹு தன்னை உணரும் தன்னுணர்வு ரூஹுக்கு ரூஹுவாயிருக்கும் ரப்புடைய தன்னுணர்வாய் அமைந்து விடுகிறது. இப்போது அந்த ரூஹு நான் ஓர் சிருஷ்டியே என்ற உணர்வற்றதாயிருப்பதால், அங்கே ரப்புடைய பண்புகள் வெளியாகின்றன. முடிவில் அந்த ரூஹு கடலில் கரைந்த உப்புக் கல்லின் நிலமையை அடைந்து விடுகிறது.

அதாவது இறை ஐக்கியம் கிடைத்துவிடுகிறது. சிருஷ்டி ரப்பாகி விட்டது என்றோ ரப்பு சிருஷ்டியாகி விட்டது என்றோ விளங்கிக்கொள்ள வேண்டாம்.

இஸ்லாம் ஆஸ்திகமோ நாஸ்திகமோ அல்ல. இஸ்லாம் என்பது ஓர் இயற்கை வழியாகும். இறையுணர்வைக் கொண்டே மூமீன்களை இறைவன் உறுதிப்படுத்துகிறான் என்பதற்கு குர்ஆன் 58:22ம் ஆயத்து ஆதாரமாய் இருக்கிறது.

அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்பும் சமூகத்தினர், அல்லாஹ்வையும், அவனது தூதரையும் பகைத்துக் கொண்டவர்களை நேசிப்பவர்களாக (நபியே!) நீர் காணமாட்டீர். அவர்கள் தங்கள் பெற்றோராயினும் தங்கள் புதல்வர்களாயினும் தங்கள் சகோதரர்களாயினும் தங்கள் குடும்பத்தினராயினும் சரியே; (ஏனெனில்) அத்தகையவர்களின் இதயங்களில், (அல்லாஹ்) ஈமானை எழுதி (ப் பதித்து) விட்டான்;

மேலும் அவன் தன்னிடமிருந்து (அருள் என்னும்) ஆன்மாவைக் கொண்டு பலப்படுத்தியிருக்கிறான்; சுவர்க்கச் சோலைகளில் என்றென்றும் இருக்கும்படி அவர்களைப் பிரவேசிக்கச் செய்வான்; அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக்கொண்டு இருக்கும். அல்லாஹ் அவர்களைப் பொருந்திக் கொண்டான்; அவர்களும் அவனைப் பொருந்திக் கொண்டார்கள். அவர்கள்தாம் அல்லாஹ்வின் கூட்டத்தினர்; அறிந்துகொள்க: நிச்சயமாக அல்லாஹ்வின் கூட்டத்தினர் தாம் வெற்றி பெறுவார்கள்.(குர்ஆன் : 58:22)

எவ்வளவு தூரம் அனாநிய்யத் வீழ்ச்சியடைகிறதோ அவ்வளவு தூரம் ஷைத்தானுடையவும் ஹைவானுடையவும் சுபாவங்கள் நீங்கிவிடுகின்றன. மலக்கானி, றஹ்மானியின் சுபாவங்கள் வெளியாகின்றன. இவ்வித குணங்கள் நிரப்பமடையும் போது அந்தமனிதரின் ஸூறத்து இறைவனுடைய விசேட தஜல்லிக்குரியதாய் அமைந்து விடுகிறது.

# விண்வெளியில் குர்ஆன் படித்தேன்!
# சுனிதா வில்லியம்ஸின் அனுபவம்!

ஒரு வாரப் பணிக்காக விண்வெளிக்கு சென்று 9 மாதங்கள் தங்கிவிட்டு திரும்பிய சுனிதா தற்போது உலக அளவில் விவாதப் பொருளாக மாறியுள்ளார்.

கடவுளின் விருப்பத்தால் நான் விண்வெளியில் சிக்கிக்கொண்டதாக உணர்கிறேன். 20 நாட்களுக்குப் பிறகும், என் எதிரில் மரணத்தைக் கண்டது போல் வாழ்ந்தேன். சேமித்து வைத்திருக்கும் உணவும் தண்ணீரும் தீர்ந்து போக எப்படி முன்னேறுவது என்று யோசித்தபோது, இஸ்லாமியர்களின் ரம்ஜான் நோன்பு நினைவுக்கு வந்தது. அன்று முதல் மாலையில் உணவும் தண்ணீரும் குறைவாகவும், காலையில் தண்ணீர் குறைவாகவும் குடிப்பேன். ஒரு மாதத்திற்குப் பிறகு நான் மிகவும் ஆரோக்கியமாகவும் புத்துணர்ச்சியுடனும் உணர்ந்தேன். இன்னும் கொஞ்ச நேரம் பொறுக்க முடியும் என்பதை உணர்ந்தேன்.

மரணத்திற்காகக் காத்திருந்து, ஒரு நாள் பைபிளைப் படிப்பேன் என்று நினைத்துக் கணினியைத் திறந்தேன். முன்பு பலமுறை படித்ததால், ஒரு பக்கம் படித்தவுடனேயே சலித்து, குரானை மீண்டும் படிக்கலாம் என்று தோன்றியது (இப்போது கொஞ்சம் பலம் கொடுத்ததாக உணர்கிறேன்) டவுன்லோட் செய்து (ஆங்கில மொழிபெயர்ப்பு) படிக்க ஆரம்பித்தேன். 10-15 பக்கங்களைப் படித்த பிறகு நான் ஆச்சரியப்பட்டேன். அதன் கரு, ஆழ்கடல் மற்றும் வானம் அது ஆச்சரியமாக இருந்தது. இதை உலகிற்கு எடுத்துரைக்க வேண்டும் என்று நான் உணர்ந்தேன்.

விண்வெளியில் இருந்து பார்க்கும் போது சூரியன் குட்டையில் விழுவது போல் தெரிகிறது. சில சமயம் மேலிருந்து கோஷமிடுவது போன்ற சில குரல்கள் கேட்கலாம், அது அரபு மொழி என்று நினைத்தேன். ஒவ்வொரு நாளும் குர்ஆனைப் படிப்பது போல் உணர்கிறேன் என்று எனது தோழர் பாரி வில்மோர் கூறினார். அதன் பிறகு குர்ஆனை ஆழமாகப் படிக்க முடிவு செய்து தஃப்ஸீர்களை டவுன்லோட் செய்தேன். இது ஒரு அற்புதமான அனுபவம். உடனே எலோன் மஸ்க்கை அழைத்து தகவல் தெரிவித்தேன். இந்த விஷயத்தை விரைவில் தனது X உடன் பகிர்ந்து கொள்வேன் என்றார்.

இப்போது நீங்கள் அதிர்ச்சியடையப் போகிறீர்கள்.. சில நாட்களில் பெரிய விண்கற்கள் நமது விண்வெளி நிலையத்தை நோக்கி விரைவதைப் பார்த்து

பயந்துபோய் அமர்ந்திருப்போம். வேறு வழியில்லாததால், சில சிறிய கோள விளக்குகள் (நட்சத்திரங்கள் போல) பறந்து அனைத்து விரிகுடாக்களையும் அழிக்க கடவுளிடம் பிரார்த்தனை செய்வோம். அதைப் பார்க்கும்போது நமக்கு நட்சத்திரங்களைச் சுடுவது போல் தோன்றும். எங்களை ஆச்சரியப்படுத்தியது. இது குறித்து நாசா விரைவில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளும் என அவர் உறுதியளித்துள்ளார்.

8 மாதங்களுக்குப் பிறகு, நான் முழு குரானையும் படித்தேன். நான் மீண்டும் பூமிக்குச் செல்லலாம் என்று உணர ஆரம்பித்தேன். ஒரு அசாதாரண நம்பிக்கை என்னை நிரப்பியது.

ஏப்ரல் மாதத்தில், சூரியன் மறையும் போது, ஒரு யூனிகார்ன் (பறக்கும் குதிரை) போன்ற ஒரு உயிரினம் மேலிருந்து பூமிக்கு வருவதைக் காணலாம், அது பூமியின் வளிமண்டலத்தை அடைந்தவுடன், அதைப் பார்க்க முடியாது. எங்கிருந்து வருகிறது என்று தெரியாமல் நானும் பேரி வில்லிமோரும் அதைப் பார்க்க ஆரம்பித்தோம். இது மேல் ஸ்பெஷல் லேயரில் இருந்து கீழே வருகிறது மற்றும் வானத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட அடுக்குகள் இருப்பதாக நான் நினைக்கிறேன். எவ்வளவு யோசித்தும் இந்த பறக்கும் குதிரைகள் ஏன் இன்னும் இல்லை என்று புரியவில்லை. அப்போதுதான் நியூயார்க் டைம்ஸ் நாளிதழில் ஹட்சன் ஆற்றின் மேல் பிறை நிலவு தென்பட்டதை பார்த்தேன், மார்ச் 2ம் தேதி முஸ்லிம்கள் நோன்பு நோற்கத் தொடங்கினார்கள் என்ற செய்தியைப் பார்த்தேன். அப்போதிருந்து, நஞ்சல் இந்த நிகழ்வைக் கண்டார். அடுத்த நாட்களில் பூமியில் நோன்பு திறக்கும் நேரம் வந்துவிட்டது என்பதை உணர்ந்தோம். அவர்கள் கடவுளின் ஆசீர்வாதத்துடன் வரும் தேவதைகள் (மலக்) என்று நான் நினைக்கிறேன்.

குரான் உண்மை என்று இப்போது உணர்கிறேன். இப்போது எனது ஆராய்ச்சி குர்ஆனில் உள்ள அறிவியலைப் பற்றியதாக இருக்கும். கருவியல், ஆழ்கடல் அறிவியல். , நான் கோளங்களின் அனைத்து அறிவியலையும் கற்றுக்கொள்ள விரும்புகிறேன். குர்ஆனின் அமானுஷ்ய சக்தியைக் கண்டறிய நாசாவில் புதிய துறையைத் தொடங்க முன்மொழியப்பட்டுள்ளது. அதற்குத் தேவையான நிதியை டிரம்ப் அரசு ஒதுக்குமா என்ற கவலையையும் சுனிதா பகிர்ந்து கொண்டார்.

*(பிபிசி செய்தி)*

---

## மறைஞானப்பேழை சந்தா செலுத்திவிட்டீர்களா?

# மூத்தோர் உதிர்த்த முத்துக்கள்.

## கவலையில்லையே...

அபூயஜீதுல் பிஸ்தாமி (ரஹிமஹுல்லாஹ்) ஒரு இமாமுக்கு பின்னால் நின்று தொழுதார்கள். தொழுகைக்குப் பின் அவரைச் சந்தித்தபோது முஸாபஹா செய்த அந்த இமாம் பிஸ்தாமியிடம் உங்கள் வயிற்றுப் பிழைப்புக்கு என்ன செய்கிறீர்கள்? என்று கேட்டார்.

அவ்வளவு தான். உங்களுக்குப் பின்னாலா நான் தொழுதேன். தொழுகையை திரும்ப தொழுதுவிட்டு வருகிறேன் என்று சொல்லி விட்டு தொழுகச் சென்று விட்டார்கள் பிஸ்தாமி அவர்கள். பின்னர் திரும்பி வந்து,வஃபிஸ்ஸமாஇ ரிஸ்குகும் வமா தூஅதூன் (22) என்ற ஆயத்தை நான் அறிந்த காலத்திலிருந்து அதற்காக நான் அதிகம் கவலைப்படுவதில்லை என்று கூறினார்கள்.

## அதிபுத்திசாலி யார்?

இமாம் ஷாபி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறினார்கள்: ஒரு ஆள் தனது சொத்தில் ஒரு பகுதியை இந்த உலகின் பெரிய அறிவாளிக்கு வழங்க வேண்டும் என்று வஸிய்யத் உயில் எழுதி வைத்தால் யார் இந்த உலகின் மீது அதிக ஆசை இல்லாமல் வாழ்கிறானோ அவருக்கு அதைக் கொடுக்க வேண்டும் என்று நான் தீர்ப்புச் சொல்வேன்.

## ஆசையை அகற்றுவாய்.

ராபியா பஸரிய்யா ரஹிமஹல்லாஹ் தஹஜ்ஜுதுக்கு பிறகுண்டான முக்கியமான நேரத்தில் இப்படி துஆ கேட்பார்கள்.

இறைவா! இரவு வந்து விட்டது. நட்சத்திரங்கள் ஒளிர்கின்றன. உலகின் அரசர்கள் தங்களது கதவுகளை அடைத்து உறங்கச் சென்று விட்டார்கள். உன்னுடைய கதவுகள் இப்போதும் திறந்திருக்கின்றன. நான் எனது கைகளை உன்னை நோக்கி விரித்து வைக்கிறேன். வானம் பூமியின் மீது விழுந்து விடாமல் காப்பவனே! இந்த உலக ஆசை என் இதயத்தில் புகுந்து விடாமல் தடுத்துவிடு!

## கொஞ்சத்தில் கொஞ்சமா?

ஷைகு மழ்ஹர் ஜான் ஜானா ரஹிமஹுல்லாஹ் அவர்களிடம் அப்போதைய அரசர் ஒரு ஓலை அனுப்பினார். உங்களது கான்காஹ்வுக்கு நிறைய ஆட்கள் வருகிறார்கள். நீங்கள் வாருங்கள். உங்களுக்கேற்ற ஒரு நிலத்தை நான் தருகிறேன் என்றார். ஷைக் தூதரிடம் சொல்லி அனுப்பினார்கள், அரசருக்கு என் வாழ்த்துக்க்ளை சொல்! மேலும் அவரிடம் சொல் இந்த உலகமே கொஞ்சம் என்று அல்லாஹ் சொல்கிறான். அதில் கொஞ்சம் உங்களிடம் இருக்கிறது அதிலும் கொஞ்சத்தை பெற நான் வெட்கப்படுகிறேன்.

## நெருப்புடன்

நெருப்புடன் நீங்கள் உறவாடுவது போலவே, மனிதர்களுடனும் உறாவாடப் பழகுங்கள். அதிலிருந்து பயன் பெறும் நீங்கள் பாதுகாப்பாகவும் இருப்பீர்கள்.

(ஷகீக் அல்–பல்கி ரஹிமஹுல்லாஹ் )

## இப்படித்தான் இருப்பர்.

இமாம் ஹஸனுல் பஸரி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறியுள்ளார்கள் :

ஓர் இறை விசுவாசி நடத்தையில் பணிவையும் பேச்சில் மென்மையையும் கடைப்பிடிப்பார். அதேவேளை அவர் பிறருடன் தர்க்கத்திலும் குதர்க்கத்திலும் ஈடுபடமாட்டார். அவர் அல்லாஹ்வின் ஞானத்தைப் பரப்புவார். அது ஏற்றுக் கொள்ளப்பட்டால் அல்லாஹ்வைப் புகழுவார். நிராகரிக்கப்பட்டால் அப்போதும் அவனைப் புகழ்வார்.

## என்ன வீடு கட்டப்போகிறாய்?

மரணத்திற்கு முன்னர் மனிதன் கட்டியமைத்த வீட்டில்தான் மரணத்தின் பின்னரும் அவன் சென்று வாழ வேண்டும்!

புண்ணியத்தால் வீடு கட்டியவன் நிம்மதியாய் குடியேறுவான்! அநியாயத்துக்கு வீடு கட்டியவன் ஏமாறி திண்டாடுவான்! *(அலி இப்னு அபீ தாலிப் (ரலியல்லாஹு அன்ஹு)*

## இது உங்கள் உலகம்...

நபியவர்கள் ஒரு ஈச்சம் பாயின் மீது தூங்கினார்கள். அதனுடைய வரிகள் அவர்களின் விலாப்புறத்தில் (நன்றாக) பதிந்திருந்தது. அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் உங்களுக்கு ஒரு விரிப்பை ஏற்பாடு செய்யட்டுமா.?! என்று கேட்டோம்.அதற்கு நபியவர்கள் எனக்கும் இந்த உலகிற்கும் என்ன இருக்கிறது.?! ஒரு மரத்தின் கீழ் நிழலிற்காக ஒதுங்கி ஓய்வெடுத்து பிறகு அதை விட்டுச் செல்கின்றானே அந்தப் பயணியைப் போன்று தான் இவ்வுலகத்தில் நான் என்று கூறினார்கள். (நூல் : திர்மிதீ 2377)

## துரத்தும் மரணம்

உன் முடி நரைத்துவிட்டால், உன் முதுகு கூனிவிட்டால், உன் பக்கத்து வீட்டவன் மரணித்துவிட்டால், உன் மரணமும் நெருங்கிவிட்டது என்று அர்த்தம் கொள்க...! (புலைல் பின் இயால் ரஹிமஹுல்லாஹ்)

## வேண்டாம் அநீதம்

நீங்கள் ஒருபோதும் அநியாயக்காரனாக இருக்காதீர்கள், வெற்றி பெற வாய்ப்பு இருந்தாலும் பரவாயில்லை...! (அலி பின் அபீ தாலிப் (ரலியல்லாஹு அன்ஹு))

# குர்ஆனில் பொதுநோக்கு

சங்கைமிகு ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன்
மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய்
(குத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம்)

நமக்கு நபிகணாயகத்தால் அருளப்பட்ட இந்தத் திருமறை ஓர் உலக மறையாகும். இம்மறைக்கு நிகர் இல்லை. இஃதோர் சுத்த சத்திய வேதம். இதன் சிறபியல்புகளைக் கண்ட எவரும் இதை மறுக்க மாட்டார். மறுப்போர் உண்மையை மறுப்போர் ஆவர். ஏனைய மதங்களை யுடைய அறிஞர்கள் திருக்குர்ஆனின் சிறப்பியல்புகள் பற்றி கூறிய சில வாக்கியங்கள் இங்கு கவனிக்கத்தக்கன:

1. திருக்குர்ஆன் சுத்தம் பற்றிய பல அழகிய போதனைகளை அருளியுள்ளது. இவைகளை நல்ல முறையில் பேணி வந்தால் நிச்சயமாகவே உடலில் உள்ள எல்லாக் கிருமிகளையும் அழித்துவிடும். (Dr.DEBLOFF.)

2. ஐரோப்பாவின் எல்லாக் கோணங்களிலும் ஓதத் தகுதியுடைய ஒரு நூலே திருக்குர்ஆன். (Sir..DENISROSS)

3. போட்டியற்ற ஒரு நூலே திருக்குர்ஆன். (Rev.J.M. RODWELL.)

4. திருக்குர்ஆன் முஸ்லிம் அல்லாதவரோடு பொறுமையாகவும் ஒழுங்காகவும் நடந்து கொள்ளுமாறு தன்னைப் பின்பற்றுவோருக்கு அறிவுரை பகர்கிறது. இதன் போதனையால் உலகத்துக்கு சிறப்பும் செழிப்பும் அடைய முடியும். (Mrs.SAROJINI NAIDU)

5. திருக்குர்ஆன் முஸ்லிம்களை சகோதரத்துவம் எனும் கயிற்றில் பிணித்துள்ளது. இது நிறம் சாதி, பிறப்பு முதலான வேறுபாடுகளில் இருந்து தனித்தது (H.G.WELLS)

## குர்ஆன்

குர்ஆன் என்பது **கரஅ** என்னும் சொல்லிலிருந்து பிறந்தது. குர்ஆன் என்னும் சொல்லுக்குள்ள கருத்தை இரு வகையாய் பிரிக்கலாம்.

1. ஒன்று திரட்சி, ஒன்று சேர்ப்பு.

2. படித்தல், ஓதல்.

முதலாம் கருத்தை நோக்குமிடத்து இது உலகத்தில் அன்றாடமாய் நடக்கும் அனைத்தையும் ஒன்று திரட்டியும் அனைத்துக் கலைகளையும் தன்னகத்தடக்கியும் இருக்கின்றமையின் இக்கருத்து இதனுக்கு சாலப் பொருந்தும். மானிட வாழ்க்கை, பரமார்த்தீகம், பொருளாதாரம், அரசியல், சரித்திரம், விஞ்ஞானம், புவியியல், வேளாண்மை, வானவியல் முதலான அனைத்தையும் திரட்டிய ஒன்றாய் இஃது அமைந்திருப்பது கவனிக்கத்தக்கது.

இரண்டாம் கருத்தின் படி "என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா" வில் "திருக்குர்ஆன் எனும் வேதமானது ஏனைய வேதங்கள் யாவற்றையும் விட அதிகமாக பாராயணஞ் செய்யப்பட்டு வருகிறது" எனக் கூறப்பட்டுள்ளதும் இதை வலியுறுத்தும். ஓதல் அல்லது ஒன்று சேர்த்தல் எனும் இரு கருத்துக்களையும் நாம் ஆழ நோக்கின் அதினின்று புலப்படுவது போதனையின் சிறப்பு அல்லது அதன் பரிசுத்தச் செய்திகளாகும்.

**குர்ஆனின் வேறு பெயர்கள்**: திருமறைக்கு குர்ஆன் என மட்டுமல்லாது இன்னும் எழில் மிக்க பல பெயர்கள் உள. அவை: **கிதாப்** –வேத நூல்: **புர்கான்** சத்தியம் அசத்தியம் இவை இரண்டையும் பிரித்துக் காட்டுவது; **ஹக்ம்**– நீதிபதி; **ஹூதா** – நேர்வழி காட்டி; **புர்ஹான்**– தெளிவான ஆதாரம்; **மெளஇளத்** – உபதேசம் ; **ஹிக்மத்** –அறிவு.

## திருக்குர்ஆனின் பெரும் பிரிவுகளும் சிறு பிரிவுகளும்

திருக்குர்ஆனில் 114 அத்தியாயங்கள் உள்ளன. அவற்றிற்கு ஸூராக்கள் **(ஸூரா)** என்பர். மேலும் ருகூஉ களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது ருகூஉ என்பதற்கு உட்பிரிவு என்பது பெயர். இந்த உட்பிரிவுகளும் பல பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவைகள் ஆயத்துக்கள் **(ஆயத்)** எனப்படும். ஆயத் என்பதன் கருத்து வாக்கியமாகும். ஆயத்து என்பதற்குச் செய்தி, தூது எனும் கருத்துக்களும் மிகப் பொருந்தும். திருக்குர்ஆனில் 6247 ஆயத்துக்கள் உள்ளன. 113 அத்தியாயங்களின் தலையிலுமுள்ள 113 பஸ்மலாக்களையும் ஒன்று சேர்த்துக்கூட்டுமிடத்து 6360 வாக்கியங்களாகக் கணக்கிடலாம். மேலும் திருக்குர்ஆன் 30 **ஜுஸ்உ**க்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த ஒவ்வொரு ஜுஸ்வும் 1/4, 1/2, 3/4 என மூன்று பாகங்களாகவும் 7 மன்ஜில்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.

## மக்கிய், மதனிய் ஆயத்துக்கள்

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு 23 வருடங்களாக கொஞ்சம் கொஞ்சமாக கொடுக்கப்பட்டதே குர்ஆன். இக்காலத்துள்

13 ஆண்டுகள் மக்காவிலும் ஏனைய 10 ஆண்டுகள் மதீனாவிலும் வாழ்ந்தார்கள். எனவே மதீனாவில் இறங்கிய வாக்கியங்களுக்கு மதனிய் என்றும் மக்காவில் இறங்கிய வாக்கியங்களுக்கு மக்கிய் என்றும் அழைப்பர் . அந்நஸ்ரு என்னும் 110 ஆம் அத்தியாயம் மதீனாவில் இருக்கும் காலத்தில் இறங்கிய மக்கிய்யா ஸூரத்தாகும். ஏனெனில் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக மக்கா எழுந்தருளிய போது மக்காவில் வெளியான மக்கிய் ஆயத்தாகும். மதீனாவில் இறங்கிய அத்தியாயங்கள் குறைந்தவையே எனினும் அவற்றுள் அதிகமானவை பெரியவையே. இவ்விரு மக்கா மதீனா அத்தியாயங்கள் தனித்தனியாக வெவ்வேறாக தொகுக்கப்படாது இரண்டும் கலந்துள்ளன. மக்கிய் அத்தியாயங்களின் காலங்களை வரையறுத்துக் கூறல் முடியாதாயினும் மதனிய் வாக்கியங்கள் பத்று, உஹ்து, தபூக் போன்ற யுத்தங்கள் சம்பந்தமான விபரங்கள் காணப்படுவதனால் இதன் காலத்தினை வரையறுத்துக் கூறல் முடியுமாகிறது.

இவ்வாக்கியங்களான **மக்கிய்யா மதனிய்யா** ஆயத்துக்கள் கலந்திருக்கின்றன. தனிப்பட்ட முறையிலே **மக்கிய்யா**வை வேறாகவும் **மதனிய்யா**வை வேறாகவும் அமைத்திலர். இவ்வகையில் கலந்து தொகுத்திருக்கும் முறையிலே சிறந்த தத்துவம் அமைந்திருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. மக்கிய் ஆயத்துக்களிலே அதிகமாக தேவ நம்பிக்கை, தெய்வப்பண்பு, **(சிஃபத்)** தெய்வ உள்ளமை **(தாத்)** முதலான தெய்வ – ஆத்மீக சம்பந்தமான கருத்துக்கள் விளக்கப்பட்டுள்ளன. மதனிய் ஆயத்துகளில் தெய்வம் சம்பந்தமான கொள்கைகளை நடைகளில் எப்படிக் கொணர்தல் என்பது பற்றிய முடிவு கூறப்பட்டுள்ளது. எனவே மக்கிய் அத்தியாயங்கள் சித்தாந்தத்தையும் மதனீ அத்தியாயங்கள் அனுஷ்டான ஆதாரப் பகுதிகளையும் விளக்குகின்றன எனலாம்.

மக்கிய் மதனிய் அத்தியாயங்களில் இன்னொரு பாகுபாடுமுண்டு. மக்கிய் ஆயத்துக்களிலே முன்னறிவிப்பு தீர்க்கதரிசனங்கள் முதலாயின அடங்கியுள்ளன. மதனிய் அத்தியாயங்கள் அவற்றை நடைமுறையில் ஆக்கும் முறையை எடுத்துக்காட்டுகின்றன. மக்கிய் அத்தியாயங்கள் இறைவனிடம் எத்தகைய தொடர்பைக் கொள்வதனால் நம் ஆத்மா சாந்தி அடையும் என்பதையும், மதனிய் அத்தியாயங்கள் மக்கள் தமக்குள் பரஸ்பரத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் வாழ்க்கையை எவ்வகையில் சீர்படுத்தலாம் என்பதையும் விளக்குவனவாய் அமைந்துள்ளன. எனவே மக்கள் ஒரு புறத்தில் ஆத்மீகத்தையும் மறுபுறத்தில் லௌகீகத்தையும் முயலும் முறைமை இதில் விளக்கப்பட்டுள்ளது எனலாம். குர்ஆனைப் புரட்டும்போது மக்கிய்யா அத்தியாயங்கள் சித்தாந்தத்தையும்

அதனோடு கலந்திருக்கும் மதனிய்யா அத்தியாயங்கள் அனுஷ்டான முறைகளையும் விளக்குகின்றன. எனவே ஒரே முறையில் சித்தாந்தத்தையும் அதை அனுஷ்டிக்கும் முறையையும் அல்லது ஆத்மீகத்தையும் லௌகீகத்தையும் நோக்குவதிலும் மனித வாழ்க்கையில் ஆத்மீகமும் லௌகீகமும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து இருப்பனபோல் குர்ஆனும் ஒன்றோடொன்று பின்னிக் கலந்திருப்பது குர்ஆன் அமைப்பில் மக்கிய், மதனிய் ஆயத்துக்கள் அமைந்திருப்பதன் பொருத்தமான தத்துவமாகும்.

## தன்னிகரில்லாப் போதனைக் களஞ்சியம்

திருக்குர்ஆனுக்கு அளவற்ற சிறப்புகள் உண்டு. மக்களை நேர்வழி நடத்தும் தன்மையிலே தாய், தந்தையரையோ ஆசான்களையோ விடப் பல மடங்குகள் உயர்ந்ததாய் உள்ளது. இதைக் கீழ்காணும் திருவாக்கியத்தில் இருந்து கண்டு கொள்ளலாம்.**ஹுதன் லில் முத்தகீன்** *பயபக்தியையுடையோருக்கு நேர் வழி காட்டியாயிருக்கிறது* என்பதே அத்திரு வாக்கியமாகும்.

நபிகள் நாயகம் குர்ஆனின் செய்திகளையே போதித்தார்கள் என்பதற்கான திருமறை ஆதாரங்களும் பல உண்டு.

*1. அன்னார் அல்லாஹ்வின் வேதவாக்கியங்களை மக்களுக்கு ஓதிக் காட்டி அவர்களுக்கு ஞானத்தைப் போதிக்கிறவராய் இருக்கிறார்.*

*2. பாவக்கறையை விட்டு மக்களைப் பரிசுத்தப்படுத்துபவராய் இருக்கிறார்.*

*3. மக்களுக்கு ஆத்ம முன்னேற்றத்தை அளிக்கின்றவராக இருக்கின்றார்.*

மேற்கண்ட வாக்கியங்களிலிருந்து எங்கள் நாயகம் சிறந்த இறையின் செய்திகளைப் போதிக்கும் உண்மைப் போதகர் என்பது வெள்ளிடை மலையாகிறது.

அஞ்ஞான இருளிலே மூழ்கி இருந்த மக்களை நேர்வழி காட்டுவதற்காக பல நூற்றாண்டு காலமாக யூதர்களும் கிறிஸ்தவர்களும் அளவற்ற முயற்சிகள் எடுத்தனர். அரச பலமும் அவர்கள் கையில் இருந்து வந்த காலமே அது. அவர்களைச் சீர்திருத்துவதிலோ பல தெய்வக் கொள்கையை மாற்றி அமைப்பதிலோ அவர்கள் முயற்சியில் வெற்றி காணவில்லை என்பது மிகத் தெளிவே. ஆனால் திருக்குர்ஆன் 23 வருட காலத்துக்குள்ளேயே மக்கள் மத்தியில் நீங்காக் கறையாய் விளங்கிய பல தெய்வ வணக்கம், அநாகரிகம், மவுட்டியம், அனாச்சாரம் முதலிய அனைத்தையும் நீக்கி மனிதனின் உயர்த்தன்மையை நிலைநிறுத்தி , இலௌகிகம் பரமார்த்திகம் முதலானவற்றில் வழிகாட்டி, ஏக தெய்வக் கொள்கையையும் நற்குண நல்லொழுக்க நல்லாசாரங்களைக் கற்பித்து ஞானிகளாகத் திகழ வைத்து,

இந்நாகரீக உலகிலே தலை நிமிர்ந்து நிற்கச் செய்தது. அனைத்திற்கும் தெளிவான விளக்கங்கள் அருளியே மனிதனை நேர்வழியில் திருமறை திருப்பியது. இதற்கு *வேதக்காரர்கள் பல தெய்வ வணக்கக் காரர்களான தெய்வ விரோதிகள் தம்மிடம் தெளிவான அத்தாட்சி வரும் வரை (தீய மார்க்கத்தை விட்டும்) விலகிக் கொள்ளவில்லை.*" எனும் 98 ஆம் அத்தியாயத்தின் முதல் இரண்டு வாக்கியங்களும் ஆதாரமாய் உள்ளன.

## திருக்குர்ஆனின் பொருள் நயம்

குர்ஆன் மக்களுக்கு விழிப்புணர்ச்சியை அள்ளி யூட்டுவதோடு மட்டும் நின்று விடவில்லை. ஆனால் பல வகைத் தன்மைகளிலும் மனிதனைத் தன் பக்கம் ஈர்த்துள்ளது என்பதும் கவனிக்கத்தக்கது. மக்கள் அடைந்த விழிப்புணர்ச்சியைத் தூண்டி விடுவதாய் அமைந்துள்ளது. திருக்குர்ஆனில் காணப்படும் பொருணயம் இறைவனின் உள்ளமை (**தாத்து**) (**சிஃபாத்து** இயல்புகள்) மக்களின் செயலுக்குரிய சன்மானம், தண்டனை, இறுதித் தீர்ப்பு நாள், பரலோக வாழ்க்கை முதலியவற்றின் விளக்கங்கள் யாவும் எந்த மறையிலும் காணப்படாத ஒன்றேயாம். மதம் சம்பந்தமான சிக்கலான சில வார்த்தைகளுக்கு அல்லது பிரச்சனைகளுக்குத் தெளிவான வாக்கியங்களைக் கொண்டு தகுந்த ஆதாரங்களுடன் எளிய முறையில் விளக்கியுள்ளது. இந்த அரிய பொருள்கள் இஸ்லாமல்லாதாரின் காதுகளில் விழுந்த போதே இஸ்லாமா னார்களாயின் அதன் சிறப்பு எத்தகையது! இதன் அரிய கருத்துக்களைப் பண்டிதர் முதல் பாமரர் வரை அறிந்து கொள்வதில் இதற்கு ஒரு சிறப்பு இருந்து வருகிறது. மனிதன் கஷ்டப்படுகிறான். பின்னர் இலேசடைகிறான். இந்த வகையிலே மனிதன் அனைத்தும் கஷ்டமே என விட்டு தன் வாழ்நாளை வீணாக்கி விடாதிருப்பதற்காக அழகிய முறையிலே கீழ்க்கண்டவாறு தூண்டிவிடப்படுகிறது.

**ஃபஇன்ன மஅல் உஸ்ரி யுஸ்ரன். இன்ன மஅல் உஸ்ரி யுஸ்ரன். ஃபஇதா ஃபரக்த ஃபன்ஸப்**

*"நிச்சயமாக கஷ்டங்களுடன் இலேசும் இருக்கிறது. நிச்சயமாகவே கஷ்டங்களுடன் இலேசும் இருக்கிறது. எனவே நீங்கள் விடுவிக்கப்படினும் பின்னும் முயலுங்கள்"*

இரு விடுத்தங்கள் கஷ்டத்தையும் இலகுவையும் கூறி அதன் பின் முயற்சியைக் கூறித் தூண்டிவிடும் பொருணயம் போற்றத்தக்கது.

இஸ்லாத்துக்கு ஆரம்பத்தில் மாபெரும் எதிரியாக இருந்த உமர் (ரலி) அவர்களை இஸ்லாத்தின் பக்கம் திருப்பியது அறிவுக் களஞ்சியமாகிய அருள்

மழையின் உயர் வாக்கியங்களாகும். சகோதரியையும் மைத்துனரையும் தண்டிக்கச் சென்ற உமர் (ரலி) அவர்கள் 57 ஆம் அத்தியாயத்தின் 1 ஆம் வாக்கியம் முதல் 7ஆம் வாக்கியம் வரை படித்துப் பார்த்த அன்னாரின் உள்ளத்தை அவ்வாக்கியங்கள் கவர்ந்தன. அன்றே இஸ்லாத்தின் பக்கம் திரும்பினார்கள்.

## குர்ஆனின் சொல் நயமும் ஓசை நயமும்

பிஸ்மிலிலே உள்ள **ரஹ்மான் ரஹீம்** எனும் இரு சொற்களுமே ஆழ்ந்த கருத்தை நமக்களிப்பது தெரிந்ததே. **ரஹ்மான்** என்பது அருளாளன் என்றும் **ரஹீம்** அன்புடையோன் என்றும் பொருள் கொள்ளப்படுவதோடு இதற்கு விரிவான வேறு கருத்துகளையும் அளிக்கிறது. **ரஹ்மான்** உலகில் அனைவருக்கும் அருள் புரிபவன் என்றும், அவ்வுலகில் நம்பிக்கை கொண்டவர்களுக்கு மட்டும் அன்பு பாராட்டுபவன் **ரஹீம்** என்றும் சீரிய கருத்தை வெளிப்படுத்துகிறது. ஒரே ஒலியில் ஒரே சொல்லின் அடியிலிருந்து பிறந்த இவற்றின் சொன்னயம் வியக்கத்தக்கதே. குர்ஆன் வாக்கியங்களில் முதன்மையாயுள்ள பிஸ்மியிலே ஆத்மீக– லௌகீக கருத்துக்களைக் காட்டியதும் திருக்குர்ஆனுள்ளே லௌகீக– ஆத்மீக விஷயங்கள் கூறப்படுவதும் வியக்கத்தக்கதே.

அத்தியாயங்களில் ஆரம்பத்திலே ஒரே சொல்லே போன்று பல எழுத்துக்கள் சேர்ந்து ஆழ்ந்த பொருளையும் கொடுக்கின்றன. இத்தகையவை எம்மொழியிலும் இல்லாச் சிறப்பை எய்துவது மட்டுமல்லாது இலக்கியக் கருத்தாக்களுக்கும் ஒரு முன்மாதிரியாய் விளங்கி நிற்பது குறிப்பிடத்தக்கது. உதாரணமாக **காஃப், ஹா,யா, அய்ன், ஸாத். அலிப், லாம், மீம். அலிப், லாம், மீம். ஸாத்** போன்றவைகள் கருத்தறிபவர்களுக்கு மிக்க இன்பத்தைத் தூண்டி விடுகின்றன. இவற்றின் ஒவ்வொரு எழுத்தும் தனித்தனியே நின்று பல ஆழ்ந்த ஆத்மீகக் கருத்துக்களைக் கொடுக்கின்றன. உதாரணமாக **அலிஃப்** என்பது பிரபஞ்சத்தின் உள்ளமையின் ஆதியாய் அல்லது ஒன்றாய் விளங்கும் ஒரு தனித்தன்மையை அறிவிப்பதாய் விளங்குவதாகும். **லாம்** என்பது உள்ளமையின் அல்லது பிரபஞ்சத்தின் மையமாய் விளங்கும் அறிவை ஈந்த ஜிப்ரீலை விளக்குவதாகும். **மீம்** என்பது பிரபஞ்சம் அல்லது உள்ளமையின் இறுதியாய் அமைந்த முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை விளக்குவதாகும். **ஸாத்** என்பது நபிகள் நாயகத்தின் ஆக்கையாகிய **சூரத்**தையே எடுத்துக் காட்டுவதாகும். இத்தகைய இனிய விளக்கங்கள் ஆத்ம ஞானிகளின் திருக்குர்ஆன் விரிவுரைகளில் இருந்து கிடைக்கப்பெறுகின்றன. இந்த ஒன்றே திருக்குர்ஆனின் சொன்னயத்தை எடுத்து காட்டுவதற்குப் போதுமானதாகும்

எதுகைகள் தமிழிலே முதற் சீரின் கண்ணே வருவதை நாம் அறிவோம்.

ஆனால் ஆங்கிலம் அரபி போன்ற மொழிகளிலே கவிதைகளில் எதுகைகள் ஈற்றுச். ரிலே வருவது நோக்கத்தக்கது. குர்ஆனிலே உள்ள வாக்கியங்களைக் கவனிப்போரின் உள்ளங்களுக்கு ஏற்ற வகையில் அதன் பொருணயமும் சொன்னயமும் விளங்குவது போன்று இதன் ஓசை நயமும் விளங்குவதில் பெரும் வியப்புள்ளது. குர்ஆனை ஓதுபவருக்கு அதன் வாக்கியங்கள் இனிய வாக்கியங்களாகவும் கவிதைகளாகவும் மிளிர்கின்றன. நீண்ட வாக்கியங்களாயும் சிறு சிறு வாக்கியங்களாயும் அவற்றின் இறுதியில் எதுகைகளும் ஈற்றெழுத்து எதுகையாயும் நின்று, ஓதுவோருடையவும் கேட்போருடையவும் காதுகளுக்கு இன்ப இசையை அளித்து அவற்றில் பொதிந்துள்ள இன் கருத்துக்கள் மக்கள் இதயங்களுக்கும் இதம் அளிக்கின்றன. பொருணயமும் ஓசை நயமும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. இவற்றனுக்குக் கீழ்க்காணும் வாக்கியங்களும் அவற்றின் கருத்துக்களும் சிறந்த உதாரணங்களாவன.

**வஅஸிர்ரூ கௌலகும் அவிஜ்ஹரூ பிஹி. இன்னஹூ அலீமுன் பி தாத்திஸ் ஸுதூரி. அலா யஃலமு மன் கலக. வஹுவல் லதீஃபுல் ஹபீர்.**

*நீங்கள் உங்கள் பேச்சை ரகசியமாகக் கூறினும் பகிரங்கமாகக் கூறினும் நிச்சயமாக அவன் நெஞ்சங்களில் உள்ளவனவற்றை நன்கறிபவன். சிருஷ்டித்தவன் அவற்றை அறிந்து கொள்ள மாட்டானா? அவன் நுண்ணறிவாளனும் பூரண ஞானியுமாவான்.* ஒரே ஒலியுடைய சொற்களைச் சீராக அமைத்திருப்பதிலும் இதன் ஓசை நயம் குறிப்பிடத்தக்கது.

**இதா வகஅதில் வாகிஅது, லைஸ லிவக்அதிஹா காதிபதுன். ஹாஃபிழதுன் ராஃபிஅதுன். இதா ருஜ்ஜதில் அர்ளு ரஜ்ஜன்.(வ்)வபுஸ்ஸதில் ஜிபாலு பஸ்ஸன். ஃபகானத் ஹபாஅன் (ம்) முன்பஸ்ஸன்.**

*பிரளயம் சம்பவிக்கும் பொழுது அது சம்பவிப்பதைப் பொய்ப்பிப்போர் இல்லை. அது சிலரைத் தாழ்த்தும். சிலரை உயர்த்தும். பூமி பலமாக குலுக்கப்படும் போது மலைகள் பலமாக நொறுக்கப்படும் .அப்போது அவை பறக்கும் துகள்களாகும்.* உலக முடிவில் நிகழும் சம்பவங்கள் இங்கு இனிமையாய் கூறப்படுகிறது.மேலும் சுவர்க்கவாசிகள் அனுபவிப்பவற்றை எடுத்துக் கூறுவதிலே, சுவர்க்கத்தை இயற்கைக் காட்சிகளோடு சம்பந்தப்படுத்தி மக்களை அதன் பக்கம் இழுப்பதில் அழகிய உபதேசம் அருளப்படுவது மேலும் ரசிக்கத் தக்கது.

**பீ ஸித்ரின்(ம்) மஹ்லூதின் (வ்) வதல்ஹின் (ம்) மன்ளூதின் (வ்) வளிள்ளின் (ம்) ம்தூதின் (வ்) வமாஇன் (ம்) மஸ்கூபின் (வ்) ஃபாகிஹதின் கஸீரதின் (ல்) லா மக்தூஅதின் (வ்) வலா மம்னூஅதின் (வ்) வஃபுருஷிம் மர்ஃபூஅதின்.**

## ஏகத்துவம் சம்பந்தமான செய்தி (தவ்ஹீத்)

ஓர் இஸ்லாமியன் தான் செய்யவேண்டிய கடமைகள் ஐந்து. அவற்றுள்ளும் முதன்மை வாய்ந்ததாய் உள்ளது கலிமாவே. இந்தக் கலிமா ஏகத்துவத்தையே எடுத்தோதுகின்றது. இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஏகத்துவ வணக்கம் செய்வதற்காகவேதான் **பைத்துல்லாஹ்** என அழைக்கப்படும் **கஃபதுல்லாஹ்**வை நிர்மாணித்தார்கள். அவர்களின் அவ்வாலயம் 360 விக்கிரகங்கள் வணங்கப்படும் இடமாக மாறியது. இதன் பின்னரே நம் நாயகம் அவர்கள் தோன்றி பல தெய்வ வணக்கமான சிர்க்கை நீக்கினார்கள். தவ்ஹீதின் உண்மைப் போதனையைக் கொண்டு வந்தார்கள். **குல்ஹுவல்லாஹு அஹத்** எனும் இந்த சூரா, நிறைய ஏகனைப்பற்றியே கூறுகிறது. பெருமானாரின் ஏகத்துவக் கொள்கைக்கும் போதனைக்கும் ஏகனின் போதனைகளே உயிர் நாடியாய் விளங்கின. *"நபியே சொல்லும். அல்லாஹ்வாகிய அவன் ஒருவனே"* எனும் இக்கருத்து இறைவன் ஒருவன் என்பதை வலியுறுத்துகின்றது. அல்லாஹ் உடனே வேறு இறைவனை அழைக்க வேண்டாம் என இறைவனின் ஏகத்துவத்தைப் பற்றி குர்ஆன் கூறுகின்றது . *"அல்லாஹ் உடனே வேறு ஒரு இறைவனா"*? என இறை கேள்விக்கணை விடுக்கிறது. இப்படிப்பட்ட வகையிலே இறைவனின் ஏகத்துவத் தூதுவத்தோடு அவனை அடைவோர்களின் நிலைமைகளைப் பற்றியும் கூறுகின்றது. ஏகனே அல்லாத ஏனையவற்றை இறைவனாக மதிப்போருக்கு சவாலும் விடுகிறது. *"நீங்கள் கூப்பிட்டுக் கொண்டிருந்த அல்லாஹ் அல்லாதவர்கள் எங்கே?"* என நபிகள் மூலம் மக்களிடத்திலே கேள்வி கேட்கப்படுகிறது. நன்மையும் தீமையும் செய்ய சக்தியற்ற அல்லாஹ் அல்லாதவற்றை நீர் அழைக்க வேண்டாம் எனவும் பல தெய்வக் கொள்கை மறுக்கப்படுகிறது. "உங்களை ஆதரிப்பவனும் உங்களுக்கு உதவி செய்பவனும் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை" எனவும் ஏகனின் சக்தி கூறப்படுகிறது.

இந்த வகையிலே நபிகள் நாயகம் எதைத் தங்கள் இலட்சணமாய்க் கொண்டார்களோ அது இறைவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டு சீரிய உபதேசமாய் மக்கள் மத்தியில் விளங்கிற்று. அரசர்கள் தெய்வங்களாய் மதிக்கப்பட்டனர். சர்வ வல்லமையுடையவர்களாய் எண்ணப்பட்டனர். தத்தம் மார்க்கங்களைச் சிறப்புடையன வென்றும் உண்மையானவையென்றும் கருதி உண்மைக்கு மாறான வணக்கங்கள் நடாத்தினர். இத்தகைய மூடத்தனமான வணக்கங்களை எம்பெருமானார் குர்ஆனின் போதனை கொண்டு வேரோடு களைந்தனர் எனின் போதனையின் சிறப்புதான் என்னே!

## சகோதரத்துவம்

மக்கள் மத்தியில் பெரும் பிரளயம் ஏற்பட்டிருந்த அக்காலத்திலே தனித்தன்மையும் நயவஞ்சகமும் சுயநலமும் தாண்டவமாடின. நிம்மதியாய் மனிதனை மிருகத்தன்மை வாழ விடவில்லை. பெருஞ்செல்வராயும் மிக்க பலமும் பிரபலமும் வாய்ந்த அபூபக்கர் சித்திக் (ரலி) அவர்களே இஸ்லாத்துக்கு முன் வாழமுடியாத நிலையிலேயே மக்காவை விட்டு அபி சீனியாவுக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். வழியில் இப்னு தக்னா என்பவர் தன்னுடனே அழைத்துச் சென்று அவருடைய ஆதரவில் வைத்துக்கொண்டார். இந்நிலையிலே தான் திரு நபி எனும் ஒளிவிளக்குத் தன் சுடரை ஒளிர்க்க விட்டது. சகோதரத்துவமே தங்கள் இலட்சியமாய் கொண்ட நபிகள் நாதர் தங்கள் அருட் போதனையை ஆரம்பித்தார்கள்.

**வஃத்தஸிமூ பிஹபில்லாஹி ஜமீஅன். வலா தஃபர்ரகூ** *அல்லா(ஹ்)வின் கயிற்றை நீங்கள் யாவரும் பற்றிப் பிடியுங்கள். நீங்கள் பிரிந்து விட வேண்டாம்.*

பலாத்காரமும் அநீதியும் இம்சையும் பொறாமை– நயவஞ்சகத் தன்மையும் மனிதனை ஆழ் குழியில் இறக்கின. பிரிவினைகளையும் உண்டு பண்ணின. சகோதரத்துவம் ஏற்படின் மக்கள் சுதந்திரமாய் வாழ வழி பிறக்கும். ஒழுங்குபட்ட சமுதாயம் உண்டாகும். இந்த ஒவ்வொரு மனிதருக்கிடையிலும் ஒவ்வொரு நாட்டிற்கிடையிலும் சகோதரத்துவம் ஏற்படுத்தப்பட்டது. போதனையோடு மட்டுமல்லாது செய்கையிலும் காட்டப்பட்டது. *“தமது தொழுகையை நிறைவேற்றும் அடிமைகள் உங்கள் சகோதரர்கள்”* என்றார்கள். அரசன் முதல் அடிமை வரை ஒரே பள்ளியில் ஒரே நிரையில் தோளோடு தோள் சேர்ந்து நிற்கும் சகோதரத்துவம் இன்றும் காணப்படுகிறது. *“பலாத்காரத்தில் தன் கூட்டத்தாரோடு சேர்பவன் நம்மைச் சேர்ந்தவன் அல்லன். கொடுங்கோன்மையில் தனக்குப் பிறரை உதவி செய்ய அழைப்பவனும் நம்மை சேர்ந்தவன் அல்லன். தன் கூட்டத்தினர் அநீதி இழைப்பதற்கு ஒத்தாசை செய்பவனும் நம்மைச் சேர்ந்தவன் அல்லன் ”* என்ற வகையில் சமூகப் பற்றையும் நபிகள் நாயகத்தின் வாக்கியம் உண்டு பண்ணிவிட்டது . நபிகள் நாயகம் எதை அடிப்படையாய்க் கொண்டு போதித்தார்களோ அதுவே குர்ஆனின் உன்னத போதனையாயது.

## விஞ்ஞானம்

மழுங்கி இருந்த மக்களின் மூளைகளுக்குத் திருத்தூது வேலையை கொடுத்தது. **கலகல் இன்சான அல்லமஹூல் பயான்** *“மனிதனைப் படைத்து அவனுக்கு விளக்க அறிவைக் கற்பித்தான் ”* எனத் திருமறை கூறுகின்றது. அத்தோடு தண்டிப்பையும் இறுதியில் வெற்றியையும் வலியுறுத்துகின்றது.

**அல்லாஹுல்லதீ ஸஹ்ஹர லகும் வல்பஹ்ர லிதஜ்ரியல் ஃபுல்க ஃபீஹி பிஅம்ரிஹி** (45:12)

*"இறைவன் அவன் செயலைக் கொண்டு கப்பல் அதில் செல்வதற்காக கடலை வசப்படுத்தினான்"* எனத் திருமறை கூறுகின்றது. மேலும் கடலை வசப்படுத்தினான் என திருமறை கூறுகின்றது மேலும் "இறையோனின் செயலைக் கொண்டு இயங்கிக் கொண்டிருக்கும் இரவையும் பகலையும் சூரியனையும் சந்திரனையும் நட்சத்திரங்களை உங்களுக்காக வசப்படுத்தினான்" எனக் கூறுகிறது. கடலில் செல்லும் கப்பலுக்கு வான நட்சத்திரங்கள் உதவுகின்றன என்பது தெளிவாகின்றது. *"இதிலே ஊகித்துப் பார்ப்போருக்கு திருட்டாந்திரங்கள் உள்ளன"* எனவும் கூறுவதிலே மனிதன் ஊகிக்க ஊகிக்கப் பல கருத்துகளையும் பல ஆராய்ச்சிகளை அடைவதிலும் முதன்மை பெற ஊக்குவிக்கப்படுகிறான். கடலைப்பற்றிக் கூறுமிடத்து இறைவன் அதில் சிறந்த அறிவையும் போதனையையும் நமக்கு அளிக்கின்றான்.

*"அவன் அதிலிருந்து பச்சையான மாமிசத்தை உண்ணுவதற்காக கடலை வசப்படுத்தினான்".* என்றும் "அவற்றை நீங்கள் அணிவதன் பொருட்டு அலங்காரமான பொருள்களை நீங்கள் வெளியாக்கிறதற்காகவும் கடலை வசப்படுத்தினான்"என்றும் கூறப்படுகிறது. கடலில் உள்ளே அலங்காரப் பொருளாய் விளங்கும் சிறந்த முத்துக்கள் அரசர்கள் முடிகளில் கூட அணி வகையாய்த் திகழ்வதும் கண்கூடே.

**அல்லதீ ரஃபஅஸ்ஸமாவாதி பிகைரி அமதின் தரவ்னஹா** *"நீங்கள் காணக்கூடிய தூண்களின்றி வானங்களை அல்லாஹ் உயர்த்தினான்".* வானம் எத்தகையது என்றும் மூடர்களின் மூடத்தனமான கொள்கைகளை முறியடிக்கிறதாகவும் அமைந்துள்ளது . இதனால் வானம் ஒரு பொருள் அல்ல வென்றும் பொருள் அல்லாத காரணத்தால் தூண்களல்லாத பொருளின்றி உயர்த்தப்பட்டதென்றும் விளங்கக் கிடைக்கின்றது. "ஏழு வானங்களையும் பல தட்டுக்களாய் (மண்டலங்களாய்ப்) பிரித்துள்ளான். " ஏழு விதங்களைக் கொண்ட ஆகாயத்தின் தரங்களும் விதந்தோதப்பட்டுள்ளன. மேலும் "தரையிலும் கடலிலும் உள்ள இருளிலே உங்களுக்கு வழிகாட்டுவதற்காக அவன் நட்சத்திரங்களை உங்களுக்கு உண்டாக்கினான்".

## பொருளீட்டலும் செலவும்

மனிதன் உலகத்தில் வாழ்வதன் நோக்கமும் பொருள் ஈட்டலாயே இன்று அமைந்துள்ளது. மனிதனோ தன்மானத்தையும் தனித்தன்மையையும் இழந்து பொருளீட்ட முனைந்துள்ளான். சோம்பலாக மனிதன் சும்மா இருப்பதை இறை

விரும்பவில்லை. மனிதன் உழைக்கப் பிறந்தவனே. அவன் எவ்வளவு உழைப்பானோ அவ்வளவுக்கே அவன் மேன்மை அடைவான் என்பது கீழ்க்காணும் திருவாக்கியத்திலிருந்து விளங்கும். *“மனிதன் அவன் உழைக்கும் அளவே என்று (உயர்வு) இல்லை”* . எனவே மனிதன் உயர வேண்டுமாயின் அவன் உழைக்க வேண்டுமென திருவேதம் கூறுகிறது. பகற் பொழுது உழைக்கும் நேரமாய்க் கருதப்படுகிறது. *“நாமே பகற்பொழுதை வாழ்க்கைக்கு வேண்டியவற்றைத் தேடிக் கொள்ளும் நேரமாகவும் ஆக்கினோம்”* என இறைமறை கூறுவது குறிப்பிடத்தக்கது. இரவை மனிதனுக்கு ஓய்வு நேரமாகவும் பகலில் உழைக்கும் நேரமாகவும் இதை ஆக்கி இருக்கிறது. இதிலிருந்து விளங்கும். “(நபியே) உங்களுக்கு முன் நாம் அனுப்பி வைத்த தூதர்கள் எல்லாரும் நிச்சயமாக உங்களைப்போல உணவு அருந்துபவர்களாகவும் சந்தைகளுக்குச் செல்பவர்களாகவும் இருந்தார்கள்” எனவே நபிமார்கள் கூட வியாபாரம் செய்திருக்கிறார்கள் என்பது இதன் மூலம் நமக்கு அறியக் கிடைக்கிறது. நபிமார்களாகிய பெரியார்கள் கூட தொழில் செய்தார்களாயின் பொதுமக்களாகிய நாம் வாளா விருந்து வாழ்வை வீணாக்குவது நன்றன்றே. இதனாலேயே தான் இறை நபிகளை பற்றிக் கூறி நம்மையும் உழைப்பின் பக்கம் தூண்டிவிடுகிறது. தான் சம்பாதித்த பொருளை வீணாக்குவதை இறை விரும்பவில்லை. சிக்கனத்தையும் இறை விரும்புகிறது. தன் தேவைகளைப் பூர்த்தி செய்து அதன் மீதி உள்ளதைக் கொண்டு பிறர் தேவைகளையும் பூர்த்தி செய்ய இறை வேண்டுகிறது.

*“இன்னும் (நபியே! பிறர் நன்மைக்காக) எவ்வளவு செலவு செய்வதென்று உங்களிடம் கேட்கின்றனர். (உங்கள் தேவைக்குப் போக) மீதமுள்ளதை என்றுநீங்கள் கூறுவீராக”* என இறை கூறுகிறது. செல்வத்தைச் சம்பாதித்து கட்டுக்கட்டாய் அலுமாரியில் அடுக்கிப் பத்திரப்படுத்தி வைப்பதை இறை விரும்பவில்லை. சம்பாதித்ததை உண்டு மீதி உள்ளதாய் விளங்குவதைத் தர்மம் செய்யுமாறு இறை கூறுகிறது. எனவே தான் “நிச்சயமாக மிதமிஞ்சிச் செலவு செய்வோர் ஷைத்தானுடைய சகோதரர்களாய் இருக்கின்றனர்.”

பேராசையை அடியோடு ஒழிக்கும் வகையில் கீழ்க்கண்டவாறும் திருமறை பகர்கிறது.

*“நீங்கள் புதைகுழிகளைச் சந்திக்கும் வரையில் (பொருளைப்) பெருக்கவேண்டும் என்னும் பேராசை (இறைவனின் கட்டளைகளை விட்டும் உங்களைப் பராக்காக்கிவிட்டது.”* எனவே தான் சம்பாதித்ததில் தனது தேவைகளைப் பூர்த்தி செய்தபின் தருமம் செய்யவும் ஆணையிடுகிறது. தனது செலவில் ஒருபகுதி தருமமாகவே இருக்கவேண்டுமாய் திருமறை பகர்கிறது. பொருளைச் சேகரித்து வைத்திருப்பவனையும் நரக நெருப்பு அழைத்துக் கொள்ளும்.

## வாணிகம்

இஸ்லாத்திலே வாணிகம் முக்கியத்துவம் பெற்றது. இஸ்லாம் அல்லாதாரின் வாணிகத்துக்கும் இஸ்லாமியரின் வாணிபத்துக்கும் இடையிலே பலதரப்பட்ட ஏற்றத்தாழ்வுகள் உண்டு அளவிலும், பணத்திலும், பேச்சிலும், பொருளிலும் மேலும் வியாபாரம் சம்பந்தப்பட்ட எல்லாவற்றிலும் அவற்றுக்குரிய ஒழுங்குகள் குறிக்கப்பட்டுள்ளன.

*“அளவிலே மோசம் செய்பவர்களுக்கு மகத்தான கேடுதான்; அவர்கள் பிற மனிதர்களிடம் அளந்து வாங்கினால் நிறைய அளந்து வாங்கிக் கொள்கின்றனர். ஆனால் மற்றவர்களுக்கு அளந்து கொடுத்தாலும் நிறுத்துக் கொடுத்தாலும் (அளவை நிலுவையை) குறைத்து விடுகின்றனர். நிச்சயமாக அவர்கள் மகத்தான ஒரு நாளில் (இறை சன்னிதானத்தில்) எழுப்பப்படுவார்கள் என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்கவில்லையா? ” அந்நாளில் மானிடர்கள் அனைவரும் ரப்பின் முன்னே நின்று கொண்டிருப்பார்கள்.* இந்த வகையிலே வாணிபத்தின் சிறப்பு இனிதே விளங்குகின்றது. இதற்கொப்ப நபிகள் நாதரும் “விலைக்குச் சரியாக நிறு. சற்று முனைப்பாகவே நிறுத்துக் கொடு” எனக் கூறினர். இத்தகைய சீரிய, நீத, ஒழுங்கு முறைகளை குர்ஆனிலிருந்து நபிகளார் நமக்கு இனிதாய்ப் போதித்தார்கள். “ உங்களுக்கிடையே இணக்கமாக நடக்கும் வாணிகத்தின் மூலமாக அன்றி ஒருவர் மற்றொருவரின் பொருள்களைத் தவறான முறையில் உண்ணாதீர்கள்” என இறை எச்சரிக்கின்றது. மனிதன் வாழச் சம்பாதிக்கிறான். அவன் சம்பாத்தியத்தில் குழந்தைகள் முதல் கிழவர் வரை உயிர் வளர்க்கின்றனர். எனவே அவன் தேடுவது வம்பானதாய் இருத்தல் தகாது என்பதே இதிலிருந்து நாம் பெரும்பாலும் கவனித்தற் பாலதாகும்.

**வஇதா கிஸ்தும் ஃபஃதிலூ. குல் அமர ரப்பீ பில்கிஸ்தி**

“அளவைப் பூரணமாக அளந்து கொடுங்கள். ஏமாற்றிப் பிறரை நஷ்டப்படுத்துவோராக இராதீர்கள். நல்ல தராசு கொண்டு நிறுத்துக் கொடுங்கள் மக்களுக்குச் சேர வேண்டிய பொருட்களைக் குறைக்காதீர்கள்.”

---

**மனிதனுள் மாணிக்கக் குணங்கள் மூன்று;**

1) ஏழ்மை நிலையில் உள்ள ஒருவர் மக்கள் அவரை வசதிமிக்கவர் என்று எண்ணுமளவு அவர் தன் ஏழ்மையை மறைக்க வேண்டும். 2) மக்கள் சாந்தமானவர் என்று எண்ணுமளவு ஒருவர் தமக்கு ஏற்படும் கோபத்தை மறைப்பது. 3) மக்கள் உபகாரம் மிக்கவர் என்று எண்ணுமளவு ஒருவர் தன் கடினப் போக்கை மறைப்பது.

# யா ஷைகே ...கலீல் நாதரே!

யாஷைகே
கலீல் அவ்ன் வாப்பா ஞான குருவே...
எந்தன் மனம் விரும்பும் அன்புக் கூடாரமே...

அவ்ன் நாதர் ரவ்ளாவின் திசை நோக்கி
திருச்சி நகரம் இருக்கிறதே– என் மனம்
எம் குரு வழியில் ஞானப் புகழ் சேர்க்க
திருச்சி நகரமே ஜொலிக்கிறதே.

பல நாடு பல ஊர் மக்கள் முரீதீன்கள்
ஒன்று சேர்க்கும் இடம் ஞானப் பூந்தோட்டம்
எம் குருவின் ரவ்ளாவின் பொருட்டால்
திருச்சிக்குப் புகழ் சேர்கிறதே!
எந்தன் குருவின் ரவ்ளா திசைநோக்கி
திருச்சி நகரம் இழுக்கிறதே– என் மனம்
கேட்ட வரம் எல்லாம் கிடைக்குமே.

யா கலீல் அவ்ன் என அழைப்பவருக்கு
ஓடோடி வந்து உதவி சேரும்.
குருவின் இழப்பைக் கண்டு
கண்ணீர்த் துளிகளைக்கொண்டு
நான் துடைத்துப் பார்த்தபோது
ஞான ஒளி தீபமாய்
குருவின் குலக்கொழுந்தாய்
யாஸீன் அலி குரு நாயகமே
யாஸீன் அலி ஒளி முத்தே
வாழ்வளிக்கும் சுடராய்க் கிடைத்ததே!

காலத்தின் அதிபதியே கல்பின் ஒளியே
யாஸீன் அலி நாயகமே!
தாகம் தீர்க்கும் ஞான ஊற்றே!
யாஸீன் அலி நாயகமே... வாழ்க!
யாஸீன் அலி நாயகமே... எம் குருவே!

உம்மு . எம். முஹம்மத் அப்ளல் –அய்யம்பேட்டை.

# 5. நாங்கள் கண்ட முஹிய்யுத்தீனிய சன்னிதானம்

**A.** முஹம்மத்  ஸகரிய்யா (கப்பல் பொறியாளர்). ஹக்கிய்யுல் காதிரி .திருச்சி.

باسمك اللّهم ياحقّ.

هذه القصيدات المفيدات المباركات على المحبوب المرحوم
عارف ربّاني، وعاشق صمداني، قرباني في اللّه، الحاجّ الحرمين
خادم الاولياء والاصفياء، ذى الآداب والاحسان، المتقرّب
لوجه الرّحمان، الّذي عرف الحقّ واعترف، ومال عن الباطل
وانحرف، صوفي سيّد محمّد راوتّر رحمة اللّه عليه ورضي
عنه، وبقي فيه، ونجح بالمسؤل ونجا.
للقطب الفريد، والغوث الوحيد، تاج العارفين، وسراج
الواصلين، المكنّى بلسان الحقّ، والملقّب ببرهان الدّين، نائب
رسول اللّه ووارثه، امام الزّمان وسيف الامان، الحامل
بلواء التّوحيد، ابي محمّد السّيّد يٓس ابن السّيّد محمّد القادريّ
الحسنيّ الهاشميّ قدّس اللّه اسراره وافاض علينا برّه وبرهانه

غَابَ نَجْمٌ مِنْ جَوِّ اَهْلِ اصْطِفَاءِ ، بَعْدَ مَا ضَاءَ لَامِعًا بِالسَّنَاءِ

مِنْ كِرَامٍ عَلَوْا بِوِجْدَانِ شَوْقٍ ، لِوِصَالٍ بِرَبِّهِمْ ذِي الْبَقَاءِ

اَنَا اَعْنِي بِذَاكَ غَيْبُوبَ حِبِّي ، حَاجَ سَيِّدْ مُحَمَّدٍ ذِي الْحِبَاءِ

غَابَ عَمَّا سِوَى الْإِلٰهِ الْكَرِيمِ ، وَبَقِي فِيهِ بَاقِيًا بِالرِّضَاءِ

وَعَفَى عَنْهُ رَبُّهُ وَحَبَاهُ ، مَا تَمَنَّى بِهِ وَمَجْدَ اللِّقَاءِ

تَمَّتْ

குத்புல் மத்ஹரீ அவர்களும் பொதக்குடி ஸர்தார் அப்துல் கரீம் ஹள்ரத் வலிய்யுல்லாஹ் அவர்களின் மௌலிது ஷரீபை இயற்றிய ஆசிரியர் அபுல் ஜமால் முஹம்மது பத்ருத்தீன் அல்பாழில் நூரிய்யு அவர்களைக் கொண்டு கஸீதத்துல் ஹாஜ்ஜிய்யா என்ற பைத்தை எழுதுவித்தனர். அது மறைவாகவே இருந்து குத்புல் மத்ஹரீ நாயகம் மறைந்து பல வருடங்களுக்குப் பின்அவர்களின் அண்ணன் மகன் கீழக்கரை டவுன் காழி கே.எல்.எம்.முஹம்மது இப்றாஹீம் பாழில் நூரிய்யி அவர்களால் கண்டெடுக்கப்பட்டு கலீபா அப்துல் கரீம் ஜமாலி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த பைத்து கீழே தரப்பட்டுள்ளது.

*(பைத்து இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்...)*

---

**நல்ல மனிதனும் கெட்ட மனிதனும் :**

ஒரு முஃமின் நான் மீட்சி பெறமாட்டேன் என்ற பயத்தின் மூலமாகவே உயர்ந்துவிடுவான். பாவிகளைப் பொறுத்தமட்டில் என்னைப் போன்ற மக்கள் ஏராளம், என்னையும் அல்லாஹ் மன்னித்துவிடுவான். எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை.

அல்லாஹ்வுடைய ரஹ்மத்தோ பெரும் விசாலமானது எனக் கூறியே சீர்கெட்டுவிடுவான். – இமாம் ஹஸனுல் பஸரி(ரஹிமஹுல்ழாஹ்)–

# முகலாய மன்னர் ஷேர் ஷாஹ்

இந்தியாவில் முதல் நிலச்சீர்திருத்தம், தபால், முழுநெடுஞ்சாலை முதல் நமது நாட்டின் முதல்... ரூபாய் நாணயத்தை உருவாகியவர் யார் தெரியுமா?

நம் நாட்டிலேயே முதன் முதலில் ஒரு நாணயத்தை குறிப்பிட்ட எடையில் (11.5 கிராம்) வெள்ளி உலோகத்தில் அச்சிட்டு...

அதற்கு தூரூபியா என்று பெயரிட்டவர்...

மன்னர் தூஷெர்ல்ஷால்ஃபரீத்கான்ல்சூரி என்ற டில்லி சுல்தான். முதலாவது முகலாய மன்னர் பாபர் காலத்தில்... பிஹார் ஆளுநர் மறைந்ததும்... 1530ல் பிஹாரில் ஆளுநர் ஆனார் ஃபரீத் கான். அந்த வருடம் பாபர் மரணித்தவுடன் ஹுமாயூன் மன்னர் ஆன சமயத்தில்... பீஹாரில் மட்டுமின்றி வங்காளம் முழுதும்... தனிப்பட்ட அதிகாரமும் செல்வாக்கும் பெற்று மிகப்பெரிய சக்தியாக படை பலத்தோடு உருவெடுத்து விட்டார்.

கடைசியாக மன்னர் ஹுமாயுனை எதிர்த்துப் போரிட்டு... அவரைத் தோற்கடித்து விட்டு... 1540ல் டில்லியைக் கைப்பற்றி... முழு முஹலாயப் பேரரசுக்கும் மன்னர் ஆன ஃபரீத் கான்... தன் பெயரை தூசுல்தான்ல்ஷெர்ல்ஷால்சூரி என மாற்றிக்கொண்டார்.

ஷெர் என்றால் சிங்கம். ஷா என்றால் மன்னர். சூர் என்பது அவர் பிறந்த ஆப்கானிய பஷ்டூன் பழங்குடியினப்பெயர். சூரி என்றால் சூர் பழங்குடி பஷ்டூன் இனத்தை சார்ந்தவன். இதை சேர்த்ததன் மூலம் முஹலாயர் ஆட்சி முடிவுக்கு வந்ததை அறிவிக்கிறார்.

இந்தியாவிலேயே முதன் முதலில் அஞ்சல் நிறுவனத்தை (Postal System) கட்டமைத்தவரும் மன்னர் ஷெர் ஷா சூரிதான்.

இவருடைய பேரரசு... கிழக்கே வங்காளம் முதல் மேற்கே ஆப்கான் வரை பரவி இருந்தது. அஞ்சல் கடிதங்கள் எடுத்துச்செல்லும் குதிரை வீரர்களின் துரிதமான கடிதப் போக்குவரத்துக்காக... இன்றைய பங்களாதேஷ் நகரமான சிட்டகாங் முதல்... ஆஃப்கான் நகரமான காபூல் வரைக்கும் ஒரு சீரான சாலை அமைத்தார். அச்சாலை, கல்கத்தா, பாட்னா (பாடலிபுரத்தின் பெயரை பாட்னா ஆக்கியவர் இவர்தான்), ஆக்ரா, டில்லி, லாகூர் மற்றும் கைபர் கணவாய் வழியாக காபூல் சென்றது. இதுதான்... பின்னர்... கல்கத்தா டு காபூல்... பிரிட்டிஷ் ஆட்சியில் கிராண்ட் ட்ரங்க் ரோடு என புகழ்பெற்றது.

இதனை அடுத்து நாணய முறையை அறிமுகம் செய்தார்.

ஷெர் ஷா வுக்கு பாரசீக பஷ்டூன் மொழி தெரியும்..!

அவருக்குத் தெரிந்த மொழியில் அவர் அச்சிட்ட புத்தம் புதிய வெள்ளி நாணயத்துக்கு அவருடைய மொழியில் ரூபியா என பெயரிட்டார். இந்த வெள்ளி நாணயம் புழக்கத்தில் விடும்போது சில்லறை தட்டுப்போடு ஏற்படக்கூடாது என்று கூடவே... அதைவிட சிறிய அளவிலான செப்பு நாணயம் ஒன்றையும் வெளியிட்டார். அதற்கு அவர் வைத்த பெயர் தூதாம்.

இதேபோல... வெள்ளி நாணயப் புழக்கம் செல்வந்தர்கள் வசம் முடங்கி விடக்கூடாது என்பதற்காக... ரூபியாவை விட பெரிய அளவிலான நாணயம் ஒன்றையும் அச்சிட்டார். அது... 11 கிராம் எடை கொண்ட தங்க நாணயம். அதற்கு ஷெர் ஷா சூட்டிய பெயர்... தூமொஹூர்.

ஆக...

தாம் என்கிற செப்பு (copper) மதிப்பு குறைவு.

40 தாம் சேர்ந்தால்... ஒரு ரூபியா என்கிற வெள்ளி *(Silver)*.

15 ரூபியா சேர்ந்தால்... ஒரு மொஹூர் என்கிற தங்கம்.(Gold)

இதன் அடிப்படையில்தான் இன்று ஒலிம்பிக் முதற்கொண்டு... பல்வேறு தடகள போட்டிகளில்... வெற்றி பெற்ற முதல் 3 வீரர்களுக்கு இந்த 3 பதக்கங்கள் வழங்கப்படுகின்றன.

தூதங்கம்

தூவெள்ளி

தூசெப்பு (copper"s alloys bronze or brass)

காரணம்...

300 ஆண்டுகால பழக்கவழக்கப் புரிதல் ஆனது, தொடர்ந்தது.

இவ்வாறாக... மீண்டும் டில்லி ஆட்சியை கைப்பற்றிய மன்னர் ஹுமாயூன்... புழக்கத்தில் இருந்த இந்த... தூதாம்ல்ரூபியால்மொஹூர் நாணயங்களை வெளியிட்டவர் தன்னை தோற்கடித்து தன் ஆட்சியையே அழித்த எதிரியே ஆயினும்... நாணயம் என்பது நல்லதொரு மக்கள் நலத்திட்டம் என்பதால் தொடர்ந்து அந்த நாணயங்களை அங்கீகரித்து புழக்கத்தில் இருக்க விட்டார்.

காழ்ப்புணர்ச்சி ஏதும் காட்டி, செல்லாது என அறிவிக்கவில்லை. அதேநேரம்... தானும் தனது பெயரில் நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டார். அவருக்கு பின் வந்த அக்பர் உட்பட இந்த 3 நாணயங்களும்... அடுத்தடுத்து வந்த அரசர்களின் பெயர்களில் அச்சிடப்பட்டு... இந்திய நாணயங்களாக உலகளவில் பிரபலமாகி தொடர்ந்தன.

வங்காளத்தை வென்று கல்கத்தாவில் இருந்து ஆட்சி செய்த பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி... 1835ல் பணவீக்கம் காரணமாக... 2 மொஹூர் தங்க நாணயத்தை அச்சிட்டது.

1840 ல் ரூபியா நாணயத்தை தூருபீ என்ற பெயரில் அச்சிட்டது...!

போர்ச்சுகீஸ் அரசு கைப்பற்றி இருந்த பகுதிகளில் அது அச்சிட்ட நாணயங்கள் யாவும் ரூபியா என்றே அச்சிடப்பட்டு இருந்தன.

ஆக, ஷெர் ஷா சூரியின் ரூபியா... சூரி ஆட்சிக்கு பின் ஹுமாயூன், அக்பர், ஜஹாங்கீர், ஷாஜஹான், ஔரங்கஜெப் என்று தொடர்ந்து அடுத்தடுத்த 3 நூற்றாண்டுகளுக்கும் மேலாக முஹலாய ஆட்சியில் புழங்கிய ரூபியா பிரிட்டிஷ் ஆட்சி வரை நாடு முழுக்க ரூபியா புழக்கத்தில் இருந்தது. பிரிட்டிஷ் அரசு அதை ருபீ என உச்சரித்து... ருபீ என்றே உருது மொழியிலும் அச்சிட்டது. அன்று இரண்டு மொழிகள் மட்டுமே அந்த பிரிட்டிஷ் நாணயத்தில் இருந்துள்ளன... என்பதை நாம் கவனிக்க முடிகிறது.

ஆக... ஷெர் ஷா சூரி அறிமுகப்படுத்தி... முஹலாயர் ஆட்சியில் 300 ஆண்டுகள் புழக்கத்தில் இருந்த ரூபியாவை... பிரிட்டிஷ் அரசு நம்மீது #Rupee என திணித்தபோது... நாம் தமிழில் அதற்கு... ரூபியா + ருபீ = தூரூபாய் என பெயரிட்டு விட்டோம்..!

அடுத்ததாக... பிரிட்டிஷ் அரசு வெளியிட்ட முதலாவது காகித ரூபாய் நோட்டில்... 9 மொழிகளில் ஒன்றாக தமிழும் இடம்பெற்று இருந்தது. ஆனால், இந்தி அதில் இல்லை..!

100 ஆண்டு இந்தி உருவாக்கிய கில் கிரிஸ்ட் ஓர் வெள்ளையரே.

---

ஒரு ஏழை திடீரென அரசரானார். அவரின் நண்பர் ஒருவர் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்தார். இதைக் கேட்டதும் அந்த அரசர் “யாருக்கு வாழ்த்து கூறுகிறீர்கள். அரச பதவி கிடைப்பதற்கு முன்னால் உணவுக்கான கவலை மட்டுமே எனக்கிருந்தது. ஆனால் இன்று உலகக் கவலைகள்அனைத்தும் வந்துவிட்டது என்றார்

# கப்ரு மீது காழ்ப்புணர்ச்சி!

## நாடு எங்கே போகிறது?

அவுரங்கசீப் கல்லறையை அகற்ற வேண்டுமென வலியுறுத்தி இந்துத்துவா நாக்பூரில் கலவரத்தை துவங்கியுள்ளது!

மாவீரனை எழுப்பாதீர்கள்.... நீங்கள் தாங்க மாட்டீர்கள்!

ஒரு கல்லறை என்ன செய்யும்.?

ஜெருசலமும் அதை சுற்றி உள்ள பகுதிகளும் முழுமையாக சலாஹுத்தீன் அய்யூபி(ரஹ்) அவர்களின் கைக்குள் வந்தது. மாவீரன் சலாஹுத்தீன் அய்யூபி, கிபி 1193 ஆம் ஆண்டு மரணமடைந்தார். சுல்தான் சலாஹுத்தீன் அய்யூபி வெற்றியைப் பொறுத்துக் கொள்ள முடியாத சிலுவை யுத்தக்காரர்கள் மீண்டும் ஜெருசலத்தை எப்படியாவது கைப்பற்ற வேண்டும் எனக் காத்துக் கொண்டிருந்தனர். ஒரு வருடம், இரு வருடம் அல்ல 700 ஆண்டுகள் காத்திருந்தனர். 19 ஆம் நூற்றாண்டில் உதுமானியப் பேரரசை வீழ்த்தி, ஜெருசலத்தை மீண்டும் சிலுவை யுத்தக்காரர்கள் கைப்பற்றினார்கள். ஜெருசலத்தைக் கைப்பற்றியவுடன் கிபி 1917 ல் சிரியா சென்ற பிரிட்டிஷ் படை தளபதி எட்மண்ட் ஆலன் நேராக சலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் அடக்கஸ்தலம் சென்று Today The Wars Of Crusaders Are Complete இன்றோடு சிலுவை யுத்தக்காரர்களின் போர் முடிவு பெற்றது என்று கூறினான்.

அதன் பிறகு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு பிரான்ஸ் படைத்தளபதி ஹென்றி கொரோடு சுல்தான் சலாஹுத்தீன் அடக்கஸ்தலத்தின் மீது கால் வைத்து: Awake Salahudeen! We Have Returned, My Presence Here Consecrate The Victory Of The Cross Over Crescent" எழுந்திரு சலாவுதீன்! நாங்கள் திருப்பி வந்திருக்கிறோம்! புனிதத்தன்மை வாய்ந்த என்னுடைய வருகையின் மூலம் சிலுவை, பிறையை வென்றது. 700 வருட பகையைப் பாருங்கள்.... கடைசியாக 1924 ஆம் ஆண்டு ஜெருசலம் மீண்டும் யூதர்களின் கையில் சென்று விட்டது.

வரலாறு முக்கியம். ஏனென்றால் அது நிகழ்காலத்தை வடிவமைக்கிறது என்பார்கள் சுல்தான் ஸலாஹுதீன் வெற்றியும் அவரின் வரலாறும் எப்படி எதிரிகளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லையோ.? அதேபோல முகலாய மன்னர் மாவீரன் அவுரங்கசீப் வெற்றியும், வரலாறும் எதிரிகளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

அவுரங்கசீப்பை இந்துக்களுக்கு எதிராகக் கட்டமைக்க தொடர்ந்து இந்துத்துவா பாசிச கும்பல்கள் முயன்று வருகின்றன. இது அவருக்கு மட்டுமல்ல.... ஒட்டுமொத்த முகலாய மன்னர்களும் இந்துக்களுக்கு எதிரானவர்கள் என்று கட்டமைக்க அவர்கள் விரும்புகின்றனர். மன்னர் பாபர் முதல் மன்னர் பகதூர்ஷா வரை இதற்கு விதிவிலக்கல்ல. வரலாறுகளில் மண்ணுக்காகவும், அதிகாரத்திற்காகவும் எண்ணிலடங்கா போர்கள் நடந்துள்ளன. ஆனால் முஸ்லிம் மன்னர்கள் என்று வரும்போது மட்டும் அதை மதத்திற்காகவும் கலாச்சாரத்திற்காகவும் நடந்த போர் என இந்துத்துவக் கும்பல்கள் திரித்து, சித்தரித்து, தற்போதைய சூழ்நிலையில் அவர்களின் அரசியலுக்கும் தேர்தல் கால யுக்திகளுக்கும் பயன்படுத்தி வருகின்றனர். பிளவுவாத அரசியல் மட்டுமே நாம் தொடர்ந்து அதிகாரத்தில் இருக்க முடியும் என ஆணித்தரமாக நம்புகின்றனர். அதிலும் குறிப்பாக இந்த அவுரங்கசீப் என்ற பெயர் பாசிச கும்பல்களுக்கு மிகவும் எரிச்சல் ஊட்டக்கூடிய பெயர். இவரை விட முகலாய மன்னர்களில் விமர்சிக்கப்பட்ட மற்றொரு மன்னரை கைகாட்ட முடியாது என்ற அளவிற்கு இவர் மீது பொய்களையும், அவதூறுகளையும் அள்ளி வீசி வருகின்றனர்.

மன்னர் அவுரங்கசீப் பெயரில் உள்ள நகர்களையும், சாலைகளையும் பெயர் மாற்றம் செய்து ஆனந்தம் அடைந்தனர். ஆனாலும் வெறி அடங்கவில்லை. அவ்வப்போது மாமன்னர் அவுரங்கசீப் கல்லறையை அகற்ற வேண்டும் என பாசிச கும்பல்கள் பேசி வருவது வழக்கமான ஒன்று என்றாலும், இம்முறை மிகத் தீவிரமாக இறங்கியுள்ளனர். உள்ளாட்சித் தேர்தல் மிக நெருக்கமாக இருப்பதால் இவர்கள் தற்பொழுது இந்த விஷயத்தை அரசியல் வெற்றிக்கு பயன்படுத்த முயல்கின்றனர்.

அவுரங்கசீப்பை பற்றி whatapp ஸ்டேட்டஸ் வைத்த முஸ்லிம் இளைஞர் கைது! அவுரங்கசீப் பற்றி தவறாக சித்தரித்து படம் எடுத்ததை சட்டசபையில் சுட்டிக்காட்டிய எம்எல்ஏ சஸ்பெண்ட்!! இப்படி அவுரங்கசீப்பிற்கு ஆதரவாகப் பேசினால் நசுக்கி விடுவேன் என மிரட்டும் பாஜக முதலமைச்சர்கள்! எனப்பட்டியல் நீளுகிறது.

பாசிசம் அவுரங்கசீப்பின் வரலாற்றை இருட்டடிப்பு செய்கிறது. பொய்யையும் அவதூறையும் அவர் மீது தாராளமாக அள்ளித் தெளிக்கிறது. இவற்றையெல்லாம் கொண்டு தனது சித்தாந்தத்தை வெற்றி பெற வைக்க பல முயற்சிகளை மேற்கொள்கிறது.

ஔரங்கசீப்பின் கல்லறை மிகவும் எளிமையாகக் கட்டப்பட்டிருக்கிறது. அங்கு வெறும் மண் மட்டும்தான் இருக்கிறது. கல்லறை ஒரு சாதாரண வெள்ளைத்

துணியால் மூடப்பட்டிருக்கிறது. சமாதியின் மீது ஒரு செடி நடப்பட்டுள்ளது. இவ்வாறு தான் அவரின் கல்லறை அமைந்துள்ளது. இப்படித்தான் எனது கல்லறை சாதாரணமாக அமைய வேண்டும் என அவர் உயிர் எழுதி வைத்திருந்தார். அவரின் கல்லறையைக் கட்டுவதற்கு அந்த நேரத்தில் கல்லறையைக் கட்ட 14 ரூபாய் 12 அணா செலவானதாகச் சொல்லப்படுகிறது.

அவரின் கல்லறை மிக சாதாரணமாக இருக்கிறது என எண்ணி விட வேண்டாம். மன்னர் அவுரங்கசீப்பை எழுப்ப முயற்சிக்காதீர்கள், அது உங்களின் அத்தியாயங்களை முடித்து விடும், உங்களின் நிம்மதியை கெடுத்து விடும்

அவுரங்கசீப்பின் மீது எந்த அளவுக்கு பொய்களும் அவதூறுகளும் பரப்பப்படுகிறது, அந்தப் பொய்களுக்கும் அவதூறுகளுக்கும் எதிராக உண்மையை மக்களிடம் கொண்டு சேர்க்கும் விஷயத்தில் பொது சமூகம் தொய்வை சந்தித்துள்ளது. குறிப்பாக முஸ்லிம் சமூகம் வரலாற்றைப் படிப்பதையும் வரலாற்றைப் பரப்புவதையும் ஒரு பெரிய பாரச் சுமையாக கருதுகிறது.

பாசிசம் முஸ்லிம்களுக்கு எதிராக உயிரோடு இருப்பவர்கள் மீதும், உயிரற்ற சடலத்தின் மீதும் தாக்குதல் தொடுத்து வருகின்றனர். கருத்தியலாகவும், அரசியலாகவும், அனைத்து வகையிலும் யுத்தத்தைத் தொடங்கி விட்டார்கள். எந்த வகையில் எதிர்ப்புகள் வந்தாலும், அந்தத் தளத்தில் நின்று அதை முறியடிக்கும் வல்லமைகளை முஸ்லிம் சமூகம் பெற்றிருக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்!

அவுரங்கசீப்புகள் புதைக்கப்படவில்லை விதைக்கப்பட்டுள்ளார்கள் என்பதை சமகாலத்தில் வாழும் முஸ்லிம்கள் நிரூபிக்க வேண்டும். இல்லையென்றால் வரலாறு நம்மை மன்னிக்காது.

---

*ஆறு குணம், அறுவருக்கு அழகு; மற்ற அறுவருக்கு சிறப்பழகு.*

1, நீதம், மனிதனுக்கு அழகு, அதுவே தலைவர்களுக்கு சிறப்பழகு

2, தருமம் மனிதனுக்கு அழகு, அதுவே செல்வந்தர்களுக்குச் சிறப்பழகு

3. பேணுதல் மானிடர்கட்கு அழகு, அதுவே ஆலிம்களுக்குச் சிறப்பழகு

4. பொறுமை, மனிதர்களுக்கு அழகு அதுவே ஏழைகட்கு சிறப்பழகு,

5. பிராயச் சித்தம் மானிடர்கட்கு அழகு, அதுவே வாலிபர்களுக்கு சிறப்பழகு,

6. நாணம் மனிதர்கட்கு அழகு, அதுவே மங்கையர்களுக்கு சிறப்பழகு.

# பாத்திமா நாயகியார் கேள்வி பதில் பெண்களுக்கான போட்டிக்ககான பரிசளிப்பு விழா.

திண்டுக்கல் ஏகத்துவ மெய்யான சபை தரீக்கத்துல் ஹக்கிய்யத்துல் காதிரிய்யா சார்பில் பரிசளிப்பு விழா நிகழ்ச்சி திண்டுக்கல் எஸ்.பி.டி மஹாலில் நடைபெற்றது. ஆலிம் புலவர் எஸ். ஹுஸைன் முஹம்மது மன்பயீ விழா முன்னுரையும் பாத்திமா ரலி அவர்களின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கமும் கூறினார். ஹாஜா ஷரிப் யாஸீனி கிராஅத் ஓதினார். அப்துல் மஜீத் யாஸீனி ஏகத்துவ மெய்ஞ்ஞான ஸ்தாபகர் ஆத்ம ஞான மகான் ஜமாலிய்யா அஸ்ஸைய்யிது கலீல் அவ்ன் மௌலானா அல் ஹாஷிமி நாயகம் எழுதிய பத்ரு சஹாபாக்களின் தமிழ்ப் புகழ் மாலை பாடி விழா துவங்கப்பட்டது. நிகழ்ச்சியில் அறிஞர்கள் வாழ்த்துரைக்குப் பின்பு பரிசுகளின் தொகுப்பினை எஸ். காஜா நஜ்முதீன் வாசிக்க பரிசுகள் வழங்கப்பட்டன. இதில் முதல் பரிசை வென்ற திண்டுக்கல் கிரீன் பார்க் பள்ளி மாணவி எஸ். அப்ராவுக்கு முதல் பரிசு ரூபாய் 1500, விருது மற்றும் கிப்ட் பாக்ஸ் ஆகியவை வழங்கப்பட்டது. அவருக்குப் பயிற்சி அளித்த பள்ளி ஆசிரியை ஹுமைரா விருது கிப்ட் பாக்ஸ் மற்ற இரண்டு அரபி ஆசிரியர்களுக்கு ஆறுதல் பரிசாக எவர்சில்வர் பாக்ஸ், ஷால் வழங்கப்பட்டது. பாத்திமா நாயகியார் மாலை பாடிய மாணவர்களுக்கு ஆறுதல் பரிசுகள் வழங்கப்பட்டன. இரண்டாம் பரிசாக நான்கு நபர்களுக்கு தலா 500 ரூபாய் வழங்கப்பட்டது. மூன்றாம் பரிசாக 3 நபர்களுக்கு தலா 300 வழங்கப்பட்டது. போட்டியில் கலந்து கொண்ட மற்ற பெண்கள் அனைவருக்கும் ஆறுதல் பரிசாக எவர்சில்வர் பாக்ஸ் மற்றும் ஷால் ஒன்றும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினர்களாக திண்டுக்கல் மாவட்ட திருவருட் பேரவை கௌரவத் தலைவர் எஸ்.கே.சி. குப்புசாமி, மா.மூ.ஹாஜி. கே.எம். ஏ. முஹம்மது அலி, ஹிதாயத்துன்னிசா நிஸ்வான் மதரஸா நிறுவனர் ஹாஜி எஸ்.எம்.எஸ். சேட், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கல்யாண சுந்தரம், ஸ்ரீராமபுரம் ஹாஜி. முஸ்தபா பள்ளி தாளாளர் சார்பாக அரபி ஆசிரியர்கள், திண்டுக்கல் சமதிய்யா பள்ளிவாசல் முத்தவல்லி ஹாஜி. ஜே.முஹம்மது ரஹ்மத்துல்லா, யாஸீன் மௌலானா பேக்டரி உரிமையாளர் ஷேக் ஜாபர்அலி, பொறியாளர் சேக் தாவூது, முதுகுளத்தூர் பக்ருதீன் அலி அஹ்மது ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி சிறப்பித்தார்கள். இந்நிகழ்ச்சியில் ஏகத்துவ மெய்ஞ்ஞான சபையினரின் குடும்பத்தார்களும் கலந்து கொண்டார்கள். அவர்களின் மூன்று பரிசுகளுக்கும் தகுதியான அதிக மதிப்பெண்கள் பெற்றாலும் அவர்கள் பெருந்தன்மையுடன் அவர்களுக்கு கிடைக்க இருந்த பரிசுகளைப் பெறாமல் மற்ற போட்டியாளர்களின் மாணவிகளுக்கும், பொதுமக்கள், பெண்களுக்கும் விட்டுக் கொடுத்தது போற்றத் தகுந்தது. நிகழ்ச்சியின் போது எஸ்.பி.டி திருமண மண்டப உரிமையாளர் மணி அவர்களுக்கு நன்றி கூறப்பட்டது. விழா ஏற்பாடுகளை ஏகத்துவ மெய்ஞ்ஞானசபை செயலாளர் ஜே.முஹம்மது சதக்கத்துல்லா, அய்னுல் ஹக், ஜைனுல்ஹக் எஸ். காஜா நஜ்முத்தீன் சிறப்பாகச் செய்திருந்தனர்.

# தமிழும், தமிழரும்...

சிங்கப்பூரில் இந்தியர் என்பது தமிழன் தான்.

மலேசியாவில் இந்தியர் என்பது தமிழன் தான்.

மொரீசியஸில் இந்தியர் என்பது தமிழன் தான்.

ஐரோப்பிய யூனியனில் இந்தியர் என்பது தமிழன் தான்.

பிரான்சில், ஜெர்மனியில் போன்ற பல்வேறு ஐரோப்பிய நாடுகளிலும் கம்போடியாவில் தாய்லாந்து போன்ற ஆசிய நாடுகளிலும் இந்துக்கோவில்கள் என்பது தமிழர்கள் கட்டியது தான்

இலங்கையில் தமிழ் இரண்டாவது ஆட்சி மொழியாக இருக்கிறது. பாஸ்போர்ட்டில் கூட தமிழ் தான் இருக்கிறது.

மலேசியாவிலும் அரசு நிர்வாகம் மற்றும் அமைச்சர்களாக தமிழர்கள் தான் கோலோச்சுகின்றனர்.

சீன கம்னியூஸ்ட் அரசு இந்திய மொழிகளில் தமிழை மட்டும் தான் வானொலி சேவையாக வழங்கி வருகிறது.

கனடாவில் தமிழர் தினம் என்று ஒரு நாளை அரசே கொண்டாடுகிறது.

ஜப்பானில் தமிழில் அறிவிப்புப் பலகைகளை அரசு வைத்துள்ளது.

பிரான்ஸ் புனித லூர்து அன்னை ஆலயத்தில் ஒவ்வொரு நாளும் திருப்பலி நடத்தப்படும் மொழியும் தமிழ் தான்.

சிங்கப்பூர், மலேசியா, மொரீஸியஸ், இலங்கை நாடுகளின் காசுகளிலும் எழுதப்பட்டிருக்கும் ஒரே இந்திய மொழி தமிழ் தான்.

ஆறுக்கும் மேற்பட்ட நாடுகளில் இந்திய மொழிகளிலேயே அலுவல் மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரே இந்திய மொழியான தகுதியுடன் தமிழ் தான் சிறப்பாக இருக்கின்றது.

12 நாடுகளில் தமிழை அலுவல் மொழியாக்கும் பணிகளில் அந்தந்த அரசாங்கங்கள் ஈடுபட முனைந்து இருக்கின்றன.

200 நாடுகளிலும் வாழும் ஒரே இனம் உலகிலே தமிழ் இனம் மட்டும் தான்..

இதில் பல நாடுகளில் இந்திய தூதர்களாக இருப்பது தமிழர்கள் தான்.

உலகத்துடன் உண்மையாகவே இணைந்திருந்து இந்தியாவை அடையாளப்படுத்த வேண்டுமென்றால் இந்திய நாடு முழுவதும் தமிழைப் பாட மொழியாக வையுங்கள். இந்தியாவை உலகிற்கு தமிழ் அடையாளப்படுத்தும்.

# விழாக்கள் விதைகளாகும் விதியுமுண்டு.

தொடங்குங்கள் முடிந்து விடும் என்பது சத்திய வாக்கு.

இறைநம்பிக்கை கொண்டு இஸ்லாத்தில் இருந்தும் இறை நேசர்களுக்கு முக்கியத்துவம் இல்லை எனக்கூறும் வஹ்ஹாபிகள் இருந்தும் இறந்தவர்கள் தான்.

தன்னைத்தான் அறியா(து) பாவிகள்.

அல்ஹம்துலில்லாஹ். பாக்கியசாலிகளான நாம் கந்தூரி நினைவு விழா கொண்டாடி மகிழ்ந்திருக்னிறோம்.இனிவரும் காலங்களில் தொய்வின்றி நடந்திட துஆ கேட்கத்தான் செய்வோம் (இல்லையா). நாம் பல ஊர்களில் இன்றும் தொய்வின்றி நாகூர் நாயகம் அவர்களின் கந்தூரி தினத்தன்று ஊரில் (உள்ள அனைத்து சுன்னத் ஜமாஅத் இஸ்லாமிய மக்களின் மூலம் ஏற்பாடு செய்து) கந்தூரி சோறு போட்டு மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறார்கள்.

அவர்கள் பெயரில் ஓர் இடத்தில் கொடி பறக்கவும் விட்டிருப்பார்கள் உதாரணமாக, சிவகாசியில் பார்க்கலாம். (இப்ப எங்க ஊர்) தைக்கா ஏரியாவாக மக்கள் அழைப்பார்கள். சிலர் தத்தம் வீடுகளில் முஹையத்தீன் அப்துல் காதிர் ஜீலானி அவர்களின் உரூஸ் மாதத்தில் அதிகமான மக்கள் குழுவாக ஒன்று கூடி கொடி பறக்கச் செய்து கந்தூரி உணவு வழங்கிக் கொண்டாடுவதைப் பார்த்திருக்கிறோம். சென்னையில் உருது பேசும் சமூகத்தினர் சிறப்பாகச் செய்கிறார்கள். (சென்னையில் பார்த்திருக்கிறோம்).மேலும் அஜ்மீர் காஜா நாயகம் கந்தூரி நேரத்தில் கந்தூரி உணவு வழங்கி மகிழ்கிறார்கள் (ஹைதராபாத்தில் அதிகமாகப் பார்த்திருக்கேன்) அந்த வரிசையில் நம் சபையைச் சேர்ந்த ஆத்மீக சகோதரர்கள் அவர்கள் வாழும் ஊர்களில் நாடுகளில் சங்கை மிகு ஜமாலிய்யா வாப்பா கந்தூரி மற்றும் திருமுல்லைவாசல் யாசீன் வாப்பா கந்தாரி கொண்டாடி மகிழ்வார்கள். இப்போது திருச்சி நாயகமாக ஆட்சி செய்யும் குத்புஸ்ஸமான் ஷம்சுல் வுஜூத் ஜமாலிய்யா கலீல் அவ்ன் அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் கத்தஸல்லாஹூ ஸிர்ரஹூல் அழீம் அவர்களின் கந்தூரி விழா கொண்டாடி மகிழ்ந்தனர். அல்லாஹ் போதுமானவன். நாம் திட்டமிட்டிருக்கும் நம் தர்ஹா பல ஆயிரம் மக்கள் வந்து செல்லும் இடமாகும் காலம் வெகு தொலைவில் இல்லை. நம் செயல்திறன் அதிகப்படுத்தி நம்மால் முடிந்த அளவு அவர்களின் பேச்சுக்களை ( அவர்கள் சத்தமின்றி மேடைப் பேச்சாளர் போல அமுத மொழிகள் மற்றும் மெய்ஞ்ஞான விளக்கங்களை தெரியப்படுத்தி நம்மை பக்குவப்படுத்தி இருக்கிறார்கள். நிதர்சனம்)

நாம் இவ்வளவு பெரிய தர்ஹா வளாகம் திருச்சியில் ஏற்படுத்தும் போது நம் சபைகளின் மூலம் செய்யப்படும் விழாக்கள் மூலமும் அவர்களின் பேச்சுக்களை அசைபோட்டு புத்துயிர் பெற்று பகிர வேண்டும். மேலும் அவர்களின் தமிழ் ஆக்கங்கள் மற்றும் அரபி கஸீதாக்கள் மற்றும் திருக்குர்ஆன் விளக்கங்களை மறவாமல் வெளிக்கொணர பாடுபட வேண்டும். மற்றும் மக்கள் மத்தியில் ஒருவித நல்ல தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் பயான் செய்யும் ஞானவான்கள் மூலம் ஏக்கத்தை ஏற்படுத்தி திருச்சி நாயகத்தை தேடும் பாக்கியத்தை உருவாக்க வேண்டும்.

யாம் பெற்ற இன்பம் வையகம் பெறவேண்டும்.

ஊரார் வாழ கேடொன்றும் இல்லை என்பது ஏட்டளவில் இல்லாமல் நாம் நடைபோட வேண்டும். அப்போது தான் நாம் உண்மையில் அன்பு பெற்ற அதிர்ஷ்டம் கிடைக்கும்.

ஷெய்கு எப்படி பட்டவர்கள் தெரியுமா என்பதில் நின்றுவிடாமல் எங்கள் முரீதுப் பிள்ளைகள் எப்படி பட்டவர்கள் என சந்தோஷப்படுத்தும் நிலையில் இருக்க ஏக இறைவன் அருள் புரியட்டும்.ஆமீன்.

*எம். திவான் அப்துல் காதர்-ஹ.காதிரி, சென்னை.*

---

■அரேபியப் பெண்களின் வழக்கம், தன் பிள்ளைகள் அழுது கொண்டிருக்கும்போது தூங்கவைக்க மாட்டார்கள். .

பிள்ளையின் உடலில் கவலை ஊடுருவிச் செல்லும் என்ற அச்சமே இதற்கு காரணம். எனவே பிள்ளைக்கு சிரிப்புக்காட்டி, மகிழ்ச்சியுடன் தூங்க வைப்பார்கள்

இதனால் பிள்ளைகள் உடல் வளர்ச்சி பெறுவர், அவர்களின் நிறமும் ரத்தமும் தெளிவாகும், அறிவு வளம்பெறும்.

உனது கண்ணீருக்கு மதிப்பளிக்காதவனை விட்டும் உன் கவலையை எளிதாக நினைப்பவனை விட்டும் விலகியே நில்.

உனது கண்களை கலங்க வைக்கவோ உனது உள்ளத்தை உடைத்திடவோ யாருக்கும் உரிமையில்லை. மிக்க மோசமானதென்னவெனில், இவற்றையெல்லாம் காதல் என்ற பெயரில் சிலர் செய்துவிடுகின்றனர்.

இல்லையில்லை. அன்புக்குரியோர் காயப்படுத்த மாட்டார்கள். நாம் எல்லோரும் நிம்மதியாக உறங்கச் சென்றிடும் உரிமையுள்ளோரே! ***-டாக்டர் அத்ஹம் ஷர்காவி.-***

## இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

■ சங்கைமிகு தர்பார் நாயகம் அவர்களின் முரீது,ஆயிரம் விளக்கு A.முஹம்மது சித்திக் பாஷா அவர்களின்,மச்சானும் சங்கைமிகு வாப்பாங்க நாயகம் அவர்களின் மூரீதாவாகிய சென்னை ஆயிரம் விளக்கு மல்லிக்கா பேகம்அவர்களின், கணவர், தர்பார் நாயகத்தின் அஹ்பாப் ஆகிய,**ஜனாப். ஹபீப் ரஹ்மான்** (72),இறை அழைப்பை ஏற்றுக் கொண்டார். அன்னாரது நல்லடக்கம், 19.3.25 மக்ரிப் தொழுகைக்குப் பிறகு ராயப்பேட்டை அமீருன்னிசா பேகம் மையவாடியில் நல்லடக்கம் நடைபெற்றது. அன்னாரின் மறுமைவாழ்வு சிறக்க வேண்டுகிறோம்.

■ திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் தாலுகா கலிக்கம்பட்டி கிராமம் மர்ஹூம் கூடுமியான் ஸாஹிபு அவர்களின் மகனார் மர்ஹூம் ஷேக் படே ஸாஹிபு அவர்களின் மகனாரும் மர்ஹூம் ஷேக் தாவூது ஸாஹிபு அவர்களின் மகளார் மர்ஹூமா சலீமா அவர்களின் மகனாரும் கலிக்கம்பட்டி சூஃபி அமீர் பாஷா ஹள்ரத் காதிரிய் அவர்களின் மகனார் மர்ஹூம் நிஜாமுத்தீன் ஸாஹிபு அவர்களின் மருமகனாரும் மர்ஹூமா மஹமூதா பீவி அவர்களின் கணவரும் ஜனாப் முஹம்மது அப்துல்லாஹ் ஹக்கிய்யுல் காதிரிய் ஜனாப். அஹமது இப்ராஹீம் ஹக்கிய்யுல் காதிரிய் ஆகியோரின் அன்புத் தந்தையுமாகிய ஜனாப். **மஹபூப் பாஷா** ஹக்கிய்யுல் காதிரிய் (ஹிஜ்ரி 1446 ரமளான் பிறை15) மாலை சுமார் 04:30 மணியளவில் இறையடி சேர்ந்து விட்டார்.17.03.2025 திங்கட்கிழமை ளுஹர் நேரம் கலிக்கம்பட்டி அன்ஜுமன் காதிரிய்யா பள்ளிவாசல் கபுருஸ்தானில் நல்லடக்கம் நடைபெற்றது. அன்னாரின் மறுமைவாழ்வு சிறக்க வேண்டுகிறோம்.

■ ஆருயிர் செய்கு நாயகம் அவர்களின் முரீதும், மர்ஹூம் T. S. A. முஹம்மது யூசுப் அவர்களின் மகனும், மதுக்கூர் கலீபா அட்வகேட் A.N.M.லியாக்கத் அலி ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களின் மருமகனும் Dr.T.S.A.M.A.சமீர் முகம்மது யூசுப் அவர்களின் தந்தையுமாகிய **T.S.A.M. அப்துல் வாஹிது** அவர்கள் இறையடி சேர்ந்தார்கள். அன்னாரின் மறுமை வாழ்வு சிறக்க வேண்டுகிறோம்.

### *ஹஜ் செய்வது எல்லோர்மீதும் கடமையா ?*

பணவசதியுள்ளவர்கள் அவசியம் ஹஜ்ஜுக்குப் போக வேண்டும். அங்கு போனால் முக்கியமானது எம்பெருமானார் ரசூல்நாயகம் அவர்களைச் சந்திப்பதாகும். அவ்வாறு செய்பவர்கள் எம் மனதை குளிர வைப்பவர்கள். எம் பாட்டனார் பரிபூரணமானவர்கள். அவர்கள் ஹயாத்துடனிருக்கிறார்கள். அனைத்து புகழும் எம்பெருமானாருக்கே!

– சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் –

# படிக்கப் படிக்க வியப்பூட்டும் படகோனியா பனிப் பாலைவனம்!

படகோனியா - PATAGONIA

உலகில் இதுவரை கண்டு அறியப்படாத பல பகுதிகள் உள்ளன. அவற்றுள் ஒன்று படகோனியா.

தெற்கு அமெரிக்கக் கண்டத்தில், அர்ஜெண்டைனா நாட்டின் கிழக்குப் பகுதியில் இது அமைந்து உள்ளது. ஒரு பகுதி சிலி நாட்டிலும் இருக்கின்றது. இங்கேதான், அடகாமா குளிர் பாலை உள்ளது.

6,73,000 சதுர கிலோமீட்டர் நிலப்பரப்பு. தமிழ்நாட்டை விட ஐந்து மடங்கு நிலம்.

500 ஆண்டுகளாக மழைத்துளி விழாத இடங்கள் இங்கே உள்ளன.

தென் அமெரிக்கக் கண்டத்தில் நீண்டு செல்லும் ஆண்டஸ் மலைத்தொடரில்

4800 மீட்டர் (15000 அடிகள்) உயரத்தில் உள்ள இப்பகுதியில் புற ஊதாக் கதிர் வீச்சு கூடுதலாக இருக்கின்றது. இது மனிதர்களின் தோலை எரித்து விடும். எனவே, இங்கே ஆள் நடமாட்டம் இல்லை.

ஆனால், இங்கேயும் விலங்குகளும், பறவைகளும் உலவுகின்றன. வீட்டுப் பூனைகளை விட இரண்டு மடங்கு அளவில் பெரிய ஆண்டியன் பியூமா பூனைகள், சிங்கத்தின் தோற்றத்தைக் கொண்டு இருக்கின்றன.

உலகிலேயே கனமான எடையுடன், உயரமான இடங்களுக்குப் பறக்கக் கூடிய காண்டோலா கழுகுகள் உள்ளன. உயரம் ஒரு மீட்டர். சிறகுகள் விரிந்தால் 3 மீட்டர்.அதாவது ஒன்பது அடி அகலத்திற்கு விரியும்.

அது பறப்பதற்கு முன்பு, தன் ஒரு சிறகைப் பிடுங்கி எறிகின்றது. அது கீழே விழுந்தால் பறக்காது. காற்றில் மேல் நோக்கி அந்த ஒரு சிறகு பறந்தால், அதன்பிறகு தன் சிறகை விரித்துப் பறக்கின்றது. அதுவரை பொறுமை யாகக் காத்திருக்கின்றது.

ஒரு நாளைக்கு, சுமார் 400 கிலோமீட்டர் சுற்றித் திரிந்து உணவு தேடுகின்றது.

இரையை வேட்டையாடிய பிறகு, மூத்த கழுகுகள் சாப்பிட்ட பிறகுதான், இளைய கழுகுகள் சாப்பிடுகின்றன.

ஒட்டக இனத்தைச் சேர்ந்த நீண்ட கழுத்து உடைய விலங்குகள் ஆயிரக்கணக்கில் உலவுகின்றன. ரஜினி ஐஸ்வர்யா ஆடுகின்ற ஒரு பாடல் காட்சியில் பார்க்கலாம். 140 கிலோ

எடை வரை இருக்கும். ஆனால், அதை பியூமாக்கள் என்ற பூனைகள் வேட்டையாடுகின்றன. அதற்கு முன்பு, ஐந்து மணி நேரம் வரையிலும், தான் குறி வைக்கின்ற இரையைப் பின்தொடர்ந்து செல்கின்றது. ஒரு இடத்தில் வேகமாகப் பாயந்து, லாமாக்களின் பின்புறமாகத் தாவி ஏறி கழுத்தைக் கவ்விக் கீழே சாய்த்து விடுகின்றது.அடுத்த நான்கு நாட்களுக்கு அங்கேயே இருந்து அந்த உணவைச் சாப்பிடுகின்றது. அழிவின் விளிம்பில் இருக்கின்ற, எண்ணிக்கையில் உலகில் 700 மட்டுமே உள்ள, மிக அரிய வகை நடனமாடும் வாத்துகள் இங்கே உள்ள ஏரிகளில் உலவுகின்றன.இணை சேருவதற்கு முன்பு பலவகையான நடனங்களை ஆடுகின்றன.

இங்கே டைனோசர்கள் உலவியதற்கான அடையாளங்கள் உள்ளன. படகோனியாவில் செழிப்பான மழைக்காடுகள். இரவு நேரங்களில் கடுங்குளிர் நிலவுகின்றது. அந்தக் குளிரைத் தாங்க, சில எலிகள், தங்கள் இதயத்துடிப்பை நிமிடத்திற்கு மூன்று முறையாகக் குறைத்து விடுகின்றன.மரப்பொந்துகளுக்கு உள்ளே ஒன்றோடு ஒன்று ஒட்டிக்கொண்டு படுத்து உறங்குகின்றன.

உலகின் மிகச்சிறிய பூடோ மான்கள், 30 சென்டிமீட்டர் உயரம் மட்டுமே வளர்கின்றன. அவை படகோனியாவில் மட்டும்தான் உள்ளன.

4000 கிலோ எடை கொண்ட, உலகின் மிகப்பெரிய சீல்கள், படகோனியா கடற்கரைகளில் படுத்துக் கிடக்கின்றன. அவற்றிற்குக் கால்கள் கிடையாது. ஊர்ந்து செல்கின்றன. தடித்த தோல் கொண்டவை.தங்களுக்குள் யார் பெரியவன் என்பதற்கான போட்டியில், சண்டை யிட்டுக்கொண்டே இருக்கின்றன. கழுத்துப் பகுதியில் கடித்த காயங்களில் இருந்து சிவப்புக்குருதி வடிகின்றது.

நோர்வே நாடு போன்று, படகோனியா கடற்கரைளும், கடல் தண்ணீர் ஊடறுத்த நிலப்பகுதி கொண்டவை. அதை ஃபியோர்டு என்பார்கள்.

படகோனியாவில் எரிமலைகளும் உள்ளன.

படகோனியாவை ஒட்டி இருக்கின்ற அண்டார்டிகா கடல்கூட சில இடங்களில் உறைந்து போய்விடுகின்றது. 30 மீட்டர் நீளம் கொண்ட பனிப்பாறைகள் உண்டு. பருவநிலை மாற்றத்தால், இந்தப் பனிப்பாறைகளும் உருகி, கடலுக்கு உள்ளே அமிழ்ந்து போகின்றன.

அப்படி ஒவ்வொரு நாளும் 20 மீட்டர் பாறைகள் உடைந்து அழிகின்றன.

சிறிய வகை பெங்குயின்கள் 20 இலட்சம் உள்ளன.ரு இடத்தில், 4 கிலோ மீட்டருக்கு உள்ளே 87000 பெங்குயின்கள் உள்ளன.

தரையில் பதுங்கு குழிகளைத் தோண்டு கின்றன. அப்படி குழிக்கு உள்ளே பதுங்க முடியாத பெங்குயின்களை, பியூமா பூனைகள் வேட்டையாடுகின்றன. தனக்கும் தன் குட்டிகளுக்கும் சேர்த்து ஒருமுறைக்கு 8 பெங்குயின்களை வேட்டையாடுகின்றது.

படகோனியாவில், மிகக்குறைவான எண்ணிக்கையில், உயரம் குறைவான இடங்களில் வசிக்கின்ற மபுச்சி இன மக்கள், செம்மறி ஆடுகளை மேய்க்கின்றார்கள்.

அவற்றின் தோலில் அடர்ந்து வளரும் முடியைக் கத்தரித்து, குளிர் காப்பு உடைகளை நெய்கின்றார்கள்.

உங்கள் வீட்டு வரவேற்பு அறையில் இருந்து கொண்டு பேட்டகோனியாவை வலம் வர,

சோனி பிபிசி எர்த் தொலைக்காட்சியில் EDEN; UNTAMED PLANET நிகழ்ச்சி பாருங்கள்.

*தகவல் : அருணகிரி. மீள்பதிவு : காயல் அமானுல்லாஹ்*

---

# ஏன் அழைத்தாய் மகனே...

பெற்றவர்களை ஏன்அம்மா அப்பாஎன்று கூப்பிடுகிறோம்..!!

எப்பவாவது யோசிச்சிருக்கீங்களா.? அந்த வார்த்தைக்கும் நமக்கும் என்ன தொடர்பு..?

அந்த வார்த்தைகளுக்கான அர்த்தங்கள் என்ன...? இதோ....

அ உயிரெழுத்து.

ம் மெய்யெழுத்து .

மா உயிர் மெய்யெழுத்து.

அ உயிரெழுத்து.

ப் மெய்யெழுத்து .

பா உயிர் மெய்யெழுத்து.

தன் குழந்தைக்கு உயிரை கொடுப்பவர் தந்தை.

தாயானவள் தன் கருவறையில் அந்த உயிருக்கு மெய் (கண், காது, மூக்கு, உடல் உறுப்புகள்) கொடுப்பவள் தாய். .

இந்த உயிரும் , மெய்யும் கலந்து உயிர் மெய்யாக வெளிப்படுவது குழந்தை. எந்த மொழியிலும் அம்மா, அப்பாவுக்கு இந்த அர்த்தங்கள் கிடையாது.

நமது தமிழ் மொழியில் தான் இத்துனண அற்புதங்கள் உள்ளது..!!

மம்மி –என்பது பதப்படுத்தப்பட்ட பிணம்...

# முதியவர்களுக்கான சிறப்பு குறிப்புகள்

## (40/50/60 வயது)

1- **முதல் ஆலோசனை:** உங்களுக்கு தாகம் இல்லாவிட்டாலும் அல்லது தேவைப்படாவிட்டாலும் எப்போதும் தண்ணீர் குடியுங்கள், மிகப்பெரிய உடல்நலப் பிரச்சினைகளில் பெரும்பாலானவை உடலில் நீர் பற்றாக்குறையால் ஏற்படுகின்றன. ஒரு நாளைக்கு குறைந்தது 2 லிட்டர் தண்ணீர் குடியுங்கள்.

2- **இரண்டாவது அறிவுறுத்தல்:** உடலை வருத்தும் அளவு வேலை செய்ய வேண்டும், நடைப்பயிற்சி, நீச்சல் அல்லது எந்த வகையான விளையாட்டும் உடலின் இயக்கத்திற்கு நல்லதே.

3-**மூன்றாவது உதவிக்குறிப்பு:** குறைவாக சாப்பிடுங்கள்... அதிகமாக சாப்பிட வேண்டும் என்ற ஆசையை விடுங்கள்... ஏனென்றால் அது ஒருபோதும் நன்மை தராது. ஆனால் அளவைக் குறைத்து புரதம், கார்போஹைட்ரேட் நிறைந்த உணவுகளை அதிகம் பயன்படுத்துங்கள்.

4- **நான்காவது அறிவுறுத்தல்:** முற்றிலும் அவசியமானால் தவிர வாகனத்தைப் பயன்படுத்த வேண்டாம். மளிகைப் பொருட்களை வாங்க, யாரையாவது சந்திக்க அல்லது ஏதாவது வேலை செய்ய நீங்கள் எங்கு சென்றாலும், உங்கள் கால்களால் நடக்க முயற்சி செய்யுங்கள். லிஃப்ட், எஸ்கலேட்டர்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக படிக்கட்டுகளில் ஏறுங்கள்.

5- **ஐந்தாவது வழிமுறை:** கோபத்தை விடுங்கள், கவலைப்படுவதை நிறுத்துங்கள், விஷயங்களைப் புறக்கணிக்க முயற்சி செய்யுங்கள். தொந்தரவான சூழ்நிலைகளில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளாதீர்கள், அவை எல்லா ஆரோக்கியத்தையும் கெடுத்து ஆன்மாவின் மகிமையைப் பறிக்கின்றன. நேர்மறை நபர்களுடன் பேசுங்கள், அவர்களின் கருத்துகளைக் கேளுங்கள்.

6- **ஆறாவது அறிவுரை:** முதலில், பணத்தின் மீதான பற்றுதலைக் கைவிடுங்கள் உங்களைச் சுற்றியுள்ளவர்களுடன் இணைந்திருங்கள், சிரித்து, பேசி மகிழ்வுடன் இருங்கள். பணம் பிழைப்பிற்காக உருவாக்கப்படுகிறது, பணத்திற்காக உருவாக்கப்பட்டது வாழ்க்கை அல்ல.

7- **ஏழாவது குறிப்பு :** உங்களுக்காகவோ, உங்களால் சாதிக்க முடியாத எதையோ ஒன்றைப் பற்றியோ அல்லது நீங்கள் நாட முடியாத ஒன்றைப் பற்றியோ வருத்தப்பட வேண்டாம். அதை புறக்கணித்து மறந்து விடுங்கள்.

**8- எட்டாவது அறிவிப்பு :** பணம், பதவி, கௌரவம், அதிகாரம், அழகு, சாதி மற்றும் செல்வாக்கு; இவை அனைத்தும் ஈகோவை அதிகரிக்கின்றன. பணிவு மக்களை அன்புடன் நெருக்கமாக்குகிறது.

**9- ஒன்பதாவது குறிப்பு :** உங்கள் முடி வெள்ளையாக இருந்தால், அது வாழ்க்கையின் முடிவைக் குறிக்காது. இது ஒரு நல்ல வாழ்க்கையின் ஆரம்பம். நம்பிக்கையுடன் இருங்கள், நினைவாற்றலுடன் வாழுங்கள், பயணம் செய்யுங்கள், மகிழுங்கள். நினைவுகளை உருவாக்குங்கள்.

**10- பத்தாவது வழிமுறை :** உங்கள் குழந்தைகளை அன்பு, பச்சாதாபம் மற்றும் பாசத்துடன் சந்திக்கவும். அவர்களை கிண்டலாக எதுவும் சொல்லாதீர்கள். எப்போதும் உங்கள் முகத்தில் ஒரு புன்னகை வீசட்டும். கடந்த காலத்தில் நீங்கள் எவ்வளவு பெரிய பதவியில் இருந்தாலும், நிகழ்காலத்தில் அதை மறந்துவிட்டு, எல்லாவற்றிலும் கலந்து கொள்ளுங்கள்

## நபிமொழிகள்

தலைவன் நீதவானாக இல்லை எனின், மழை பெய்யா மேகத்தைக் போன்றாவான்.

செல்வந்தன் தர்மவானாக இல்லை எனின் பழமில்லா மரம் போன்றாவான்.

ஆலிம் பேணுதலாக இல்லை எனின், மற்றவர்களின் நன்மைக்காக, தன்னைத் தானே அழிக்கும் மெழுகுவர்த்தி போலாவான்.

ஏழை பொறுமையாக இல்லை எனின், புல் பூண்டற்ற பூமி போலாவான்.

வாலிபன் பிராயச் சித்தம் செய்யாதவனாக இருப்பின், தண்ணீரில்லாத கிணறு போன்றாவான்.

மங்கையர்கட்கு மானம், நாணம் இல்லைஎனின் உப்பில்லா உணவு போன்றாவாள்.

தலைவன் நீதமாக இருப்பின், அவனுக்குஇஸ்மாயீல் (அலை) அவர்களின் கூலி போன்று கூலி கிடைக்கும். செல்வந்தன் தர்மவானாக இருப்பின், இப்ராஹீம் நபி (அலை) யின் கூலி போன்று கூலி கிடைக்கும்.

மங்கை மான நாணமுள்ளவனாக இருப்பின், மரியம் (அலை) அவர்களின் கூலி போன்று, கூலி கிட்டும்.

ஆலிம் பேணுதலாக இருப்பின் யாகூப் நபி (அலை) யின் கூலி போன்று நற்கூலி கிடைக்கும்.

அப்துல்லாஹ் இப்னு மஸ் ஊது (ரலி) அறிவிக்கின் றார்கள். அல்லாவிற்காகவே, சிலர் வாழ்வர். அல்லாஹ் தஆலா அவர்களை தன் அருள் வடிவாகவே படைத்துள்ளான்.

மக்களில் சிலரை, தன் அருகிலிருந்து விலகிச் செல்பவராக சிலரை, பிறருக்குத் துன்பம் விளைவிப்பவராகப் படைத்துள்ளான். தேவையின் போது, அருளாவர்களிடம் வருவர். தேவை நிறைவேறிய பின், திடுக்கத்திலிருந்து நிம்மதியடைவர்.



# மதரஸா நன்கொடை



**மதுக்கூர்**

**K.M.M.A.** ஜமால் முஹம்மது மதரஸாவின் பெயரில் நிய்யத் வைத்து உடனே நிறைவேறியதை முன்னிட்டு ரூ. 8000/ம்,

**H.**அய்சல் பாத்திமா பூரண சுகத்திற்கும் நீண்ட ஆயுளுக்கும் துஆ செய்ய ரூ. 1,101/-ம்,

**M.** ஜஹ்ரா பரீதா பெயரில் அகீகா ஆடு ஒன்று 12,000/-ம்,

மர்ஹூமா **A.** மஹமூதா அவர்களின் மூன்றாம் ஸியாரத்திற்காக ரூ. 5000/-ம்,

**B.** அப்துல் ஹக்கீம் ரூ. 12000/-ம்,

**M.A.**அப்துல் கபூர், ரகுமத்துன் னிஷா இவர்களின் பெற்றோர், மூதாதையர்களின் மறுமை வாழ்வு சிறக்க ரூ. 3000/-ம்,

**M.K.** நத்தர்ஷா உண்டியல் சேமிப்பு ரூ. 3500/-ம்,

**A.** பல்கீஸ் பீவி ரூ. 3200/-ம்,

**O.P.U.A.** பஷீர் முஹம்மது பிள்ளைகள் குடும்பத்தார்கள் சிறப்பான நல்வாழ்விற்காக ரூ. 1500/-ம்,

ஃபைஹா இல்லிமீன் நீண்ட ஆயுளுடன் நோயற்ற வாழ்வு வாழ்வதற்கும் கல்வி ஞானத்தில் சிறந்து விளங்குவதற்கும் ரூ. 1000/-ம்,

கலீபா **M.** முஸ்தபா குடும்பம் சிறப்புடனும் நீண்ட ஆயுளுடன் வாழ்வதற்கு துஆ செய்ய ரூ. 1000/-ம்,

சேட் என்கிற சேக்பரீது ரூ. 10,000,

**U.** பர்ஜானா பீவி ரூ. 2500/-ம்,

**N.** மதியழகன் ரூ. 500/-ம்,

ஆழியூர் அபுல் பஸர் ரூ. 2000/-ம்,

ஃபைஹா இல்லியீன் ரமலான் பிறை 7ல் பிறந்தநாளை முன்னிட்டு ரூ. 1000/-ம்,

**A.** முஹம்மது பாரூக் மற்றும் ஹலீமா பானு திருமண நாளை முன்னிட்டு மனநிம்மதிக்கு துஆ செய்ய ரூ. 1000/-ம்,

S. முஹம்மது பாஹிர் பாதினா பேகம் பிறந்த நாளை முன்னிட்டு பிள்ளைகளின் நீண்ட ஆயுளுக்கும் குடும்பத்தினர் நிம்மதிக்கும் ரூ. 1000/-ம்,

S.ஃபாலில் அஹமது பிறந்த நாளை முன்னிட்டு நல்வாழ்விற்கும் நீண்ட ஆயுளுக்கும் துஆ செய்ய ரூ. 2000/-ம்,

S. தீன்னிஷா சென்னை. உடல்நல ஆரோக்கியத்திற்காக நீண்ட ஆயுளுக்கும் துஆ செய்ய ரூ. 2000/ம்,

N.பாஹீரா பிறந்தநாளை முன்னிட்டு துஆ செய்யவும் தேர்வில் நல்ல மதிப்பெண் பெற வேண்டியும் ரூ. 2000/-ம்,

N. சஹீரா பானு நாட்டங்கள் நிறைவேற ரூ. 2000/-ம்,

## திண்டுக்கல்

காந்திகிராமம் பத்தூல் மற்றும் குடும்பம் சதக்கா ரூ. 1000/ம்,

மதுரை S. சாகுல் ஹமீது பிப்ரவரி மாதம் சதக்கா ரூ. 1000 மார்ச் மாதம் சதக்கா ரூ. 1000/-ம்,

காரைக்கால் R.A. அப்துல் பாருக் பாத்திமா கடன்கள் அழிந்து குடும்பத்தார் அனைவரும் நலமுடன் வாழ துஆ செய்ய மாதாந்திர நன்கொடை ரூ. 500/

சென்னை S. சர்மிளா உசேன் உணவுக்காக ரூ. 1300/-ம்,சென்னை

ஈரோடு J. ஜரீனா நாட்டங்கள் நிறைவேற பதுறு சஹாபாக்கள் திருநாமங்கள் ஓதி துஆ செய்ய ரு. 5000/-ம்,

வழுத்தூர் முஹம்மது அம்மார் துஆ செய்ய ரூ. 3000/-ம்,

வழுத்தூர் உவைம் அஹமது துஆ செய்ய ரூ. 3000/-ம்,

வழுத்தூர் முஹம்மது துபைல் துஆ செய்ய ரூ. 2000/-ம்,

கிளியனூர் - அப்துல் பத்தாஹ் - பதர்நிஷா - முஹம்மது ஃபஹிம் - நஜீஹா - முஹம்மது பர்ஹான் கவலை இல்லாமல் மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடன் பரிபூரண சுகத்துடன் இருக்க வேண்டி துஆ செய்ய ரூ. 1000/,

பாக்கம் கோட்டூர் அப்துல் அஜீஸ் கவலை இல்லாமல் ஹாஜத்துக்கள் நிறைவேற வேண்டி துஆ செய்ய ரு. 500/-ம்,

பாக்கம் கோட்டூர் முஹம்மது அப்ஸல் காய்ச்சல் குணமாகி ஆரோக்கியமான நல்வாழ்விற்கு துஆ செய்ய ரு. 500/-ம்,

கிளியனூர் அப்துல் பத்தாஹ் உடல் நலம் பரிபூரண குணமடைய நிய்யத் செய்து துஆ செய்ய அப்துல் ஹமீது மூலம் ரூ. 500/-ம்,

மடத்துக்குளம் S.P. சேக்அப்துல்லா சாலிஹா பீவி துஆ செய்ய மாதாந்திர நன்கொடை ரூ. 1000/-ம்,

பாக்கம் கோட்டூர் முஹம்மது ஆஷிக் சம்பளம் விரைவில் கிடைத்து நல்ல வேலை கிடைக்க துஆ செய்ய ரூ. 500/-ம்,

கிளியனூர் முஹம்மது பர்ஹான் இடுப்பு - கால் வலி குணமாகி மகிழ்ச்சியும் ஆரோக்கியமான நல்வாழ்விற்கு துஆ செய்ய ரூ. 500/-ம்,

கடலங்குடி இஹ்ஸான் காய்ச்சல் பரிபூரண குணம் அடைய துஆ செய்ய ரூ. 500/-ம்,

திண்டுக்கல் பாத்திமா பஞ்சர் கடை நாகூர் மீரான் உண்டியல் எண் 73 சேமிப்பு ரூ. 1664 மற்றும் உண்டியல் எண் 74 சேமிப்பு ரூ. 1686 மொத்தம் ரூ. 3350/-ம்,

பாக்கம் கோட்டூர் முஹம்மது ஆஷிக் மற்றும் அயானா உடல் ஆரோக்கியத்திற்கும் ஆஷிக் அவர்கள் சம்பளம் பாக்கி விரைவில் கிடைத்து புதிய வேலை கிடைக்க துஆ செய்ய ரூ. 1000/-ம்,

கிளியனூர் முஹம்மது பர்ஹான் கால்வலி விரைவில் குணமடைய விரைவில் வேலை கிடைக்க துஆ செய்ய ரூ. 500/-ம்,

திருநெல்வேலி அஜாருதின் + அப்ஸரா பானு துஆ செய்ய ரூ. 550/-ம்,

திண்டுக்கல் M. நதீர் S/O முஹம்மது சதக்கத்துல்லா நிய்யத்படி மாதாந்திர மார்ச் மாதம் நன்கொடை ரூ. 1600/-ம்,

திண்டுக்கல் ராஜா முஹம்மது அவர்களின் மகன் R. நாதிர் 11 ஆம் வகுப்பு பொது தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற துஆ செய்ய ரு. 1001/-ம்,

சென்னை பாத்திமா என்ற செல்வி மகன் அல்தாப் அவர்களுக்கு நல்ல மணப்பெண் அமைந்து திருமணம் நடைபெற துஆ செய்ய ரு. 1000/-ம்,

திருநெல்வேலி ராஜின் மைதீன் துஆ செய்ய ரூ. 450/-ம்,

**CAMP SINGAPORE M.**பாகிரா **(D/0** ஹாஜி **JMR.)** சாகுல்ஹமீது ஒரு மாணவரைத் தத்தெடுத்து ஒரு ஆண்டுக்கு ஆன ஹதியா ரூ. 36000/

உத்தமபாளையம் அஷ்ரப் அலி மகள் **A.**ஸாஹிரா நிய்யத் நிறைவேறியதற்காக ஆடு1க்கு ரூ. 12000/-ம்,

அய்யம்பேட்டை குண்டு **J.M.** ஜெயினுல்லாபுதீன் வயது மூப்பு காரணமாக (நோன்பு வைக்க இயலாததால்) ஃபித்யா ஹதியா ரூ. 3000/-ம்,

**வழங்கினர். வழங்கிய வள்ளல்களுக்கு அல்லாஹ் அவர்களின் நாட்டங்களை நிறைவேற்றியருள்வானாக.**

கறுப்பு நாள்.

## மக்களவையில் நிறைவேறியது வக்பு திருத்த மசோதா

### ஆதரவு 288, எதிர்ப்பு 232:

மக்களவையில் ஆளும் தரப்புக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் இடையில் விடிய விடிய நடந்த காரசார விவாதத்துக்குப் பிறகு வக்பு திருத்த மசோதா நிறைவேறியது. இதற்கு ஆதரவாக 288 பேரும், எதிராக 232 பேரும் வாக்களித்தனர். வியாழக்கிழமை அதிகாலை 2 மணியளவில் இந்த மசோதா நிறைவேறியது. தொடர்ந்து இன்று (ஏப்ரல் 3) மாநிலங்களவையில் இந்த மசோதா விவாதிக்கப்பட உள்ளது.

திருத்தப்பட்ட வக்பு மசோதாவில் மத்திய வக்பு வாரியம் மற்றும் இதர வக்பு வாரியங்களில் முஸ்லிம் அல்லாத இரண்டு உறுப்பினர்கள் கட்டாயம் இடம்பெறுவது இதில் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த விதி சர்ச்சைக்குரிய விஷயமாக எதிர்க்கட்சி தரப்பில் பார்க்கப்படுகிறது. இதை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கடுமையாக விமர்சித்தனர்.

இது அரசியலமைப்புக்கு எதிரானது என எதிர்க்கட்சிகள் விமர்சித்தன. மேலும், இந்த மசோதாவை ஆராய நாடாளுமன்ற கூட்டுக் குழுவில் அங்கம் வகித்த தங்களது பரிந்துரைகள் கருத்தில் கொள்ளவில்லை என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வாதம் செய்தனர். இதன் மூலம் சிறுபான்மையின மக்கள் வஞ்சிக்கப்பட்டுள்ளதாக காங்கிரஸ் கட்சி விமர்சித்தது.

மசோதாவை தாக்கல் செய்த அமைச்சர் கிரண் ரிஜிஜு: வக்பு சட்ட திருத்த மசோதாவை மத்திய சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு மக்களவையில் நேற்று மதியம் 12 மணிக்கு தாக்கல் செய்தார். அப்போது எதிர்க்கட்சியினர் கடும் எதிர்ப்பு தெரிவித்து கோஷம் எழுப்பினர். எனினும், அமைச்சர் கிரண் ரிஜிஜு மசோதா மீதான விவாதத்தை தொடங்கி வைத்துப் பேசியதாவது:

வக்பு திருத்த மசோதாவுக்காக அமைக்கப்பட்ட நாடாளுமன்ற கூட்டுக் குழுவுக்கு, 92.27 லட்சத்துக்கும் மேற்பட்ட மனுக்கள் நேரடியாகவும் இணையவழியிலும் குவிந்தன. அவை ஒவ்வொன்றையும் ஆராய்ந்து அதன் அடிப்படையில் அறிக்கையை தாக்கல் செய்துள்ளது. மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் வக்பு வாரியங்கள் மட்டுமல்லாது 284 குழுக்கள் தங்கள் கருத்துகளை தெரிவித்தன. அதன் அடிப்படையில் இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.சீர்திருத்தங்களை கொண்டுவரவும் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யவுமே வக்பு திருத்த மசோதா வகை செய்கிறது.

இந்த மசோதா –உமீது– மசோதா என பெயர் மாற்றப்படும். ((Unified Waqf Management Empowerment, Efficiency and Development (UMEED) அனைத்து மத அமைப்புகளையும் அவற்றின் சுயாட்சியையும் அரசு மதிக்கிறது. அவர்களுடைய மத விவகாரங்களில் தலையிட அரசு முயற்சிக்கவில்லை. அதேநேரம், சொத்துகளை நிர்வகிக்கும் விவகாரத்தில் தேவையான இது முற்றிலும் சொத்துகளை கண்காணிப்பது மற்றும் நிர்வாகம் செய்வது பற்றிய விஷயம் ஆகும். குறிப்பாக, இப்போது உள்ள சட்டத்தின் 40–வது பிரிவின்படி எந்த ஒரு நிலத்தையும் வக்பு சொத்து என வக்பு வாரியத்தால் அறிவிக்க முடியும். இந்த கடுமையான பிரிவு நீக்கப்படுகிறது. அதேநேரம் மசூதி நிர்வாகத்தில் எந்த மாற்றமும் செய்யப்படமாட்டாது.

முஸ்லிம்கள் நிலம் பறிக்கப்படாது. இந்த புதிய மசோதா முஸ்லிம்களின் நிலத்தை பறிக்க வகை செய்வதாக எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டுகின்றனர். ஆனால் அவ்வாறு எந்த நிலமும் பறிக்கப்படாது. இந்தப் பிரச்சினையை அரசியலாக்க முயற்சிக்கிறார்கள்.டெல்லியில் உள்ள நாடாளுமன்றம் உட்பட பல சொத்துகள் தொடர்பாக 1970 முதல் ஒரு வழக்கு நடந்து வருகிறது. இந்த சொத்துகளுக்கு டெல்லி வக்பு வாரியம் உரிமை கோருகிறது.மோடி அரசு ஆட்சிக்கு வராமல் இருந்திருந்தால், பல சொத்துகள் வக்பு வாரியத்தின் வசமாகி இருக்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகள் தாக்கு: மக்களவையில் தாக்கல் செய்யப்பட்ட வக்பு திருத்த மசோதாவுக்கு திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. இதையடுத்து, காங்கிரஸ் எம்.பி. கவுரவ் கோகோய் பேசும்போது, அரசியல் சாசனத்தை நீர்த்து போகச் செய்வதும், சிறுபான்மையினரின் வாக்குரிமையை பறித்து அவர்களை இழிவுபடுத்துவதும், இந்திய சமூகத்தில் பிளவை ஏற்படுத்துவதும்தான் இந்த மசோதாவின் நோக்கம். நாடாளுமன்ற கூட்டுக்குழு ஆய்வின் போது, எதிர்க்கட்சிகள் முன்வைத்த ஆலோசனைகள் முற்றிலும் நிராகரிக்கப்பட்டனஎன்றார்.

மக்களவையில் ஒரு முஸ்லிம் உறுப்பினர் கூட இல்லாத கட்சிக்கு இன்று முஸ்லிம்கள் நினைவில் வந்திருக்கின்றனர். வக்பு சொத்துகளில் சுமார் 27 சதவீதம் உத்தர பிரதேச மாநிலத்தில் உள்ளது. அங்கு அடுத்த 18 மாதங்களில் தேர்தல் நடைபெற உள்ளது. அங்கு வரலாற்று சிறப்பு மிக்க மசூதியை இடித்து அயோத்தியை உருவாக்கினீர்கள். உங்கள் நோக்கம் நல்லதாக இருந்திருந்தால், அயோத்தி குழுவில் ஒரு முஸ்லிம் உறுப்பினரைச் சேர்த்து இருப்பீர்கள் என்று ஷிரோமணி அகாலி தள எம்.பி ஹர்சிம்ரத் கவுர் பாதல் தெரிவித்தார். *(செய்தி இந்து தமழ்திசை)*

# சங்கைமிகு ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் அல்ஹாஷிமிய் மௌலானா நாயகம் அவர்களின் அரிய நூற்கள்

1. தர்ஜுமதுல் குர்ஆன் மஅத் தஃப்ஸீரி வத்தப்ஸீர் (முதல் ஜுஸ்வு)
2 காமூஸ் அறபு – தமிழ் அகராதி (2 பாகம்) (யாஸீன் மௌலானா (ரலி)
3. பதுறு மவ்லிது (அறபு மூலம்– தமிழ் மொழி பெயர்ப்பு)
4. ராதிபதுல் ஹக்கிய்யத்தில் காதிரிய்யா (அறபு)
5. பேரின்பப்பாதை
6. யாஸீன் நாயகம் (ரலி) வரலாறு
7. குத்புகள் திலகம் யாஸீன் மௌலானா (ரலி) கவிதை
8. மனிதா(அமுத மொழிகள் தொகுப்பு)
9. தாகிபிரபம்
10.துஹ்ஃபதுல் முர்ஸலா (அறபு மூலம்– தமிழ் மொழி பெயர்ப்பு)
11. ரிஸாலதுல் கௌதிய்யா (அறபு மூலம்– தமிழ் மொழி பெயர்ப்பு)
13.கஸீதத்துல் அஹ்மதிய்யா (அறபு மூலம்– தமிழ் மொழி பெயர்ப்பு)
14.இறையருட்பா (கவிதை)
15. அற்புத அகில நாதர் (கவிதை)
16.நாயகர் பன்னிரு பாடல் (கவிதை)
17. மகானந்தாலங்கார மாலை (சித்திரக்கவி)
18.அவ்ன் நாயகரின் அருள்மொழிக் கோவை (தமிழ் – ஆங்கிலம்)
19. ஈழவள நாட்டில் பயிர் பெருக்க வாரீர்
20. ஹகாயிகுஸ்ஸபா (பரமார்த்தத் தெளிவு)
21.மருள் நீக்கிய மாநபி
22.ஒளியை மறைக்கத் துணியும் தூசி
23. இறைவலிய் செய்யிது முஹம்மது மௌலானா
24. உண்மை விளக்கம்
25.WATER BOOTH.
25. உமர் (ரலி) புராணம் (விரைவில்)
26. குறிஞ்சிச் சுவை

**கிடைக்குமிடம்:**

**மதுரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக்கல்லூரி**

சீத்தப்பட்டி பிரிவு, ஜே.ஜே.பொறியியல் கல்லூரி அருகில்,

பூலாங்குளத்துப்பட்டி, மணப்பாறை ரோடு –திருச்சி 620009

செல்: 9943786269 -9944576165

Registered with R.N.I. No. TNTAM / 2009 / 27865
Postal Registration No. DDL / 08 / 2024 - 2026
Date of Publication on 7th, Posted on 10th, of Every Month at H.P.O. Dindigul

## தர்ஜுமத்துல் குர்ஆன் – மஅத் தஃப்ஸீரி – வத்தப்ஸீர்

குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்களின் தெளிவான தமிழ் மொழி பெயர்ப்பு – விளக்க உரை – தெளிவுரை – ஆன்மீக விளக்கக் குறிப்பு களுடன் கூடியது. தமிழில் இதுவரை வெளி வராத அற்புத படைப்பு. விலை ரூ.100 – (கொரியர் செலவு தனி)



## அரபு – தமிழ் (காமூஸ்) அகராதி

குத்புல் ஃபரீத் ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் (ரலி) அவர்களின் கை வண்ணத்தில் உருவாகி, குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் அவர்கள் புதிய சொற்கள் இணைத்துப் பதிப்பித்த அருமையான கலைக் கருவூலம். அறபுக் கல்லூரி ஆசிரியர்கள் – மாணவர்கள் – ஆலிம் பெருமக்கள் அனைவரது கைகளிலும் தவழ வேண்டிய அற்புதமான அகராதி. இரண்டு பாகங்கள் விலை ரூ.500 (கொரியர் செலவு தனி)




தொடர்புக்கு : 98940 94490
99445 76165

Owned by Awniyya World Peace Trust Published by
J. Mohamed Rahmathulla B.A.B.Com.,Fakira Complex, 74, Palani Road,
Dindigul - 624001.Printer : R.VijayalakshmiPrinted at
Sri Agni Amman Printers,52, Palani Road, Near Sakthi Theatre, Dindigul - 624001.
Editor S. Hussain Muhammad Manbayee